Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

Rukmani ammal

ஓம்.

தத். ஸத்.

சற்குருவே துணை.

ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமிகள்

திருவடிகளே சரணம்

சு. மு. அண்ணாமலைசெட்டியார்

வேதாந்த சித்தாந்த சமரஸ

அத்வைத புஸ்தகசாலை.

நெம்பர்..56....

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமிகளின்

ஜெனன கால நவக்கோள்களின் அதிரகசிய பல ஸகித

ஸ்ரீபராசக்தி

காகபுஜண்ட ஸம்வாதம்

அத்வைத த்வைத பாகம்.

இஃது

திருச்சிராப்பள்ளி:
ஜெநம் அண்டு கோ., டாட்ஸன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

1924

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உபோத்காதம்.

ஸ்ஹ !

தெய்வீகமாகிய பாரத தேவியின் அருந்தவப்
புத்திரர்களே!

தமிழ்த்தெய்வம் உலாவும் நாட்டினர்களே!

யாதொருவித சிருஷ்டியு மில்லாத காலத்தில்,
மனம் வாக்கு இவைகளால் இன்னபடியென்று நினைக்கவும் சொல்லவும் முடியாத தன்மையுள்ள காலத்தில்,
ஸகல பாவனைகளு மில்லாத காலத்தில்,
உபசாந்தமயமே உள்ளபடி விளங்குகின்ற காலத்தில்,
பஞ்சமூர்த்திகளும் திருமூர்த்திகளும் அவர்களது திவ்ய சக்திகளும் பரிவாரங்களும் இல்லாத காலத்தில்,
ஞானானந்தம் பிரகாசிக்கின்ற காலத்தில்,
ஸர்வ ஸத்தாமாத்திரமே யுள்ள காலத்தில்,
சச்சிதானந்த வடிவமே தானாய் நின்ற காலத்தில்,
வெறும் வெட்டவெளி மயமாயிருந்த காலத்தில்,
இன்னபடியென்று கூறமுடியாத காலத்தில்,
சகல மாயாசக்திகளுக்கும் வேலையில்லாத காலத்தில்;
ஜெகத்காரண ரகித ஸர்வாதீத அமல அகண்ட வடிவப் பரம்பொருள் மாத்திரமிருந்தது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அது யாதொரு காரணமுமில்லாமல் அனாதி காரணத்தை மட்டுங்கொண்டு, சலன சக்தியைச் சிருஷ்டித்தது. அதிலிருந்து மூலப்பிரகிருதியும், அதில் மாயையும், அதில் முக்குணங்களும், ஜெகத்காரண ஈசுவரனும், அதில் பஞ்சமூர்த்திகள், திரிமூர்த்திகள், அவித்தை, உலகம், பஞ்சபூதம், அதன் சாதனங்கள் உண்டாயின.

இன்னபடியென்று கண்டுபிடித்து அறியமுடியாத ஜீவகோடிகளின் அனாதி பிராரத்த கருமானுஸாரமாகப் பஞ்சபூத அம்சமான சூக்ஷ்ம ஸ்தூல சரீரங்களை அமைத்து, அவரவர்கள் பாப புண்ணியங்களுக்குத் தக்கவாறு சுக துக்க பலன்களைக் கொடுப்பதற்காக ஈசுவரன் தனது ஹம்ஸசக்தியினால் பிரஹ்மஞான வடிவ ஏதேச்சாதிகார ஒன்பது கிரகங்களையும் சிருஷ்டிசெய்தார்.

சூரியபகவான், சந்திரதேவன், செவ்வாய் மன்னவன், புத மஹரிஷி, தெய்வ குரு, சுக்கிராசாரியார், சனீசுவரன், இராகு தேவதை, கேது ஸர்ப்பம்,

இந்த ஒன்பதுபேர்களும், ஜெகதீசுவரனது ஆக்ஞையால் உண்டானவர்கள். பரமாத்ம சொரூபத்தை உள்ளவாறு அறிந்தவர்கள். யாதொரு இச்சையுமில்லாதவர்கள். எவ்விதமான பக்ஷபாதமுமில்லாமல் அவரவர்கள் இருவினைக்கேற்ற பலாபலன்களைக் கொடுத்துக்கொண்டு நாளது பரியந்தம் வந்துகொண்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

டிருக்கின்றனர். இந்த ஒன்பது மஹான்களைப் பற்றிக் கூறப்படுகிற விஸ்தாரமான கிரந்தம் ஜோதிஷ சாஸ்திரம். அந்த சாஸ்திரத்தில் ஆச்சரியமான திரிகால ஞானம், ஜென்மாந்தரம், எதிர்கால ஜன்மம் இவைகளை உள்ளவாறு கூறப்பட்டிருக்கிறது. இந்த சாஸ்திரமானது நமது பாரத கண்டத்தில், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்துஸ்தான், ஒட்டிரம், மஹாராஷ்டிரம், குஜராத்தி, பங்காளி முதலிய பல பாஷைகளில் அடைந்து கிடக்கின்றன.

இந்த பாஷைகளைக் காட்டிலும் பொது பாஷையாகிய ஸமஸ்க்ருதத்தில் ஜோதிஷ நூற்கள் அபரிமிதமாகப் பொருந்தியுள்ளது. பல யுகங்களுக்குமுன், திருமூர்த்திகளின் ஸன்னிதானத்திலும், ஸ்ரீ உமாதேவியார் முன்னிலையிலும், அநேக பிரஹ்ம ரிஷிகள், இராஜ ரிஷிகள், மஹரிஷிகள், முனிவர்கள் எல்லோரும் உலகத்திற் பிறக்கக்கூடிய சகல ஜீவராசிகளுக்கும் அவரவர்கள் ஜனனகால நவக்கோள்களின் நிர்மாண நிலைமையைப்பற்றியும், பல ஜென்மாந்தர, முன் ஜென்மாந்தர விஷயங்களையும், இப்போதிருக்கிற ஜெனனகால விபரம், நவக்கோள்களின் உறுதியான ஸ்தான பெலங்கள், இந்த ஜென்ம வருஷம், மாதம், நாள், திதி, நக்ஷத்திரம், நாழிகை, விநாடி இவைகளையும், ஆயுளின் முடிவுகால விபரத்தையும், அதற்கிடையில் நடக்கவேண்டிய சகலமான விஷயங்களையும், மறுஜென்மத்தையும், இனிமேல் ஜன்மமில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அது யாதொரு காரணமுமில்லாமல் அனுதி காரணத்தை மட்டுங்கொண்டு, சலன சக்தியைச் சிருஷ்டித்தது. அதிலிருந்து மூலப்பிரகிருதியும், அதில் மாயையும், அதில் முக்குணங்களும், ஜெகத்காரண ஈசுவரனும், அதில் பஞ்சமூர்த்திகள், திரிமூர்த்திகள், அவித்தை, உலகம், பஞ்சபூதம், அதன் சாதனங்கள் உண்டாயின.

இன்னபடியென்று கண்டுபிடித்து அறியமுடியாத ஜீவகோடிகளின் அனுதி பிராரத்த கருமானுஸாரமாகப் பஞ்சபூத அம்சமான சூக்ஷ்ம ஸ்தூல சரீரங்களை அமைத்து, அவரவர்கள் பாப புண்ணியங்களுக்குத் தக்கவாறு சுக துக்க பலன்களைக் கொடுப்பதற்காக ஈசுவரன் தனது ஹம்ஸசக்தியினால் பிரஹ்மஞான வடிவ ஏதேச்சாதிகார ஒன்பது கிரகங்களையும் சிருஷ்டிசெய்தார்.

சூரியபகவான், சந்திரதேவன், செவ்வாய் மன்னவன், புத மஹரிஷி, தெய்வ குரு, சுக்கிராசாரியார், சனீசுவரன், இராகு தேவதை, கேது ஸர்ப்பம்,

இந்த ஒன்பதுபேர்களும், ஜெகதீசுவரனது ஆக்ஞையால் உண்டானவர்கள். பரமாத்ம சொரூபத்தை உள்ளவாறு அறிந்தவர்கள். யாதொரு இச்சையுமில்லாதவர்கள். எவ்விதமான பக்ஷபாதமுமில்லாமல் அவரவர்கள் இருவினைக்கேற்ற பலாபலன்களைக் கொடுத்துக்கொண்டு நாளது பரியந்தம் வந்துகொண்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

டிருக்கின்றனர். இந்த ஒன்பது மஹான்களைப் பற்றிக் கூறப்படுகிற விஸ்தாரமான கிரந்தம் ஜோதிஷ சாஸ்திரம். அந்த சாஸ்திரத்தில் ஆச்சரியமான திரிகால ஞானம், ஜென்மாந்தரம், எதிர்கால ஜன்மம் இவைகளை உள்ளவாறு கூறப்பட்டிருக்கிறது. இந்த சாஸ்திரமானது நமது பாரத கண்டத்தில், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்துஸ்தான், ஒட்டிரம், மஹாராஷ்டிரம், குஜராத்தி, பங்காளி முதலிய பல பாஷைகளில் அடைந்து கிடக்கின்றன.

இந்த பாஷைகளைக் காட்டிலும் பொது பாஷையாகிய ஸமஸ்க்ருதத்தில் ஜோதிஷ நூற்கள் அபரிமிதமாகப் பொருந்தியுள்ளது. பல யுகங்களுக்குமுன், திருமூர்த்திகளின் ஸன்னிதானத்திலும், ஸ்ரீ உமா தேவியார் முன்னிலையிலும், அநேக பிரஹ்ம ரிஷிகள், இராஜ ரிஷிகள், மஹரிஷிகள், முனிவர்கள் எல்லோரும் உலகத்திற் பிறக்கக்கூடிய சகல ஜீவராசிகளுக்கும் அவரவர்கள் ஜனனகால நவக்கோள்களின் நிர்மாண நிலைமையைப்பற்றியும், பல ஜென்மாந்தர, முன் ஜென்மாந்தர விஷயங்களையும், இப்போதிருக்கிற ஜெனனகால விபரம், நவக்கோள்களின் உறுதி பாவ ஸ்தான பெலங்கள், இந்த ஜென்ம வருஷம், மாதம், நாள், திதி, நக்ஷத்திரம், நாழிகை, விநாடி இவைகளையும், ஆயுளின் முடிவுகால விபரத்தையும், அதற்கிடையில் நடக்கவேண்டிய சகலமான விஷயங்களையும், மறுஜென்மத்தையும், இனிமேல் ஜன்மமில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ளாத தன்மையையும், விஸ்தாரமாக ஸம்ஸ்கிருத பாஷையில் திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார்கள்.

இது இப்படியிருக்க,

கலியுகம் 4100-வது வருஷத்தில் மதுரைமா நகரத்தை அரசாக்ஷி செய்துவந்த அரசர்களில் ஒருவனை அதிவீரராமபாண்டியன் பல பிரபலமான ஜோதிடர்களின் உதவியைக்கொண்டு மஹரிஷிகளால் ஒவ்வொரு ஜீவர்களின் பலாபலன்களைக் கூறியிருக்கும் அளவிறந்த ஸம்ஸ்கிருத சாஸ்திரங்களை ஆராய்ச்சிசெய்து அதிலுள்ள அபாரமான ஆச்சரியங்களைக் கண்டு, நமது தமிழ் நாட்டினருக்கு உபகாரமாகத் தமிழ்ப் பாஷையில் செய்யுள் வடிவமாகச்செய்து ஏட்டுப் பிரதிகளில் வரைந்து வைத்தான்.

சிலகாலங்களுக்குப்பின் சோழ அரசர்களால் தங்களது தஞ்சைமா நகரத்தின் நடுவிலமைந்திருக்கப்பட்ட அரண்கள் சூழ்ந்த, மாளிகையில் ஸரஸ்வதி மஹால் என்ற பெரிய சாஸ்திரசாலை ஒன்று ஏற்பாடுசெய்து உலகத்திலுள்ள பல சாஸ்திரங்களையும் பல பாஷைகளில் சேகரித்து வைத்தார்கள். அதில் மேற்கூறிய மஹரிஷிகளால் அருளப்பட்ட ஜோதிஷ சாஸ்திரங்களையும் அதிமாகச் சேர்த்து வைத்திருந்தார்கள். அவ்வாறு சேகரித்துவைத்த அரசர்களில் பேர்போனவன் சரபோஜி மஹாராஜன் என்று தெரிகிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மேற்கூறிய ஸரஸ்வதி மஹாலிலுள்ள மஹரிஷி களின் சாஸ்திரங்களில்,

ஸ்ரீ விலக்ஷணனந்த ஸ்வாமிஜீ அவர்களின் ஜெனன கால நவக்கிரக நிலைமையையும், ஜெனித்த வருஷம், மாதம், நாள், நக்ஷத்திரம், திதி, நாழிகை, விநாடி இவைகளையுங் கொண்டு தக்க ஜோதிடர்கள் மூலமாய் ஆராய்ந்து பார்த்ததில், நாளது ருத்ரோற் காரிஞு மார்கழிமீ 25உ புதன்கிழமை மூன்று வது ஜாமத்தில் ஸ்வாமிகள் விஷயமாகக் கைலாஸ பருவதத்தில் காக புஜண்ட மஹரிஷி உமாதேவி யாருடன் சம்வாதம்செய்த சாஸ்திரம் அகப்பட்டது.

அதிலுள்ள

ஸ்வாமிகள் சம்பந்தமான முக்கிய குறிப்புகள்.

முன் ஜென்மம், முன் பிறப்பில் விட்டகுறையைப் பற்றிய விபரம். பூர்வாந்தர ஜாலமாயையை அகற் றல். முன்ஜென்ம ஞானப்பியாஸம், இந்த ஜென்ம தேசம், வம்ச வரலாறு, பிறப்பு, பாலலீலைகள், துறவு பூண்டகாலம், தேசசஞ்சாரம், பலவித வெற்றிகள், மரக்கலப் பிரயாணம், சமுத்திர யாத்திரை, ஞான னுஷ்டான போதனைகள். போன விஷயங்கள், இனி வருகிற காரியங்கள், இனிச் செய்யவேண்டியவைகள், இடையிலுண்டான தடைகள் உதாரகுணங்கள், மலை வாசம், உண்மையான மதப்பிரவேசம், யோகா ரூடத் தன்மை, அற்புதமான சித்திகள் வருங்காலம்,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சித்தாதிகள் மார்க்கத்திற் புகுந்து வருதல், அதன் காலம், ஞான பக்குவம், மறைப்பின்றி எல்லாம் தெரிகிற காலம், உலக உபகாரச் சிந்தனை, அசையாத ஞானபோதனை, அனுபவானந்த நிஷ்டை, காட்டின் வாசம், உலக ராஜாக்களை லக்ஷியஞ் செய்யாத தன்மை, பிற்கால தேகப்போக்கு, ஆகாய கமனம் வருகிற காலம், பரகாயப் பிரவேசம், ஸ்தூல சரீரம் ஆயிரத்தி எட்டு மாற்றுத் தங்கமயமாகிற காலமும் விபரமும், அன்னியமத வெற்றிகள், சிஷ்யக் கூட்டங்கள், கடைசிவரையுள்ள நிலைமை, மோக்ஷ உண்மை இவைகளைப்பற்றி யாதொரு சந்தேகமுமில்லாமல் இந்த நூலிற் கூறப்பட்டிருக்கிறது.

சகல அனுபவங்களுக்கும் பொருத்தமாகவேயிருக்கிறது. இது செய்யுள் வடிவமாக இருக்கிறபடியால் எல்லோரும் தெரிந்துகொள்ளும் பொருட்டு பின்னால் வசன ரூபமாய்ச் செய்யப்பட்டிருக்கிறது.

ஏட்டுப் பிரதியில் எந்தவிதமாக இருந்ததோ அதை அந்தவிதமாவே கொஞ்சமேனும் மாறுபாடின்றி எழுதியிருக்கிறது. சில கவிகள் சீர் தளை இவைகள் பொருந்தமாயில்லை. சிலவைகள் மூன்று சீராக இருக்கின்றன. அவைகளையும் அவ்வாறே எழுதப்பட்டிருக்கிறது.

முன் ஜென்ம விட்டகுறைத் தன்மையையும், பேரின்ப ஞானபாகத்தைப் பற்றியே அதிகமாக்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கூறுகிற முறைமையும், நிலத்தில் இனிப்பிறவாத தன்மையையும், உலக உபகார தேச நன்மையின் காரணத்தையும், அற்புதமான பல காரியங்களையும், ஸ்வாமிகளின் இந்த சாஸ்திரத்தினால் தெரிகிறபடியினாலும், அவ்வப்போது நடக்கக்கூடிய விஷயங்களை எல்லா அன்பர்களும் அறிந்துகொள்ளும் பொருட்டும், ஸ்வாமிகளது அந்தரங்கக் கூட்டத்தார்களின் உத்தேசமாய் அச்சிடப்பட்டது.

இப்படிக்கு,
ஸ்வாமிகளின் அந்தரங்கக் கூட்டத்தார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ விலக்ஷணானந்தஸ்வாமிஜீ அவர்களின்

ஜெனனகால நவக்கோள்கள் நின்ற நிலை

ரா		குரு	
சுக் சந்	இராசிச் சக்கரம்		
ல			
சூரி புத	செவ்	சனி	கே

விஜய௵ மார்கழி௴ 29உ குருவாரம் சதய நக்ஷத்திரம், சதுர்த்தி, 4 நாழிகை, 28 விநாடி, பூர்வபக்ஷம், சாத்துவீகவேளை, பதிபத்திரவா கரணம், வியந்நாம யோகம், புருஷகாலம், தெய்வ சங்கல்பம், இராகு திசையில் கெர்ப்பச்செல் போக மீதம் வருஷம் 8, மாதம் 5, நாள் 22.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ விவேகானந்தஸ்வாமிஜீ.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ விவேகாநந்தஸ்வாமிஜீ அவர்களின்

[illegible]

ரா		குரு	
சந் சுக்			
ல	இராசி சக்கரம்		
சூரி புத	செவ்	சனி	கே

ஸ்ரீமுக [illegible] மார்கழி மீ 29ஆம் [illegible] வாரம் [illegible]
தி[illegible], [illegible]. 4 நாழிகை, 28 [illegible] நாடி, பூர்வபக்ஷம்.
ச[illegible] [illegible], [illegible] கர்ணம். [illegible]
யோகம். [illegible], [illegible], இராகு
தி[illegible] [illegible] [illegible] வருஷம் 8.
மாதம் 5. நாள் 22.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



ஸ்ரீ விலக்ஷணானந்தஸ்வாமிஜீ.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ உமாதேவி காக புஜண்ட சம்வாதம்

மஹா கைலாஸ பருவத சிகரத்தில் ஸ்ரீ பரமேஸ்வரி ஸன்னிதானத்தில் மஹா தபசிரேஷ்ட மஹரிஷியாகிய காகபுஜண்டர் திருவாய்மலர்ந்தருளியது.

அத்வைத பாகம்.

1

சொல்லரியதானமே ஆதாரமேருவே
　　ஸ்ரீமதி கண்டவிடமே
சுகிர்த குணமையமே மேலான வடிவமே
　　சோதியே கமல அகமே.
எல்லையில் லாதமெய்ஞ்ஞான வீட்டிடையிலே
　　இசைந்து நடமாடுகின்ற
இன்பமயகொண்டலே சத்துசித்தானந்த
　　மென்னும் வெளியான ஒளியே.
அல்லுபகலற்ற தாய்த்துய்ய வாகாயமே
　　அலையிலாது பெரிய மடுவே
அனந்தவாரியே தேசோமயானந்த
　　அமலமிகு ஜோதி வாழ்வே.
சொல்லாத சின்மயச் சிவசத்தியம்மையே
　　சோமகலை யமிர்த ரசமே
துரியாதீத ங்கடந்தப்பாலும் மேல்மனோ
　　துலங்கிய ஆதி உமையே.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

2

என்றுமெய்த் தவத்தின்சாகம்
இணையடி பணிந்துபோற்றி
நன்றெனக் கடைக்கண் ணோக்கி
நற்றவ மிகுந்த பாலா
இன்றொரு புனிதன் காதை
இசைப்பையே காலம் நேரம்
நின்றது விஜயா நாளில்
நிகழுமீர்பத் தொன்பானாள்.

3

பொன்றிடாக் குருநாள் பூர்வம்
பொருந்திய சதயநாளில்
பானுவி னுதயந்தொட்டுப்
பாலகனுதிக்குமட்டுந்
தான்வருங் கடிகை நாலும்
சப்த மூன்றேழு நாடி
ஆனதின் பலனை யோது
அப்பனை யென்னக்காகம்.

4

ஞானமாமணியே யின்னோன்
நல்லவன் புனிதன் புண்யன்
போன மேபிச்சையுள்ளான்
முனிவனாய் விடுவனாட்டில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

3

தானமே யிவற்குயில்லை
தத்துவ யோகி யென்ன
யீனமா முலகபோக
மிசைந்திடா னிதுவுமன்றி.

5

விட்டகுறையா லுதிக்கு மேலோனாவான்
வினயபத்தி சாதனையே நிஷ்டையாதி
மட்டுமல்ல யெதிர்வேத வயிரியாவான்
மானிலத்தோர்க்குபகாரி குடும்பபாரந்
தொட்ட கற்றிக்கமல இலைச்சலம் போலாவான்
றொடர்மனமும் பற்றற்ற நோக்கமாகி
எட்டினமட்டுங் கலந்திற்போக்குமாதி
இமாசேதுகன்னி கிருஷ்ண எல்லைபார்வை.

6

மட்டுமல்லபோத கனுப்புவி யோர்மெச்சு
மதியுடையோ னிவனுகு மந்தக்காலந்
திட்டமது திசைபாகம் விரித்துக்கூறும்
செயல்கேளு முன்ஜென்மம் நந்திசொல்வான்
இட்டசெயலிது ஜென்மம் பாண்டிநாட்டு
எல்லையிலே ஒருபதியே அதுசிற்றாறு
தொட்டவிடங்கானு றங்கூவமுண்டு
துயர்மனத்தை யடக்காதோன்வா சமாகும்.

7

பேருளட்டெழுந் தாகுந்தென் னேர்வீதி
பிறப் புமனை மாதுலரின்மனை கீழ்வாயல்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பாருமறை விண்டுமத மினிமேலாகப்
பாடுவேன் காரகமே பிதுரின் பாகம்
சூரியபிர்க்கேபோ சுஷம்பாலோடானுன்
தொண்டுமனேயிற்கேது பொன்னன் பார்வை
பார் தந்தைகாரகனைச் சுன்னன் பார்வைப்
பான்மையினுல் பிதுர் துணைகள் நாலேயாகும்

8

மாரக நாளிரேகம் தந்தைசாவு
மந்தன் மறையோனில்லக் கோணம்போம்
சீர்சேம சமவாசிப்பத்தி பூசை [நாள்
தெய்வகலம் அரியாதி சேர்க்கையாளன்
பேர் ஐந்து எழுத்தாகும் மற்றக்காதை
பேசுமேதி சைபாரு அன்னபாகம்
பாகமது மதிரெண்டில் சுங்கனேடு
பாயவே மாதுர் தானுதி லாபம்.

9

ஆகவே தானமதைக் காரிபார்வை
ஆனதானுதிபனைப் பொன்னன் பார்வை
ஆகவே தாய் துணைகளந் தேயாகி
அந்திய நாளோரீ ரேயவள் சாக்காடு
காகனரிக் கோணத்தில் வருங்காலாகும்
கன்னி நல்ல அகட்டுடையாளி வனையினும்
பாகத்தால் பாக்கியவதி ஜென்மலாபம்
படைந்தவளாம் செயல் திசைபாரிவனுக்
[காயுள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

10

பாகமது சனிபத்தில் எட்டாம்வீட்டோன்
பனி ரெண்டில்மாலெயுடு பாவிநிற்க
ஆயுள்காரக னுமுச்சமாவ தால்தேகம்பில்லா
போய்விடுமிந் தஜென்மம்
போய்மறுஜென்மம் ஜென்மம்
ஞாயமேதேகமுத்தி நாடுவான் அதுகைகூடும்.

11

சேய்வகை பஞ்சமத்தில்
தேசிகன் அவ்வில் லோனீர்
தாய்மதி யுடனேசேரத்
தொல்மனை பதிசேய்பார்வை
ஆயதாலிது மட்டோர்பெண்
ணுவது நிலையாமந்த
ஞாயத் தைத்திசையிற்பாரு
நாட்டிலே யிவனெடுத்த

12

காயமே பலபேருக்குக்
கண்ணியமாக்குந் தன்மை
தன்மையெத்தலத்தும் போக்கு
சாத்திரம்பல ஆராய்ச்சி
நன்மையே அவையிலேறி
நற்பொருள் புகட்டும் மேலோன்
தின்மையில்லா மனத்தன்
தேசத்தின் தொண்டுக்காரன்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

13

இன்னவனாலே பல்பேர்க்
இன்பமுண்டாகுந்தானே
தானிது சுருக் கமாசச்
சாற்றினேமிவனின் பேரு
சீனிவாசன் தானாகும்
திருப்பெயர் மற்றொன்றாண்டு
டேன் மையானந்தனாகும்
விவேகனே பரோபகாரி.

14

தானிவன் கல்யாணந்தான்
சதமகன் குருவிலாகும்
ஆனவாரணங்கு நல்லாள்
அவள்க்கிவன் ஜென்மலாபம்
தானுதவிடுவான் கொஞ்சம்
சாகரமயக் கமுண்டாம்
ஆம்பிதுர் திருநாமந்தான்
ஆறிரண்டத்தின் மத்தி.

15

தானர்வணையிற்றாங்கும்
சாத்வீக குணத்தன்பேரே
ஆனவாரிது சுருக்கம்
அருளுமே திசைவிரித்தே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தானிதன் சாக்ஷி பாகம்
சாதகம் தோற்றுங்காலம்
ஆனது வயது முப்பதாகவே
ஐந்து நாள் முன்.

16

தானிது நூலைப்பார்வை
சாம நாளிரண்டாஞ் சாமம்
போனபின் மூன்றாஞ்சாமம்
பொழுதிலே வெளியாம் நூலை
ஆனபேரை வரத்தில்
அருகிருந்தவர்கள் ஞானி
போனவரிருவர் நின்றார்
புகுந்தவ ரிரண்டு பேரே.

17

இந்த மகன்முன் ஜென்மக் குறையினா
லென்றியம் பினேன்முன்னாலே அதுமட்டல்ல
இந்தவூழ் எடுத்தபயன் ஜனோபகாரம்
ஏற்ற நலமடையவந்த புனிதனாகும்
சிந்து கடந்தயல் போவான் மதந்தைத் தீர்க்கம்
செய்யமுயல்வான் அலைவான் சேதியெல்லாம்
சிந்தப்பார் குருவார மகிமையாலே
பிரபஞ் சத்துக்கே குருபோல் விஜயவாண்டு.

18

அந்தவகையெடுத்த காரியங்கள்வெற்றி
யாவதுவேவில்மாதம் யார்க்குமஞ்சான்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இந்துபூர் வத்தாலேசெயல் வளர்ச்சி
இரண்டிரண்டு திதியாலே இருபக்கத்தும்
பந்தமே மற்றகதை திசையிற்பாரு
பாடினேன் பார்வதியே பாகமுற்றே
இந்தமறை வடமொழியைத் தமிழாற்செய்த
தேற்றபுகழ் அதிவீர ராமபாண்டி

19

அந்தநாள் கலிநாலாயிரத் துநூற்றுஆண் டிலாம்
இதுநிற்கத் தாயின் பேரு
பேர்பெண்டீர் பேருடனே சொல்வோமிந்தப்
பிள்ளை துணைப் பாகங்கேள் மூன்றிற் போக
பாரந்த ந்தானுதி பஞ்சமேறிப்
பாரு காரகன்றனையே பார்ப்பதானும்
சேருதுணை நாலாகுமிடைநாள் மூன்றே
செப்பலாமிப்பாகம் வாழிதானே.

20

தானிவனன்னை பேரழகேபாகுந்
தாரத்தின் பேர்தந்தைபேரை பொட்டும்
த்தானிது சுருக்கமற்ற தைத்திசையிற்
சன் மநாளோதுமே நிற்க
ஆன யிவன்பதி னெட்டுவயது தொட்டு
அகம கல்வாகியுமீண்டு ந்தானுடம்படலே
தானிதுவாகு மற்றவை யணைத்துந்
திசைவிரித்தோதுஞ் சாத்திரம் வாழியே வாழி.

அத்வைத பாகம் முற்றிற்று.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பராசக்தி காக புஜண்ட சம்வாதம்.

துவைத பாகம்.

21

தவமுடையார்க் கருள்புரியு ஞானசக்தி
 தயாபரி கயல்நயனி சர்வலோக
புவனை யே மனோன்மணியே வேதம் போற்றும்
 பூரணியே காரணியே மலைபோன் மேனை ந்
தமணியே உலகையொரு கருவிலீன் று
 தானருள் செய்யபிராமி யீசன்பாக
சிவையேமா குடிலையெனுந் திவ்யசக்தி
 சாம்பவியே சிதாகாச அமலஜோதீ.

22

சத்தியே ஒரு புனிதனிரண்டாம்பாகம்
 சாற்றவே நவக்கோளின் சாரமோது
உத்தமனே கேளொரு மனிதனுற்பம்
 உயிர்கலையே மதிசுங்கன் தனம்மீன் போகி
அத்தன் விடைகொடிமாது காரிஉச்சம்
 அறலாகூ அலிகுரு வியமேயான
இத்தகைய கிரகநிலை விஜயவாண்டு
 இரவிசிலை யிருபத்தி யொன்பான் பொன்
 நாள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

23

திங்களும் வளர்ச்சி நாலாந் திதியதிர் சதயமன்று
செங்கதிருதயந் தொட்டுச் சென்ற நாழிகை நால்
[மேலே
தங்கியவிநாடி நாலேழ் தானிதன் பலனையோது
மங்களவல்லி யிந்த மகன் முன்னாம் நல்லனுகும்.

24

முன்ஜென்மங் காஞ்சியினில் முளைத்தந்தணவர்க்
[கந்தே
முகந்தரிய கல்வி கேள்வியிலுஞ்சித்தி
பின்மடவார் மயலகற்றி நேமமாற்றிப்
பெற்ருர்களேற்காது துறவியாகி
நன்குருவின் ஆக்ஞையெனுங் குறையோடதில்
நாடிஞ ஞனுமிதில் மாசித்தன்
நன்னெறியே பால்ய முதலாகினுலும்
நாடுமே ஜெகமாயை யதற்குமேலே.

25

மேலான வழிபற்றிச் சாத்திரமாதி
விஞ்சைபல கைவல்ய விவேகனுகி
மாலான மதமறுத்து அஞ்சா நெஞ்சம்
மானிலத்தார்க் குபகாரம் பலதுபோக்கு
காலபலன் பின்னேதுஞ் செனனகாதை
கழறுவேன் சேய்கண்டம் பாண்டி நாட்டில்
பாலாக ஒருபதியில் வேதன்விண்டுப்
பாங்கினிலே அவதரிப்பான் பேரூர் யாவும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

26

பின்னிலே யோதும் பாரு
பிறக்கு நாள் திசையே ராகு
தன்னிலே கெர்ப்பச்செல் போய்த்
தானெட்டு வருடத்தோடு
பின்னிலே மாதம்பஞ்சம்
பின்னிருபானீர் நாளே
தன்னினலி புத்தியிலே செனனமாதல்
தாய்சோபம் வாதைபோக.

27

போகவேபாலரோகம் பொருந்தியேவில கிநன்மை
யாகவில் சமசீர்பெற்ருர் அீனவழி செல்வஞ்சித்தி
யோகமார் குடும்பமாகும் உதவியுப்பலது பாங்காய்ப்
பாகனின் புத்திபோகப் பாரினிக் கேதுபுத்தி.

28

புத்தியிற் சுயகதே கர்மம் பொருள் சமம் தந்தை
சித்தியே சுயத்திற்சாக்ஷி சேகரநேசபாகப் [பாடும்
பத்திய பாலாரிட்டம் பயம் கயம் நயமுமாக
வித்தார மேனிசீராம் விருத்தியே ஞானிக்கீதே.

29

இதுவினிச் சுக்கிரவூணில்
இவன்தனீ முன்பின் சித்தி
அதுவகை யேதமேகல்
அீனவழி யிவனுஞ்செல்வம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மதியென வளர்தலின்பம்
வருஞ்சுப சோபனுதிப்
பதியிலேயிவனு முன்னூழ்
பாங்கொட்டிச் செயல்களாமே.

30

ஆமிடையவ நோய்வரும் விடும்பாரு
அகநலம் பெற்றவர் வழியே
சேமமுஞ் சகடையாதிய செல்வம்
சேயிவன் மாதுலர் பானுடனுக
போம்சுக்கிர புத்தியினிச் சூரிசேரப்
பொருந்துமே தேகவெப்பம் சோபனுதி
யாம்கல்வி யேநாட்டந் துணைவளர்ச்சி
அனை தந்தை பீடைவிடல் அரிட்டமேகல்.

31

ஏக மிந்தவித மாகச்சூரிபுத்தி
இந்துவிலே சொந்தச்சோபன மேகாகூரி
யாக நலஞ்செயலாக நாளும் போக
அத்தன் வருமான மரியாலாம்சீரே
போகந்தாய்வழி யுயர்வேயாதலீதே
உடுபதிபோய்ச் சேய்புத் தியுள்ளவாரே
பாகபாலனிவன் கல்விகுவனமாகப்
பயில்வானே மாதுலர்பாலக்க விர்த்தி.

32

விருத்தியே செவ்வாய்க்கிவ்வார்
விளம்பினேம் ராகு அந்தம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பொருத்த மேபொன் தன்புத்தி
புகவைகுமிகலேன் பெற்றார்
திருத்தமே யிவன்மீதின்பம்
சீர்பெறுமாமன் பக்கம்
வருந்தமேன் காக்ஷிசோகம்
வகைபல தொடர்பே சேதி.

33

சேதியில் விதமே காலம்
செல்வதே அல்லலேது
ஏதுசேய் முன்னூழ்த் தொந்தம்
எட்டுமே மனதோர்பாலே
வேதியன் புத்திபோக
விளக்கமே சனியின் புத்தி
ஓதுவான் கல்வி விஞ்சை
உயர்தரச் செயலே திட்டம்.

34

திட்டமே தந்தை கணிதமே கவனம்
செல்வஞ் சீர்குடும்பமும் விருத்தி
இட்டவார் துணைகளாண் பெண்ணுமாக
இன்பநல் வளர்ச்சியேயாக
நட்டணை கொள்ளா மனத்தனேயாவன்
நாளிது போல்வரும் பலனாய்
விட்டிடுங்காரியினியவி புத்தி
விவேகமும் விதரணைக் குணமும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

35

வாக்கிலேமதி கவியுங் கூடிநின்ற
வகையாலுஞ் சேய்லாபங் காரி உச்சம்
தாக்கியதால் படிப்பேற்றம் தானேயாகச்
சகமாயை யூடாடும் அதுபின் பாரு
வாக்கு நலமுடைய விவன்செயல் பின்மேலாம்
மாதூர் பிதுர்க்கிவனாலே ஜென்மலாபம்
தாக்கு மன்னைவழியோகஞ் சகடையாதி
தனமரியும் பேருதவிபுதன் போம் கேதே.

36

கேதிலே கருமஞ் சொந்தங்கி லேசமேகேள் விபாதி
யிதுசேய் போக்கில் நாட்ட மென்றாலும் மாயை
[மீள்க்கும்
ஓதுநல்லாக மாதி உயர்குரு நோக்கம் பின்னே
கேதுவில் துவே சேதி கேளம்மா சுக்கிரபுத்தி.

37

புத்தியிலே ஜெகமாயை வந்துபற்றப்
போகுதம்மா யிவன்றனையே யாரென் செய்வார்
சத்தியே மணநாட்ட முயற்சி யாதல்
தாய்வழிப் பெண்ணுமவளும் நல்லமங்கை
பத்தாவாயி வன்றனையே யடையச்செய்த
பாக்கியமே அவளுக்குச் சென்மலாபம்
சித்திக்கு மணமாலை கலக்கத்தோடே
தெரிவைகையைப் பற்றுவது தியக்கமாக.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

38

ஆகவா குலத்தோடா மாலைசூட்டல்
அகலமனங் குடும்பமதிற் கவியிங்தேறிக்
காகன் பத்தாகிநின்ற காரணத்தால்
காதலிச்சை யிவனுக்குக் கவனமாகா
மோக வலைமாயை யிடைப்படுத்தி வைக்கும்
முன்ஜென்ம விட்டகுறை முன்னேநிற்கும்
போகசுக மனுபவமே மனது வேர்பால்
போயொழிக்கு மென்றாலும் விளைக்கென் [செய்வான்.

39

என்றாலுங்கமல இலைச்சலம் போலாவான்
இவன் கேள்வி நாலாய்ச்சி இதயம்வேறாய்
ஒன்றுதலை நல்லாசான் அருள்நோக் கேறும்
உயர்பதவி பின்னடைவான் பழுக் கமாதி
குன்றாத செயலாகு மனை சூலாகுங்
குடும்ப செயலிவனுக் கேன்கவன மாதல்
என்றாழி ன்புத்தியிலாம் பாரி கெர்ப்பம்
ஏற்பதுவே அயலேக இவனின் நாட்டம்.

40

நாட்டமே வெப்பமேகும்
நாடுவான் மேலாஞ்சோதி
வீட்டையே சூரிபுத்தி
விளம்பியபலனீ தாகக்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

காட்டும் பின்மதியிற்சேயாம்
கன்னியே யிவன்புற்றேது
காட்டிடான் சுற்றம் நோக்கான்
கவனமே அயலே போக்கு.

41

கருமமுஞ் சுயமா மன்னே
காலமீ தாகும் பின்னே
பொருளறி மார்க்கந் தேடி
போவதே யாகி னும்
மருவிய மாயை பற்றி
வளையுமே யிவனுக் கெண்ணம்
வரும் பெற்றூர் கிரியையாதி
வளமை செய்தகலவென்றும்.

42

காரணங்கேள் காவிரிப்பூம் பட்டினத் தான்
கருத்தொக்கவிவன் கருத்தே கவனமாதல்
காரணியே யிவன்பண்ணிர்க் கைய னுக்கும்
ஞாய மெல்லாம் பின்னுமே உலகத்தார்கள்
சீரடையவந்துதித்த மதலை யாகும்
செல்வ தயல் கேள்வி சித்தியாகி
பேரவையிலும் புகுந்து நின்று சொல்வான்
பிறமதத்தை வேறருக்கும் வயிரி யாவான்.

43

ஆவது மெல்லா மைந்திலமர்
குரு விருப்ப தாலும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தாவியே வாக்கிற் சுங்கன்
சந்திரனதனைச் சேய்நோக்
காவதா லேனுசாது
அகம்புறம் பற்றிப்பற்றிப்
போவதே மதிபின் அன்னை
பொன்றலே பூவைச் சேயும்.

44

சேய் வளர்விவர்க்கே ணிச்சை
செல்லாது செல்வான் வேறே
சேய்புத்தி அயல் நாடேற்றம்
நீமதத் தொடுக்கலான
ஞாய மேகலைத்தும் போக்கு
நாட்டையா ளாசர் பாலும்
போய் மத வெற்றிவாது
புரிவனே புனிதத் தோடும்.

45

பாரிலே இவன் லெக்ஷத் தோர்வனுவான்
• பரம நிச்சயப் பொருளினுண்மை காண்பான்
பார்மகளின் புத்தியிதாமினியே போகி
பற்றுடைய நல்லவர்கள் நேசமாதி
யாருமிவன் றனைமதிக்க அவையிலேறி
அறியமொழி யெடுத்தோதல் அண்ணல் கோபம்
சேருமதற்கிவன் அஞ்சான் காரி உச்சம்
சேர்ந்தமையால் கனிதம் வாகடமு மெய்தும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

46

எய்துமதனல்பிறர் பாலுபகாரத்தை
யேற்கானே பலநூல்கள் உலகோருக்குச்
செய்துதவல் பேரெங்கும் பரவும் பாரு
தீமொழியைக் கனவிலுமே கருதமாட்டான்
வையகத்தை உய்யவைக்கவ ருவோனுகும்
வகையிருக்க அன்னவர்க்கவளமை க்ஷேமம்
எய்திமதிப்பாம் சகலசீரும் பேரும்
ஏடவிழ்த்தாமரை யாளுமாரு வாழ்வே.

47

வாழ்வதினலிவ்னுக்கு என்ன லாபம்
மகத்தான பெருஞ் செல்வம் பேரின்பத்தே
தாழ்வா காதிப்படியே போகிபுத்தி
தாண்டவினிக்கு ருவந்தம் வயது கேளு
வாழ்வான இருபத்தினலு ஆண்டும்
மதிபஞ்சம் நாளிருப்பானீ ரேயாகும்
சூழ்வதினிக்காரி திசை சுயமே புத்தி
சொல்பலனும் மதவெற்றி அயலார் நாட்டில்.

48

நாட்டிலே யலேவு பல்வார்
ஞானவாரிதியாமின்ப
வீட்டிலுங் கவனஞ்சோதி
விருப்பமே வெகுபேர் கூடும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கூட்டமேலிருந்து பேசும்
குணமிவனடையு மார்க்கம்
காட்டிலே யாருக்கெய்தும்
நமன்புத்தி யிந்தவாரே.

49

இந்தவாரி றைவன் கோப மேற்குமே கவலையேது
புந்தியின் புத்திக்கெல்லாம் பூரணவழியைப் பேணி
இந்துவைக் குறைத்துவாங்கி இரவியிலேறச் செய்து
பந்தமாம் வாசியோகப் பழக்கமே நிஷ்டையாதி.

50

ஆதியபழக்கம் சேவை அரியதோர் ஜோதி வீட்டைப்
போதியவளவுஞ் சித்தி பொருந்தவே பற்றற்றின்பம்
நீதியாக மங்களாதி நிச்சயம் பரமார்த்தத்தே
நீதியாநிருவிகற்ப நிலையது பொருந்துங்காலம்.

51

காலமிப்படி யாமிக்கக்
கண்ணியம் கவனம் நெஞ்சம்
மேலமர்ந்திச் சையாதி
வெறுத்தயல் மதங் கண்டித்துக்
காலமே பலநூல் செய்தல்
கலைமதியமுத முண்ணல்
மேல் மதியுச்சி காணல்
வியாதியேனி வர்க்குச்சேரும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

52

சேருமோ பரம்பொருளைத் தெரிசித் தோர்க்குத்
தீவினையேன் பேரின்பக் காக்ஷி யாதல்
யேறுவான் மேற்படியே யழியாவீட்டில்
இருக்கின்ற முழுமுதலை இயக்கமாக
பாரு இவன் லெக்ஷத்தில் ஓர்வனென்று
பகர்ந்தன முன் கோடியிலே ஒருவனாகச்
சேருவதே எவர் பகையும் இவனை யாதுஞ்செய்யாது
இந்த விதம் மாலின் புத்தி.

53

ஆறுமுகன்கலை யொன்று இவனை யெய்தும்
அகத்தீசன்கலை யொன்றும் பாளொன்றுங்
கூறுபடுஞ் சக்கரத் தானம்சம் மூன்றுங்
குண்டலிபி னம்ச மொன்று கதிரோனொன்று
மாறுபடா விலக்குமியாள் நாவாளைந்து
மற்றி வனைவந்தடையும் பிறவை யெல்லாம்
கூறுவது காந்தமது சனற் குமார
குருகீதை மூன்றாறு சுலோகத் தாலே.

54

ஞானி புத்தி தனில் ஞானங் கைவல்யந்தான்
நமனுர்க்கு இவனிடத்தே யேது வேலை
தானிவனுக் கெப்பகையும் அணுகமாட்டா
தாயே நின்பேரருளை யடைந்த பேர்க்கு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

யேனவதியாவது சொல்முன்னே நானும்
இவனுக்குப் பின்ஜென்ம மிருக்குதென்று
தானறியா துளறிவிட்டேன் பொருப்பாய்க் குற்றம்
தத்துவத்தைக் கடந்தவிவன் தக்கோர் காணல்.

55

பாரி யிவள்முன் ஜென்மங் காஞ்சி தன்னில்
பதிமறையோர் குலமாகும் விண்டு மார்க்கம்
நேரிதிலே பிறந்தி வனைப்பதி யாயெய்தி
நித்தியமும் பெருமானை நினைவி லேற்றித்
தீருவது வுடம்பென்று மறு ஜென்மத்துந்
திரமாக விவன் றனையே பர்த்தாவாகத்
தேருவதே கொண்டமையா லடைந்தா ளிப்பால்
திரமானவரி புலக மடைவாடின்னாம்.

56

அயல்போக் கேயானாலுந் தந்தை தன்னை
அகமிருத்திப் பொற் கோவில் கட்டி வாழ்வான்
இயல்பாக இவனை யடுத்திருப்போ ரெல்லா
மின்ப மடைவார் நல்ல வுபதேசங்கள்
வயணமறி பஞ்சமத்தில் ஆசானிற்க
மதிகவிவாக் கேறிநிற்குங் காரணத்தால்
நயவசனம் வீரமொழி தீரநெஞ்சம்
நன்னெறிச் சொல்நூல் பலதுசெய்து விட்டல்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

57

ஈட்டுவான் சகடைபலபோக்குமாதி
இவன்செயலை அரிபிரமயீசனுலும்
காட்டுவதற்கேலாது எனக்குமாகா
கண்காக்ஷி கண்டறிவான் கவிபுத்திக்கே
பூட்டுவான் மதிரவிளையமிர் தவாழி
போய்க்குளிப்பான் பகர்வதரிதாகுந்தானே
நாட்டி லிவனடைமார்க்கம் யார்க்குக்கிட்டும்
நற்றவத்தையுடைய செயல் ஞாயம்பின்பார்.

58

தாய்தந்தை தாரமனைமக்க ளெல்லாந்
தன்னுடையவர்க்கமென்று முடலேயென்றும்
பேய்கொண்டு எண்ணுவர்கள் செப்புவார்கள்
பிரமநிலையறியவந்தபே ரேனென்றுந்
தாய்மதத்தை நிறுத்த வந்தசான் ரேனென்றுந்
தகவாகவறி யார்கள் உடலை நம்பி
மாய்கையிலே அடங்கியவரி வனைக்கண்டு
மயங்கிடுவார் திருமலை யானம்சத்தோனே.

59

மகக்காக்ஷி யாகுங்கேள்வி
மலைவனந்திரிந் தேமீண்டும்
பகருவான் பலபேருக்குப்
பாழான இடத்தை நாடிப்
புகவாப் போகநேர்மை
பொருந்துமே அரசர்க்கச்சம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இகல்படா திவ்வார்சுங்கன்
யேகவே யிரவிபுத்தி

60

புத்தியிலேமதிகுறைத்துப் பொருளைக் காணல்
போக்கு பலவிவகாரச்சிந்தையற்று
உத்தம நற்சாதனையா மொருபோதுண்டு
உள்மயங் கண்டனுபவித்து ஒளியைக்கண்டு
உத்தம நற்பொருள்வந்தா டாடும்பாரு
உமையே கேளிவன்முன் னூழ்தேடிவைத்த
வைத்தபொருள் வைத்தவ ரேயெடுப்பதான
வகையிவனுக் கேபாகுங் கண்டு கொள்வான்.

61

சித்தம் போலாம் பாருநேமமாதி
செய்துவரல் பிதுர் இறுதிசெவி யிலேற்கல்
சித்தமே கவலையடைந் துடனேமாறிச்
செல்லுவான் பந்தம் விட்டுச் சேயனுக்கு.

62

தாயேநீ யவனுக்குத் தாயேயாகிச்
சகலநலம் புகட்டுமுன்னே கையைநீட்டிச்
சேயேவா பொருள் செய்து காப்பாயம்மா
தேயத்திலிவனை யன்பாய்ப்பெற்ற வந்த
தாயவளுங் கருமத்துக் கின்றுளாகும்
சர்வமும்நீ இப்படியே சூரிபுத்தி
போய்விடவே மதிபுத்தி பலன்மேலாகும்
புவனையே யெனவாலை காகமேகேள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

63

பலனிவன் றனக்கு யேது
பகர்ந்தனை யென்னைக் காகம்
அலவிவன் பேரின்பத்தை
யடைபலன் மேலாஞ் சொன்ன
தலாது வேறில்லை பத்தில்
அரிமக னிருப்பதாலே
தலமெனு மாறுதாரந்
தாண்டியே பத்துப் பூமி.

64

பூமி சென்றங்கே மின்னூர்
பொருந்து வார்பொருந்த மாட்டான்
சாமியைக் காண்பான் மீள்வான்
சகத்திலே யார்க்குந் தோற்றான்
சோமனிவ்வாறே செல்லத்
தொடர்பலன் செந்திக்கீது
ஆம்மறைந்தரிய நிஷ்டை
யாகி மூன்றுண்டார் மாதம்.

65

மட்டும்பின் வெளியிலேறி
மாக்களுக்குப தேசித்துக்
கட்டிட மொன்று கட்டிக்
கபாடமும் பூட்டிமூடி
விட்டிடான் வாசிதன்னை
விலகுஞ்சேய் ராகுபுத்தி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

எட்டினமட்டும் போக்கு
மீஸ்வரி உந்த னேக்கம்.

66

பட்டவர்க் கேதுவேறு
பாக்கியம் வேண்டுஞ் சொல்லே
மட்டடங் காதஜோதி
மலேதனில் வாழ்வான் பாரு
கட்டுவான் தேகம்காய
கற்பமேன் பேரின்பத்தில்
எட்டிய காயகற்ப
மிருக்கையி லேதுவேறு.

67

அந்தனைன் புத்திக் கெல்லா
மரிய சாதனே யேமுற்றிப்
பந்தமில் ககனம் போதல்
பாரிலும் வருதலிவ்வார்
சொந்தமாஞ் சுயம்பு நேசஞ்
சூழ்வதே பாழ் போகாது
அந்த மாமப்பாலப்பா
லறிவதே குருபோங் காரி.

68

அந்தமே வயது கேளு
ஆறேழோ ராண்டு மாதம்
ஐந்துடனிருபா னீர்நாள்
ஆவதே யதன்மேற் புந்தி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சொந்தவுண்கால மெல்லாஞ்
சுடர்மலே யெல்லேகாணல்
எந்தனுலினியே சொல்ல
ஏலாது யிவ்வார் காலம்.

69

காலமே சொர்க்கம் நேராம்
கபாடமுந் திறந்து வைப்பான்
மேலுணவேது வாசி
விழுங்கி யேவி சாலமாகிக்
காலமே சகஸ்திரத் தெட்டுக்
கனக மாமயமாந் தேகம்
மால்விட ஞானி புத்தி
வழியிது வென்று கண்டே.

70

நன்றிது தீதீ தென்ற
ஞாயமு மப்போ தேது
குன்றிடா வுடுக் கூட்டத்தின்
குளிர்மதி யென்ன வாகும்
நன்றிதேசிகிப் போய்ச் சங்கன்
நாளிலே வாய்ப்பே சேது
என்றவார் காலந் தள்ளி
எரிமலேச் சருகு போலாய்

71

பரத்தருகிருப்பான் மீள்வான்
பாருள்ளோர் காணமாட்டார்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வரத்துடன் சங்கன் புத்தி
மாறவேருரி சந்திரன்
திரத்துடன் தேகந்தன்னைச்
சிதைந்திடாவண்ணமாகக்
கருத்தெல்லா நின்பாலாக்கிக்
காக்ஷிகண்டானந்தித்தே.

72

பானுவுமதியும் போகப்
பார்மகன் புத்திதன்னில்
தானிவன் யார்க்கு மேலாஞ்
சமபதமடைவான் கண்டாய்
கான்மலையாவும் வாசம்
கற்பக நிழலின் வாழ்வு
தானுறுஞ் சேய்போய் ராகு
சதாசிவத்திடையேயாக.

73

ஆகவிப்படி யாங்காலம்
அதற்குமேற் பலனை யோதப்
பாகமே தெனக்குந் தோற்றுப்
பலனெல்லாமவனே நானுய்
ஏகசீருடனே தோற்றம்
இராகுபோய்க் குருவுங்காரி
பாகத்தே அசையாவாழ்வு
பற்றியே யிருப்பதாமே.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

74

சித்தர்களு முனிவர்களு மிவனைக் காண்பார்
ஜெகஜால மாயை யெலாமோடிப்போகும்
முத்தர்களு முறையாக வெகுமானிப்பார்
முன்ஜென்மவிட்டகு றைத்தவமோயிது
சத்தியமே தேவரெலாம் பின்னே சூழ்வார்
சதாசிவன்போலா யிடுவானெம்பத் தெட்டில்
புத்தியிலே மனிதனெனத் தோற்றச் செய்வான்
பூரணத்தை யறிந்தோர்கள் முறைமையாமே.

75

ஆம் எனிலங்கு மிங்கு
மகம்புறம் பற்று நீங்கித்
தாமனு பவங்க ளிதாய்ச்
சஞ்சாரம் வரத்துப் போக்கு
ஆம் புதன்திசை முடியவாக
அரவெனும் கேதா மேலே
தாமிவன் றனக்குச் சேதி
தானுரை செய்வார் யாரோ.

76

இவன்பெரும் பேரார் காண்பார்
இல்லையே யிவனுக் கேயுன்
கவனமா யாகுந் தாய்நீ
கைகொடுத் தாளும் வண்ணம்
தவம் பெற்று உதிக்கு மாந்தன்
தானிவன் கதையிவ்வாறே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சிவநிலை திரமேற்சூரி
திரிகோண மதியராசி
தவமுரு நாளாம்நிட்டை
தானிருந் துய்வதாமே.

77

புவனையே யிதிலேயானும்
புகன்றதி லெதுசந்தேகம்
தவமுனியே கேள்வேறு
சந்தேக மேதுமில்லை
இவன்புவி உய்யவந்த
இளவலாங் குமரனைப்ப
அவமில்லை யிந்தமட்டே
அருளலாமதன்மேலேது
புவனமும் வாழி வேதம்
புராண மாகமங் கள்வாழி
இவன் தவம் வாழிவாழி
இருநிலம் வாழிதானே.

78

தந்தையுடபேரு ரெங்கசாமி யாகுந்
தாய்பேருஞ் சுந்தரமே பிறப்பூருக்கு
வந்தபெயரானு மந்த பட்டியாகும்
மனைவிபெயர் ரெங்கநாயகியே யாகும்
இந்தமகன்பேர் சீனிவாசனாகும்
இன்னமொன்று விலக்ஷணனந்தமாகும்
இந்தவித மிதுமுடிவே விடைதாவம்மா
இசைந்த விந்தத்திசைபாகமினிது முற்றே.

முற்றியது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீஜெகதீஸ்வரி காகபுஜண்ட சம்வாதம்

முதற்பாகம்

வசனம்

சொல்லமுடியாத இடமே ஆதாரபருவதமே சூர்ய சந்திரர்களின் உற்பத்திஸ்தானமே ஆத்மானந்தமையமே மேலான ஸ்வரூபமே ஜோதியென்னுந்தாமரை வீடே எல்லையற்ற எதார்த்த ஞானவீட்டில் பொருந்தி நிர்த்தனமாடுகின்ற இன்பசொரூப அத்வைதமே சச்சிதானந்த வெட்டவெளிப் பிரகாசமே இரவுபகலற்ற பரிசுத்த ஆகாசமே அலையில்லாத பெரிய ஆழமானமடுவே பேச்சில்லாத ஞானவடிவ ஜெகத்பிரகாச வாழ்க்கையே துரியங் கடந்து அதற்கப்பாலும் பிரகாசிக்கின்ற ஆதிபராசக்தியே என்று இந்த விதமாக உண்மையான மஹா தபோசிரேஷ்டராகிய காகபுஜண்ட மஹரிஷியானவர் தமது ரிஷிக் கூட்டத்துடன் சுவாயம்புமனுவின் ஆதி கிரேதாயுகத்தில் மஹா கைலாஸ பருவத சிகரத்தில் கொலுவீற்றிருந்தருளிய ஸ்ரீ உமாதேவியின் இருபாத பத்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மங்களையும் வணங்கி நிற்க மாதாவானவள் தமது அருட் கடைக்கண்ணுக்கால் பார்ந்து நல்ல ஞான தபோசிரேஷ்டனுகிய குழந்தாய் இன்று முடிந்த பிறப்புள்ள ஓர் பரிசுத்த ஞானியினது திவ்ய சரித்திரத்தைச் சொல்லுவாய் அந்தப் புனிதன் பூவுலகில் ஜனித்த காலம்.

விஜயஸூ மார்கழிமீ 29உ குருவாரம் பூர்வபக்ஷம் சதுர்த்தி திதி சதய நக்ஷத்திரம் சூரியவுதயமாகி 4 நாழிகை 28 விநாடி இவைகளைக்கொண்டு இவனது சகல பிரயோஜனங்களையும் என் முன்னிலையில் உபந்யாசஞ் செய்யக்கடவாய் என்று ஜெகன்மாதாவாகிய உமாதேவியார் உத்தரவுசெய்யக் காகபுஜண்ட மஹரிஷியானவர் சொல்லத் தொடங்குகிறுர்.

ஞானப் பிரகாச தூரிய சிம்ஹாசனத்தி லமர்ந்தருளிய அம்மையே இந்தப் பரிசுத்தவான் வெகுநல்லவன் அகமும் புறமுங் களங்கமின்றியவன், பூர்வ புண்ணியம் நிறைந்தவன், பல ஜன்மாந்தர நிஷ்காமகர்ம யோகானுஷ்டான பக்திமார்க்க ஞானப்பியாஸ விட்டகுறையை முடிக்கும்பொருட்டு ஆர்ய கண்டத்தில் உற்பவிக்கக்கூடியவன், ஞானசம்பத்து, வினய சம்பத்து, ஆத்மசாதனம் இவைகள் பொருந்தியவன் பிரஹ்மநிஷ்டாபரன். இதுமட்டுமல்ல. ஆர்ய சநாதன தர்ம வைதீகமதத்திற்கு விரோதமாகிய மற்ற கெட்டமதங்களுக்கு வைரி போன்றவன். உலக ஜனங்களுக்கு இரண்டுவித உபகாரமுடையவன்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உலக குடும்பபாரத்தைச் சிறிதுகாலம் தொட்டு விலக்கிவிட்டுத் தாமரையிலைச் சலம்போலாவான். யாதொரு பற்றுமில்லாத நோக்கமுடையவனாய் எட்டின பரியந்தம் மரக்கலத்தில் செல்வான். இமயமலை சேது கன்னி கிருஷ்ணை முதலிய எல்லைகளையும் தரிசிப்பான். இவ்வளவுமாத்திரமென்று நீ நினைத்து விடாதே. பிரபஞ்சத்தோர் மெச்சும்படியான ஆசாரியத்தன்மைக்கு வருவான். இன்னவனுடைய முன் ஜென்மத்தைப்பற்றி நந்திதேவர் கூறுவார். இந்த ஜென்மத்தில் பாண்டிய தேசத்தின் தென்மேற்கு எல்லையில் மலைப்பிரதேசத்தில் எட்டெழுத்தமைந்த சிறிய நகரத்தில் தெற்குவடக்கு வீதி கிழக்குப் பார்வைகொண்ட தாய்மாமனது கிரகத்தில் ஜனிப்பான். அந்தணர்குலம் பரவாசுதேவமதம். இனிமேல் பிதாவின் விபரங்களைப்பற்றிக் கூறுகிறேன்.

பிதுர்காரகனாகிய சூரியன் லக்கினத்திற்குப் பனிரெண்டாவது வீடாகிய மோக்ஷ ஸ்தானத்தில் பாக்கியஸ்தானாதிபதியாகிய புதனோடு சம்பந்தப்பட்டிருக்கிறான். அந்தப் புதனுடைய வீடாகிய கன்னியில் கேது தங்கினான். அவனைத் தேவகுரு ஐந்தாம் பார்வையாகப் பார்த்தான். பிதுர்காரகனாகிய சூரியனை மூன்றாம் பார்வையாகச் சித்தின் வடிவமான சனீசுவரன் பார்க்கிறான். இந்த விதங்களினால் பிதாவின் சகோதரர்கள் நான்கு பெயர்கள். கடைசியில் இரண்டு மீதம். சனீசுவரன் பிரஹஸ்பதியினுடைய

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வீடாகிய தனுர்ராசிக்கு வருங்காலத்தில் பிதாவின் கிரியான காலமாகும்.

அத்தந்தை சமமானமனதும் பக்தியும் தெய்வ நோக்கமும் தானியாதிகளின் சேர்க்கையும் ஐந்தெழுத்துப் பெயரையுமுடையவன். இன்னும் இப் பிதாவினது சரித்திரம் திசாபாகத்திற் கூறுகிறேன். மாதாவின் பாகத்தைப்பற்றிக் கூறும்போது இரண்டாவது கும்பராசியில் சுக்கிரனும் சந்திரனும் வசிக்கவும் மாதுர்ஸ்தானுதிபதியாகிய செவ்வாய் லாப ஸ்தானத்திலிருக்கவும் மாதுருஸ்தானத்தை சனி பார்ப்பதாலும் மாதுருஸ்தானுதிபதியாகிய செவ்வாயைக் குருபார்ப்பதாலும் தாயின் சகோதரர்கள் ஐந்துபேராகி அந்தியகாலில் இரண்டு பேர் மீதப் படுவார்கள். சனிபகவான் சிங்கராசிக்கு வரும்போது மாதாவின் மரணமாகும். இந்த மாதா இவனைப் பெற்றதனுல் நல்ல வயிற்றையுடையவளும் பாக்கிய வதியும் ஜென்மலாபம் படைத்தவளுமாவாள். இவனது ஆயுள்பாகத்தைக் கூறும்போது ஆயுள்காரகனுகிய சனி பத்தாமிடத்திலும் எட்டாம் வீட்டிற்கு அதிபதியான சூரியன் பனிரெண்டில் புதனேடு கூடியிருப்பதாலும் சனி உச்சம் பெற்றிருப்பதாலும் இந்தச் சரீரம் நிற்கமாட்டாது. இந்த ஜென்மம் நீங்கி மறுஜென்மத்தில் ஸ்தூலம் அழியாத முத்தியைப் பெறுவான். அது பலிதமாகும். புத்திர பாகத்தை நோக்கும்போது ஐந்தாமிடத்தில் குருவும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அவ்வைந்தாம் வீட்டோனுகிய சுக்கிரன் வளர்பிறைச் சந்திரனேடு இரண்டாமிடத்திற் சேரவும், அந்த இரண்டாமிடமாகிய கும்பராசியைச் செவ்வாய் பார்க்கவும். இவ்விதக் காரணங்களால் ஓர் பெண் மகவு நிச்சயமாகும். அந்த நியாயத்தைத் திசா பாகத்தில் பார்த்துக்கொள்ளுவாய்.

உலகத்தில் இவனெடுத்த சரீரமானது பல ஜனங்களுக்குக் கண்ணியத்தை உண்டாக்கும். பல சாஸ்திர ஆராய்ச்சியும் எல்லா ஸ்தலங்களுக்கும் போவதும் பெரிய மேடைகளின்மேலேறி ஆத்ம ஞானத்தைப் போதிக்குந் தன்மையையும் பெற்றிருப்பான். தீமையின்றிய ஹிருதயத்தை உடையவன். தேசத்தின் தொண்டு செய்பவன். இவனாலே பல உலக ஜனங்களுக்கு இன்பம் உண்டாகும். இதுவரை கூறியது சுருக்கமென்று கண்டுகொள்ளவேண்டும். இவனது நாமம் ஸ்ரீநிவாஸன், மேன்மை யானந்தன் என்று மற்றொரு பெயருண்டு. ஆத்மவிவேகம் பரோபகாரம் இவைகளை உடையவனுயிருப்பான். சூரிய புத்திரன் குருவிருந்த வீட்டிற்கு வரும்போது இவனுக்கு விவாக மாகும். அந்தப் பெண் மிகுந்த நல்லவள். முன் ஜென்மத்திலும் இவனோடிருந்து ஞான மார்க்கத்திற்கு உதவி செய்தவள். அன்னவளுக்கு இவன் ஜென்மலாபம் கொஞ்சம் உதவி செய்வான். சிறிது உலக மயக்கமுண்டாகி மாறும். காவேரி கொள்ளிடம் என்ற இரண்டு புண்ணிய நதிகளின் மத்தியில் சர்ப்ப சயனத்தின்மீது யோகநித்திரை புரிந்துகொண்டிருந்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கக்கூடிய சாத்விக குணதெய்வத்தின் பெயரே பிதாவினது நாமம். இந்த ஜாதகம் உண்மை என்பதற்குச் சாக்ஷியாக இது உலகத்திற்கு வெளிவருங் காலம் இவனுக்கு முப்பது வயதாவதற்கு ஐந்துநாளைக்கு முன் புதன்கிழமை இரண்டாஞ் சாமம் முடிந்து மூன்றாவது ஜாமத்திலாம்.

இந்த ஜாதகன் முன் ஜென்மாந்தரவிட்ட குறையை முடிப்பதற்காக வந்தவனென்று முன்னாலே சொன்னோம். அதுமாத்திரமல்ல இந்த ஜென்மத்தில் உலக ஜனங்களுக்குச் சன்மார்க்கத்தைப் போதித்து மோக்ஷ நன்மையை அடைவிக்கவந்த புருஷனாகும். சமுத்திரத்தைத்தாண்டி அப்பாற் போய் வருவான். நமது ஆர்ய மதத்தை எங்கும் ஸ்தாபிக்க முயல்வான். பலதேச சஞ்சாரியாகவே இருப்பான். இவனுடைய காரியங்களெல்லாம் பின்னாலே தெரியும் பார்த்துக்கொள்ளுவாய். குருவாரத்தில் ஜெனித்த மகிமையால் உலகத்திற்குக் காரணக் குருவாவான். விஜய வருஷம் பிறந்த காரணத்தினால் எடுத்த சகல காரியங்களும் வெற்றியாகும். மார்கழி மாதம் ஜெனனமாகையினால் ஒருவருக்கும் பயப்படமாட்டான் வளர்பிறைச் சந்திரனானபடியால் செய்கைகள் விஸ்தாரமும் வளர்ச்சியுமாகும். நிதி நாலாவது சதுர்த்தியானபடியால் மனது அந்தர் முகத்திலும் பகிர்முகத்திலும் செல்லும். மற்ற விஷயங்களையெல்லாம் விபரமாகத் திசாபாகத்தில் கூறுகிறேன்.

ஹே! பரமேஸ்வரியான பார்வதீ

இத்துடன் இந்த பாகம் முற்றிற்று.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இந்த சாஸ்திரத்தைக் கலியுகம் நாலாயிரத்து நூருவது வருஷத்தில் அதிவீரராம பாண்டியனுல் சம்ஸ்கிருதத்திலிருந்து தமிழ்ப்பாஷையில் மொழி பெயர்த்தது.

இது இப்படி நிற்கச் சகோதரபாவத்தை நோக்கும் போது சகோதர ஸ்தானமாகிய மூன்ருமிடத்தில் இராகுவிருந்து அந்தஸ்தானதிபதி பஞ்சமத்திலேறி சகோதரகாரணுகிய செவ்வாயைப் பார்ப்பதாலும் சகோதரர்கள் நான்காகி மத்தியகாலத்தில் மூன்ருய் விடும். இவனது அன்னையின் நாமம் சுந்தராம்பாள். மனைவியின் பெயர் பிதாவினது நாமத்தை ஒட்டியே யிருக்கும்.

இவனது ஜென்மநாளில் இரண்டாவது பாகம் கிடைக்கும். இந்தவிதமான இந்தப் பாலகன் பதி னெட்டாவது வயது தொட்டுப் பூரணத்தை நாடித் துறவுகொள்ள இச்சிப்பான். சர்வலோக சமத்கார ஆத்மபோத அம்மையே இனிமறுநாள் வந்து மற் ருேர் காண்டம் பேசுவோம்.

இவ்வாறு முதற்பாகம் முற்றியது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இரண்டாவது பாகம்.

மறுநாள் மஹாகைலாஸ சிகரத்தில் காகபுஜண்ட மஹரிஷியானவர் உமாதேவியார் முன்பாகவந்து வணங்கிநின்று தபோசிரேஷ்டர்களுக்குக் கிருபை செய்யும் பராசக்தியே நீண்ட கண்களையுடைய அம்பிகையே சகல லோகரஞ்சிதமே மனோன்மணியே வேதங்கள் ஸ்துதிக்கின்ற பூரணவஸ்துவே காரணப் பொருளே பருவதராஜன் தவத்திலுதித்த மரகதமே சர்வவுலகங்களையும் ஒரு சங்கற்பத்திலுண்டாக்கி அருள் செய்கின்ற அம்மையே சதாசிவனது ஓர் பாகமே பரிசுத்தமான ஜோதியே சிதாகாச வடிவமே சிவத்தின் சக்தியே எனது அந்தரங்க ஆதாரமே.

இன்று ஓர் புனிதனுடைய இரண்டாவது பாகத்தை நான் கூறுவதற்கு அன்னவனது ஜெனனகால ஒன்பது கிரகத்தின் நிலைமையைச் சொல்லவேண்டுமென்று புஜண்டர் கூற அம்மையார் உத்தமமான எனது மஹரிஷியே லக்கினம் மகரம், கும்பத்தில் சுக்கிரன் சந்திரன், மீனத்தில் இராகு, இடபத்தில் குரு, கன்னியில் கேது, சனி உச்சம் செவ்வாய் ஆகூழி, தனுசில் சூரியன் புதன். பிறந்த காலம் விஜய வருஷம் மார்கழி மாதம் இருபத்தொன்பதாம் தினம் குருவாரம் சுக்கிலபக்ஷம் சவுத்தி திதி சதய நக்ஷத்திரம் உதயாதி நாழிகை நான்கு விநாடி இருபத்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கெட்டு இன்னவெனின் பலனை நன்றாய் ஆராய்ந்து கூறக்கடவாய்.

சகல மங்களங்களுக்கும் மங்களத்தைத் தருகின்ற மங்களவஸ்துவே இந்த மைந்தன் முன்ஜென்மத்தில் அதிக நல்லவன். முத்தி நகரமாகிய காஞ்சீபுரத்தில் பிராமண வர்க்கத்தில் ஜனித்து அருமையாகிய சகல சாஸ்திரங்களையும் கற்றுத்தேர்ந்து யோகாப்பியாஸம் அஷ்டமாசித்திகள் முடித்து அப்பால் மங்கையர்களது மயக்கத்தினின்று நீங்கிச் சகல நியமங்களையுமாற்றிவிட்டு மாதா பிதாக்களின் சம்மதமில்லாமல் துறவுபூண்டு ஓர் மடாபதியாகி அதையும்விட்டு இமயமலையின் கௌரி கேதாரத்தில் ஓர் ஞான குருவையடைந்து சித்திமார்க்க முக்திமார்க்க அப்பியாசங்கள்செய்து முடியப்போகுந் தருவாயில் சரீரத்தை விட்டுவிட வேண்டிவந்ததால் குருவின் ஆக்ஞையோடு விட்டகுறைச் செல்வனாக மீண்டும் அதையேநாடுவான். ஆனாலும் இந்த மார்க்கத்தில் இவனை ஒரு சித்தனென்று சொல்லவேண்டும். இந்த ஜென்மத்தில் பால்யமுதல் நல்ல மார்க்கத்திலேயே மனது சென்றாலும் பிரபஞ்ச மாயையானது கொஞ்சம் தேடி வரும் ஆனாலும் மேலான வழியைப்பற்றிப் பல சாஸ்திரங்களின் இரகசியங்களை அறிவான். பிரஹ்ம வித்தையாதி தத்துவங்கள் தெரிவான். ஆத்மானாத்ம விவேக மோக்ஷ விவேகியாவான். மயக்கங்களோடு கூடிய பலமதங்களை அஞ்சாத நெஞ்சத்தோடு கண்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

டிப்பான். உலகத்தார்க்கு உபகாரியாயிருப்பான். பல தேச சஞ்சாரங்களிலும் தனது வழியை விட மாட்டான். இந்த ஜென்மம் பாரத கண்டத்தில் பாண்டியநாட்டில் ஓர் மலைச்சார்பில் ஓரிடத்தில் ஸ்ரீமந் நாராயணன் பிரமநிச்சயப் பிராமணகுலத்தில் அவதாரம் செய்வான். இவனது பெயர் வூர் மற்ற விபரங்களையெல்லாம் பின்னே சொல்வோம். பிறக்குங்காலத்தில் இராகுதிசையில் எட்டுவருடம் ஐந்து மாதம் இருபத்திரண்டு நாள். சனி புத்தியில் ஜனனமாவான். உடனே மாதாவிற்குச் சிறிது பீடை உண்டாகும். பாலரோகமும் பீடையும் விலகிநன்மையுண்டாகப் பிதாவர்க்கத்திலும் மாதாவர்க்கத்திலும் செல்வம் சித்தியாகும். குடும்பத்திற்குச் சிவியோகமுண்டாகும். இப்படியே சனி புதன் புத்திகள் போய்விடக் கேது புத்தி வரவும் சொந்த பந்துவர்க்கத்தில் சுபகாரியங்கள் நடக்கும். புதிய பல சிநேகிதர்கள் சேருவார்கள். அதிகமான பொருள் சேரும். அற்பமான பாலாரிஷ்டமும் சிறிது பயமும் கொஞ்சநயமும் மூன்று நிறமுள்ள சரீரமுடையவனாய் ஒழுங்காக வளர்ந்துவருவான். அப்போது வயது இரண்டு வருஷம் ஏழு மாதம் இருபது நாள். அதற்கப்பால் சுக்கிர புத்தியில் மாதாவின் கெர்ப்பத்தில் சகோதரர்கள் வளர்தலும் இன்பமான சுபகாரியங்கள் செய்தலும் பாலிய அவஸ்தைகளும் பலன்களாகத் தோற்றும். இவன் முன்ஜென்மாந்தரச் செய்கைகளை ஓட்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

டியே செய்கைகள் செய்வான். இடையில் சிறிது நோய்வந்து மாறும். பிதாவினது குடும்பம் விருத்தியாகும். அம்மான் குடும்பத்தினர் இவனால் இன்பமடைவார்கள். இந்தவிதமான பலன்களோடு கூடவே சுக்கிரபுத்தி போய்விடச் சூரியபுத்தி வந்து சேரவும் ஸ்தூல சரீரத்தில் வெப்பம் சுப்சோபனங்கள் வித்தியாப்பியாஸம் சகோதர வளர்ச்சி மாதாபிதாக்களின் சந்தோஷம் இவைகள் உண்டாகும். பாலாரிஷ்டம் போய்விடும். இந்த மாதிரியே சூரியபுத்தி போய்விட வயது ஆறு வருஷம் ஆறு மாதம் பதினான்கு நாள். அப்பால் சந்திரபுத்தியில் சொந்த பந்துவர்க்கத்தில் விவாகம் நடக்கும். நல்ல பலனுண்டாகும். பிதாவிற்குத் தானியவிருத்தி அதிகமாகும். உயர்ந்த யோகமுண்டாகும். இந்தவிதமாகச் சந்திரபுத்தி போனபின் செவ்வாய் புத்தியில் அம்மான் வீட்டிலிருந்தே கவனமாக வித்தியாப்பியாஸம் செய்வான். இப்படிப் பலன்களோடு கூடவே செவ்வாய் புத்தியின் முடிவோடுகூட இராகுதிசை முடியும். அப்போது வயது வருஷம் எட்டு மாதம் ஐந்து நாள் இருபத்திரண்டு.

அப்பால் குருதிசையில் குருவின் புத்தியில் இவன் மீது பேற்றோர்களுக்குப் பிரியமும் இன்பமும் உண்டாகும். அம்மான் பக்கத்தில் சுபக்காக்ஷி உண்டாகும். சிறு துக்கம் உதயமாகும். துன்பம் உண்டாகாது. முன்ஜென்ம விட்டகுறைச் சம்மந்தமானது மெள்ளவந்து எட்டிப்பார்க்க ஆரம்பிக்கும். மனது

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உலகத்தை வெறுக்க ஆரம்பிக்கும். இப்படியே குருவின்புத்தி போய்விடும். அப்போது வயது வருஷம் பத்து மாதம் எழு நாள் பத்து.

அதற்கப்பால் சனிபுத்தியில் பலவிதமான சாஸ்திரவித்தைகளை ஓதுவான். உயர்ந்த எண்ணங்களும் செய்கைகளுமாகவே யிருக்கும். பிதாவினது குடும்பத்தில் கவனம் வைப்பான். குடும்பமும் விருத்தியாகும். சகோதரர்கள் ஆண் பெண்களுடன் இன்பமாக வளர்ந்து வருவார்கள். கொடூரமும் வெறுப்புங்கொள்ளாத மனத்தை யுடையவனாவான். இதே மாதிரி பலனாகவே சனிபுத்தி முடியப் புதன் புத்தி வந்துசேரும். அப்போதுவயது பதின்மூன்றுவருஷம் ஒருமாதம் இருபத்திரண்டு நாள். இந்தப் புதன் புத்தியில் ஆத்மவிவேக இச்சையும் விதரணையான குணங்களும் உண்டாகும். வாக்குஸ்தானத்தில் சுக்கிரனும் சந்திரனுங் கூடியிருந்து வாக்குஸ்தானாதிபதியான சனி உச்சம் பெற்றிருப்பதாலும் செவ்வாய் லாபஸ்தானத்திலிருப்பதாலும் வித்தையான்து படிப்படியாகத் தானே யேற ஆரம்பிக்கும். உலக மாயையானது மெள்ளவந்து எட்டிப்பார்க்கும் வாக்கு நலமும் பலிதமுடைய இவன் செய்கையானது பிற்காலத்தில் தோற்றும். மாதா பிதாக்களுக்கு இவனாலே ஜென்மலாபமுண்டாகும். மாதா பிதாவின் வர்க்கத்தில் நூதனமான வண்டி முதலாகிய வாஹனங்களும் செல்வமும் விருத்தியாகும். இந்தவிதப் பலன்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

களோடு கூடவே புதன்புத்திபோய்விடக் கேதுபுத்தி வந்துசேரும். அப்போது வயது பதினைந்து வருஷம் பத்துமாதம் இருபத்தெட்டு நாள். இந்தக் கேதுபுத்தியில் சொந்த வர்க்கத்தார். மரணமடைவார்கள். சாஸ்திரக் கேள்வியும் பெரியோர்களது சாவகாசமும் முண்டாகும். குடும்பத்தைவிட்டுப் போவதின் இச்சை வந்தாலும் பிராரர்த்த மாயையானது போகவிடாது தடுத்துவிடும். உயர்ந்த ஞான குருவின் நோக்கமும் யோகாப்பியாஸ பழக்கமுமுண்டாகும். இவ்விதமாகக் கேதுபுத்தி முடியச் சுக்கிரபுத்தி வந்துசேரும். அப்போது வயது பதினாறு வருஷம் பத்து மாதம் நான்கு நாள்.

ஹே. அம்மையே! இவனை இந்தப் புத்தியில் பிரபஞ்சமாயையானது வந்து பற்றப்போகிறதே அதற்கு யாரென்ன செய்யலாம்? அப்போதே விவாக நாட்டமும் அதற்கு வேண்டிய செய்கைகளும் நடக்கும். மனைவி தாய்வழிப் பெண்ணாகவும் சன்மார்க்கமுடைய மனத்தைப் பொருந்தியிருப்பாள். இவனை மணவாளனாக அடையும் பொருட்டுத் தான் முன் செய்த பாக்கியத்தால் அவளுக்கு ஜென்ம லாபமுண்டாகும். மனக் கலக்கத்தோடும் முன் ஜென்ம விட்ட குறையை நினைத்துக்கொண்டும் மனோ வியாகூலத்தோடும் மணமாலை சூட்டுவான். தெரிவை கையைப் பற்றுவான். மனதுமட்டும் விவாகத்தைவிட்டுப் பிறிந்திருக்கும். குடும்ப ஸ்தானமாகிய இரண்டா

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மிடத்தில் சுக்கிரனுஞ்சந்திரனுமிருந்து குடும்ப ஸ்தானதிபதியாகிய சனீஸ்வரன் பத்தாமிடத்திலிருந்த காரணத்தினுல் மாதர்களினிச்சையில் விருப்பமுண்டாகாது. ஆனுலும் உலக மயக்க வலேயில் அகப்படுத்த வைக்க முயற்சிகள் செய்யும். அப்படிச் செய்தாலும் முன் ஜென்மவிட்ட குறைச்செல்வமானது முன்னே நின்று தடுத்துவிடும். உலக போக சுகானுபவத்தில் மனது வேறுபட்டே நிற்கும். அடியோடு ஒழிக்கவேண்டுமென்ற எண்ணம் இவனுக்கிருந்தாலும் பூர்வ ஜென்மாந்தர பிராரத்த கருமத்திற்கு இவன் என்ன செய்வான். அப்படியிருந்தாலும் தாமரையிலே ஜலம் போலாய்விடுவான். பல வேதாந்த சாஸ்திர ஆராய்ச்சியும் கேள்வியும் தியானப் பழக்கமுங்கொண்டு குடும்பப் பற்றில்லாமல் மனம் வேருகிவிடுவான். தீவிரமாக எண்ணுவான்.

நல்ல ஞானசாரியரது அருள் நோக்கம் வந்து பொருந்தும். இனிப்பிறவாத உயர்ந்த மோக்ஷபதவியைப் பின்னுலே அடைவான். கெடாத அப்பியாசந்தை யுடையவனுவான். அக்காலத்தில் குடும்பச் செயல்கள் விருப்பமாகத் தோற்றமாட்டாது. பிராரத்தவசமாக மனேவி செர்ப்பமாகவும் இவனது மனம் குடும்பத்தைவிட்டுத் துறவுபூண நாட்டமாகவும் சரீரத்திலுள்ள சிறிது வெப்பம் போகவும், மேலான ஜோதி வீட்டை அடைய வேண்டி விசாரித்துக் கொண்டிருக்கவும் சுக்கிரபுத்தியும், சூரியபுத்தியும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

போய்விடவும் சந்திரபுத்தி வந்து சேரவும் வயது இருபது வருஷம் மூன்று மாதம் இருபத்திரண்டு நாள். அப்பால் சந்திரபுத்தியில் ஓர் பெண்மகவுதிக்கும். அதனிடத்து ஆசைகாட்டமாட்டான். சுற்றத்தார்களிடம் பற்றுவைக்க மாட்டான். இவ்னது எண்ணம் துறவுபூண்பதிலேயே பற்றியிருக்கும். அக்காலத்தில் வீட்டைவிட்டுப் போவதற்கான தீவிரமான எண்ணமிருந்தாலும் பிரஹ்மமார்க்கத்தை யடையத் தேடிப்போவதற்கு இச்சையுண்டானாலும் மாயையானதுபற்றி வளைந்துகொண்டேயிருக்கும். பெற்றோர்களுக்குச் சரம கைங்கரியம் செய்துவிட்டுத் துறவுபூண்டுகொள்ள வேண்டுமென்ற எண்ணம் காவிரிப்பூம்பட்டினத்துப் பிறந்தவனது உள்ளம்போல இவனும் எண்ணியதால் இடையில் துறவுதடைப்படுங் காரண மாயிற்று. அந்தக்காலத்தில் மாதாவினது சுத்தமான மரணம் வாய்க்கும். நேரேயிருந்து கருமம் செய்து விடுவான். நாராயணன் தங்கையாகிய உமாதேவியே இன்னோன் பன்னிரண்டு கைகளையுடைய சுப்பிரமணியனை ஒத்திருப்பான். அதனுடைய ஞாபங்களை யெல்லாம் பின்னாலே பார்த்துக் கொள்ளலாம். உலகத்திலுள்ள ஜனங்கள் நன்மையடைய வந்து பிறந்த புத்திரனுகையால் அப்போதே வீட்டை விட்டுத் துறவியாய்ப் புறப்பட்டு விடுவான்.

பல சாஸ்திரங்களின் இரகசியங்கள் பல கேள்விகள் வலுவில் வந்துசேரும். பெரிய சபைகளில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

எழுந்து நின்று ஜனங்களுக்கு பிரஹ்ம வித்தையா போதனம் செய்வான். அன்னிய மதங்களை அடியோடு வேறறுத்துவிட வேண்டுமென்ற எண்ணமுடையவன். மனித சஞ்சாரமில்லாத வனாந்தரங்களில் சில நாள் வசிப்பான். ஐந்தாமிடமாகிய ரிஷப ராசியில் பிரஹஸ்பதி சுப்ரமண்ய கிரகத்தின் பார்வை பெற்றிருப்பதாலும் இரண்டாமிடமாகிய வாக்கு ஸ்தானத்தில் சுக்கிரனும் சந்திரனுமிருந்து விருச்சிக ராசியிலிருந்து செவ்வாய் பார்ப்பதாலும் உலகத்தில் எந்தக் காரியந்தானிவனுக்காகமாட்டாது. எல்லாச் செயல்களும் நிறைவேறும். அன்னிய நாடுகளுக்குச் சென்று வருவான். இவ்விதமாகச் சந்திர புத்தி போகச் செவ்வாய் புத்தி வந்துசேரும். அப்போது வயது இருபத்தொரு வருஷம் ஏழு மாதம் இருபத்திரண்டு நாள்.

இந்தச் செவ்வாய் புத்தியில் அன்னிய தேசப் பிரவேசமும் மரக்கலத்தில் யாத்திரையும் உண்டாகும். கெட்ட மதங்களை அடக்கிவிடுவதற்கான நியாயங்கள் மதியில் உதிக்கும். நாட்டை ஆள்கின்ற அரசர்களிடஞ் சென்று மஹா பரிசுத்தத்துடன் வைதீக மதத்தைக் குறித்து வாதித்து வெற்றிபெறுவான். இவனை லக்ஷத்திலொருவனென்று கூறவேண்டும். பரமாத்ம நிச்சய யதார்த்த வஸ்துவைக் கண்டு பிடித்துவிடுவான் பல இடங்களிலும் ஜனங்கள் கூட்டங் கூட்டமாகக்கூட ஆரம்பித்துவிடுவார்கள். இவ்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விதப் பலன்களோடு கூடவே செவ்வாய் புத்தி விலக வும் இராகு புத்தி வந்துசேரும். அப்போது வயது வருஷம் இருபத்திரண்டு மாதம் ஏழு. இந்த இராகு புத்தியில் உலகத்தில் எல்லோரும் இவனை மதிப்பார் கள். நல்ல ஞானிகள் விஸ்வாஸம் உண்டாகும். சபைகளிலேறி அருமையான வாக்கியங்களை எடுத்து விஸ்தாரமாகப் பேசிவிடுவான்.

அரசாங்கத்தாரது கோபம் அச்சமயத்தில் சேரும். அதற்கிவன் அஞ்சமாட்டான். சனி உச்சமாயிருக்கிற படியால் ஜோதிட வித்தை ஆயுர்வேத வித்தைகள் வலுவிலே வந்தடையும். பிறர்பால் உபகாரத்தை ஏற்று அன்னியர்களுக்கு அதைச் சொல்லமாட் டான். பல அனுபவ சாஸ்திரங்களியற்றி உபகாரமாக ஜனங்களுக்குக் கொடுப்பான். இவனது பெயர் உலக மெங்கும்பரவிப் பெரியகீர்த்தி உண்டாகும். கெட்ட வாக்கியங்களைச் சொற்பனத்திலுங்கூட நினைக்கமாட் டான். இவன் உலகத்தை உஜ்ஜீவிக்கவைக்க வந்த புருஷன். இவனது மாதா வர்கத்தார் வளமான க்ஷேமமும் மதிப்பும் சகல செல்வமும் கீர்த்தியும் வாய்ந்திருப்பார்கள். லக்ஷ்மிதேவி மாறுமல் மாமன் வீட்டில் குடிகொண்டிருப்பாள். அப்படி அம்மான் வீட்டில் லக்ஷ்மி வாசஞ்செய்வதால் இவனுக்கு என்னலாபம் ஒன்றுமேயில்லை. இவனுக்குள்ளபெரிய செல்வமானது மகத்துவமுள்ள பேரின்பத்திலேயே பொருந்தியிருக்கும். யாதொரு தாழ்வும் வாமாட்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

டாது. இந்தவிதப் பலன்களோடு கூடவே இராகு புத்தி கழியவும் குருதிசை முடியும். அப்போது வயது இருபத்திரைறு வருஷம் ஐந்து மாதம் இருபத்திரண்டு நாள். இனிமேல் சனிதிசை.

சனி மஹாதிசையில் சனிபுத்தி.

இந்தப் புத்தியில் சொல் பலிதமும் நிஷ்டையின் பூரணத்தன்மையும் ஆரம்பமாகும். அயல் தேசஞ் சென்று மதத்தைப்பற்றிப்பேசி வெற்றிபெறுவான். அளவுகடந்துபேசுவான். தேசசஞ்சாரஞ் செய்வான். ஞான சமுத்திரமாகிய ஆனந்த மோக்ஷத்திலேயே கவனம் வைத்திருப்பான். ஜோதியை அடைய எண்ணுவான் அநேக ஜனங்கள் கூடுவார்கள். பெரிய கூட்டங்களிலிருந்து பேசுவான். இவன் அடைகிற மார்க்கம் யாருக்குக்கிடைக்கும். சகல குணங்களும் பொருந்தினவனுயிருப்பான்.

இந்தவிதமாக சனிமஹா திசையின் சனிபுத்தி போகப் புதன் புத்தி வந்துசேரும். அப்போது வயது இருபத்தேழுவருஷம் இருபத்தைந்துநாள்.

சனிமஹா திசையில் புதன் புத்தி.

இந்தப்புத்தியில் அரசாங்கத்தாரது கோபம் தீவிரமாயுண்டாகும். சிறைப்படுத்த நினைப்பார்கள். இவன் கொஞ்சமேனும் அஞ்சமாட்டான். பூரண வஸ்துவை அடைய எண்ணிச் சந்திரகலையைக் குறைத்துச் சூரியகலையில் பிராணனை ஏறச்செய்து கெம்பீரமான

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சிவராஜவாசி யோகம் செய்துவருவான். நிஷ்டை செய்வான். சமாதி அப்பியாசிப்பான். மலைகள் வனங்களுக்கு அடிக்கடி சென்று வருவான். பல க்ஷேத்திர யாத்திரைகள் செய்வான். அருமையான ஜோதிஸ்தம்பத்தைப் பற்றுவான். போதுமான மட்டில் இவைகளெல்லாம் சித்தியாகும். சில சித்திகள்வந்து பொருந்தும். விலக்கிவிடுவான். நீதிசாஸ்திரம் ஆகம சாஸ்திரம் மற்ற சகல சாஸ்திர நிச்சயங்களும் மனதிலுதிக்கும். உலக மயக்க வஸ்துக்கள் தானே வலுவில் வந்து அடிக்கடி சேரும். தள்ளிக் கொண்டேயிருப்பான். பரமார்த்த வஸ்துவினிடத்திலேயே நிருவிகற்பசமாதி நிலைமையைப் பொருந்துவான். உலகத்தார் கொண்டாடுவார்கள். பெருமையுண்டாகும். வெகு யுக்தியோடு உலக காரியங்களைச் செய்வான். உயர்ந்த அந்தரங்க ஸ்தானத்திலேறி நின்று ஆசை முதலிய உலக மயக்கங்களை யகற்றி விடுவதுடன் அன்னிய மதங்களைக் கண்டித்து அக்காலத்தில் பல அனுபவ சாஸ்திரங்களைச் செய்து ஜனங்களுக்குக் கொடுப்பான். சந்த்ரகலாரச அமிர்த பானம் பண்ணுவான். உயர்வாகிய கலாநிதியின் பீடங்காண்பான். எந்தவித வியாதிகளும் இவனை வந்து பொருந்தமாட்டாது. பரம்பொருளாகிய பிரஹ்மவஸ்துவைத் தரிசித்த பேர்களுக்கு நோய் எவ்வாறுண்டாகும். தீவினைகள் சமீபத்திலும் அணுகாது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பெரிய ஞான இன்ப அனுபவத்தையே பற்றுவான். ஞான வீட்டுப்படியில் மெல்ல ஏறுவான். அழியா வீட்டின் எல்லையில் காலைத்தூக்கி வைத்துவிடுவான். முழுமுதலின் பிரகாசத்தில் ஈடுபடுவான். ஹே, அம்பிகையே இன்னவனை லக்ஷத்திலொருவனென்று முன்னாலே கூறி விட்டேன். அப்படிக்கூறியது என் மீது தப்பிதம் கோடியிலும் ஒருவனாகவும் அதனிலும் அருமையாகவுங் கூறவேண்டும். இவனை எவ்வித விரோதமும் யாருடைய பகையும் ஒன்றுஞ் செய்ய மாட்டாது. இவனுக்கு ஆச்சரியமான வஸ்து உலகத்திலொன்றுமில்லை. இந்தப் புத்தியின் அந்திய காலத்தில் இவனிடத்தில் ஆறுமுகக்கடவுளுடைய அம்சம் ஒன்று வந்து சேரும். பொதிகைமலை வாச மஹரிஷியாகிய அகத்தீஸ்வரரது பகுதி ஒன்று வந்தடையும். ஜெகதாம்பிகையான உன்னுடைய கலை ஒன்று சேர்ந்துவிடும். சக்கரப்படையையுடைய விஷ்ணுவினது கலையானது மூன்றுவந்து பொருந்தும். பூரணஞான குண்டலியின் அம்சமானது இரண்டு பொருந்தும். சூரியபகவானது கலை ஒன்றும் லக்ஷுமி தேவி, சரஸ்வதி தேவி இவர்களது கலை ஐந்து கூறும் எமதருமராஜனது கலை அரையும் இன்னவனை வந்து சம்பந்திக்கும். கேதுபுத்தி வந்தபின் பிரகாசிக்கும். மற்ற விபரங்கள் விஸ்தாரமாகப்பார்க்க வேண்டுமானால் ஜெயமுனிவர் சூத்திரத்திலும் ஸ்காந்தபுராணம் சனற்குமாரசம்ஹிதையில் முன்னூறு ஸ்லோகத்தினாலும் கூறப்பட்டிருக்கிறது. அங்கு பார்த்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

துக்கொள்ளுவாய். இந்த விதமான பலன்களோடு கூடிய புதன்புத்தியானது மாறவும் கேதுபுத்தி வரும். அப்போது வயது முப்பது வருஷம் இரண்டு மாதம் நான்கு நாள்.

சனிமஹாதிசையில் கேதுபுத்தி.

இந்தப் புத்தியில் ஆத்மஞானம் கைவசமாகும். பற்றில்லாத நிலைமை வந்துசேரும். முன் ஜென்மாந்தரத் தோற்றங்கள் மனத்திலுதய மாகும். தென்றிசைக் கடவுளாகிய எமனுக்கு இவனிடத்தில் யாதொரு வேலையுங்கிடையாது.

யாருடைய விரோதமும் இவனை ஒன்றுஞ் செய்ய மாட்டாது. சர்வலோக தயாபரியே உன்னுடைய பெரிய அருளை அடைந்தவர்களுக்கு என்ன குற்றம் வந்து சேரும்? நீயே சொல்லக்கடவாய். இந்தப் புண்ணிய புருஷனுக்கு நானே முதலில் முன் ஜென்மஞ் சொல்லாத நிலைமையில் பின் ஜென்மம் ஒன்று உண்டென்றும் மறு ஜென்மத்தில்தான் ஞானம் முடிவுபெறுமென்றும் தெரியாமல் உளறிவிட்டேன். நானென்ன செய்வேன். தெரியாமற் செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளுவாய் சகல தத்துவங்களையுங் கடந்து நின்ற இப்பரிசுத்தவானுக்கு ஜென்மமுண்டென்று யார் சொல்லமுடியும்? தருந்த பிரஹ்மரிஷி யாகிவிடுவான். இந்த ஜென்மத்தில் இவனுக்கு வாய்த்த மனைவியானவள் முன்ஜென்மத்தில் காஞ்சிமாநகரத்தில் ஜனித்து இவனையே பார்த்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தாவாக அடைந்து இவனது ஞானமார்க்கத்திற்குத் தடைசெய்துவிட்டபடியால் இச்ஜென்மத்தில் அம் மனைவியைவிட்டு விலகக் காரணமாக முடிந்தது. முன்ஜென்மத்தில் அம்மனைவி பகவானைத் தியானித்து மறுஜென்மத்திலும் இப்பரிசுத்தவானையே பர்த்தாவாக அடையவேண்டித் தவஞ்செய்தபடியால் இந்த ஜென்மத்திலும் இவனையே புருஷனாக அடைந்தாள். இவளுக்கு இச்செனமத்தில் மோக்ஷ இச்சைகூடும். விஷ்ணுவினது வைகுந்த வுலக மடைந்துவிடுவாள். இவளுக்கு இவ்வளவு பலன் கிடைத்ததற்குக் காரணம் இந்தப்புனிதனை மணவாளனாகக்கொண்டதினலாகும். இவன் துறவு பெற்றுப் பலதேச சஞ்சாரியாய் உலக வுபகாரியாயிருந்தாலும் பிதாவை அதிவிஸ்வாஸமாக மனத்தில் வைத்திருப்பான். அதிக வெகுமானமாக எண்ணுவான். இதைத்தவிர இவனைச்சார்ந்திருக்கப்பட்ட சகலரும் இன்பமடைவார்கள். நல்ல ஞான உபதேசங்கள் பெறுவார்கள். ஐந்தாமிடத்தில் பிரஹஸ்பதியிருந்து சுக்கிர பகவானும் பூர்ண்சந்திரனும் வாக்குஸ்தானத்தில் வீற்றிருந்த காரணத்தினல் நயமும் இன்பமுமாக வசனிப்பான். வீரம்பொருந்திய மொழிகளாகவே பேசுவான். யாருக்கும் பயப்படாத தீரமனதுடையவனா யிருப்பான்.

சன்மார்க்க போதனைகளை இடைவிடாது உலகத்தார்களுக்குப் போதிப்பான். பல ஞான சாஸ்திரங்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

களை இயற்றி உலக உபகாரமாக ஜனங்களுக்குக் கொடுப்பான். வேகமான வண்டிகளில் பல இடங்களுக்குச் சென்று வருவான். இவனது பிற்காலச் செயல்களைவிஷ்ணு, பிரம்மா, சிவன் இம்மூவர்களாலுங் கூற முடியாதென்றால் என்னாற் கூறிவிட முடியுமா? அழகிய காக்ஷிகளையெல்லாம் காண்பான். பற்பல அடியார்க் கூட்டங்கள்கூட ஆரம்பிக்கும். பல க்ஷேத்திரயாத்திரை செய்வான். பல துஷ்டர்கள் விரோதிகளாய் வருவார்கள். புலியைக் கண்ட பூனையைப் போலவும், சூரியனைக் கண்ட பனியைப்போலவும் பறந்துவிடுவார்கள். இவனது காரியமே ஜெயமாகும். இது கலியுக காலத்தில் நடக்கும் காரியங்களாகும். இந்த விதமாகக் கேதுபுத்தி முடியவும் சுக்கிர புத்தி வந்துசேரும். அப்போது வயது முப்பத்தொன்று வருஷம் மூன்று மாதம் பதின்மூன்று நாள்.

சனி மஹாதிசையில் சுக்கிரபுத்தி.

இந்தப் புத்தியில் சூரிய கலையையும் சந்திர கலையையும் ஒன்றாக்கி அமிர்த கலையிற் சேர்த்து அதிலுண்டாகிற ஆனந்தத்தில் மூழ்குவான். இந்த வுலகத்தில் இவனடையப்போகிற மார்க்கம் யாருக்குங் கிடைக்காது. அதைப்பற்றி கூறுவது வெகு அருமையாக இருக்கும். நல்ல பூர்வ ஜென்மாந்தர தபோமகிமையானது இவ்விதமான செயலைச் செய்துவிட்டது. இதன் முழு விபரங்களைச் சனி திசையின் பிற்பாகத்தில் பார்த்துக்கொள்ளுவாய். முன்னுலே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இன்னவனுக்கு ஓர் பெண் மகவுண்டென்று கூறி யிருந்தோமே அந்தக் கன்னிகைக்கு இந்தப் புத்தி யில் விவாகமாகும். பெரிய மலைகள் வனங்கள் இவை களுக்குச் சென்று சிலநாளிருந்து திரும்பி வருவான். பல ஜனங்களுக்கு எதார்த்த ஆத்ம ஞானத்தைப் போதிப்பான். ஜாதி மயக்கத்தை ஒழிப்பான். வெட்டவெளியின் அந்தரங்க இடத்திற்குச் சென்று மீண்டும் ஜனங்களுக்குப் போதிப்பான். அரசாங் கத்தார்களுக்கு இவனிடத்தில் அச்சமுண்டாகும். அன்னிய நாட்டு வாகனங்கள் வந்து பொருந்தும். யாரிடமும் அமிர்தம்போல வசனிப்பான். தருமம் சத்தியம் நாலு வேதம் சுதந்தர வுணர்ச்சி சாஸ்திர ஆராய்ச்சி மோக்ஷ மார்க்கம் தபோ நிலைமை இவை களை யாவரும் ஆச்சரியப்படும்படியாக உலகத்தாருக் குப் போதிப்பான். பரிசுத்தமான மனதோடுகூடிய துறவியாகியும் அரசாங்கச் செய்கைகளோடுகூடிய காரணக் குருவாயிருப்பான். உலகத்திலுள்ள சர்வ ஜனங்களும் குருவென்று ஸ்தோத்திரம் செய்வார் கள். கூர்மையான துறவிக் கூட்டங்கள் அதிகமாக வந்து பொருந்தும். லக்ஷ்மி தேவி பிரசன்னமாய்க் கூத்தாட உலக அரசர்கள் வந்து தெரிசிப்பார்கள். சிலகாலம் வெட்டவெளி மைதானத்திலும் சிலகாலம் மலைகளிலும் சிலகாலம் பட்டணங்களிலும் வாசஞ் செய்வான். மாதா, பிதா, தாரம், மக்கள், சுற்றத் தார் இவர்களெல்லாம் இன்னவனைத் தன்னுடைய

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சொந்த வர்க்கத்தானென்றும் தங்களுக்குச் சொந்த உடம்பென்றும் விஷயந் தெரியாமல் எண்ணுவார்கள். உண்மையான பிரஹ்ம வஸ்துவை அறியவந்த புருஷனென்றும் நமது தாய் மதத்தை நிலைநிறுத்த வந்த தக்கோனென்றும் அவர்கள் அறிந்துகொள்ள மாட்டார்கள். உடலையும் உலகத்தையும் வாஸ்தவமென்று நம்பிப் பிரபஞ்ச மயக்கத்திற் கட்டுப்பட்டவர்கள் இவனைக் கண்டு மயக்கமடைவார்கள். திருவேங்கட மலையின் இறைவனது அம்சமானபடி இவன் தோற்றுவான். இந்தவிதமாக்ச் சுக்கிரபுத்தி போகவும் சூரிய புத்தி வந்துசேரும். அப்போது வயது முப்பத்துநான்குவருஷம் ஐந்துமாதம் பதின்மூன்று நாள்.

சனி மஹாதிசையில் சூரியபுத்தி.

இந்தச் சூரியபுத்தியியில் மனோசங்கற்பத்தைக் குறித்து அடக்கி அஞ்ஞானத்தை நாசஞ்செய்து பரமாத்ம வஸ்துவைத் தரிசிப்பான். தேசசஞ்சாரப் போக்குவரத்துச் செயல்களெல்லாமற்று உலகவிவகாரச் சிந்தையின்றி உத்தமமான நிஷ்டையிலிருப்பான். ஒருநாளைக்கு ஒருபோது மட்டும் பாலாகாரமுண்பான். அந்தர்முகதிருஷ்டியினால் உள்ளிருக்கும் ஆனந்தத்தை அனுபவித்து ஜோதிதெரிசனஞ் செய்வான். அப்பால் அந்தப்படியும் தாண்டி அடுத்தபடியிலேறுவான். எந்தவிதமான சுகதுக்கங்கள் வந்தாலும் அஞ்சாத நெஞ்சமுடையவனாயிருப்பான். மனத்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நிலென்னென்ன நினைக்கிருனே அவைகளையெல்லாம் அனுபவிக்குமாறு அந்த வஸ்துக்கள் சேரும். சகஸநிஷ்டை வருவதற்கு ஆரம்பிக்கும். அந்தக்காலத்தில் பிதாவினது சரீர மரணத்தைச் செவியில் வாங்குவான். உடனே மனது சிறிது கவலையடைந்து மாறிவிடும். அப்பந்தத்தை விட்டொழிப்பான். வடநாட்டு எல்லையிலுள்ள ஓர் மலையின்மீது சென்று வசிப்பான். அக்காலத்தில் பராபரவஸ்துவின் உத்தமமாகிய பிரகாசம் வந்து ஊடாடும். தோற்றித்தோற்றி மறையும். ஜெகதீஸ்வரியே இன்னுஞ்சொல்லுகிறேன் கேட்பாய். இந்தப் புண்ணிய புருஷன் முன்ஜென்மாந்தரங்களில் தேடிவைத்த ஞானப்புதையலை எந்த இடத்தில் எந்த வஸ்துவை எந்தப்புருஷன் எந்தப்படி வைத்தானே அந்தப்படியே அவனெடுத்துவிடுவதுபோல எடுத்துவிடுவான். இந்த நியாயம் இவனொருவனுக்கே பொருந்தும். சகல ஜீவர்களுக்குந் தாயாகிய நீ இந்தப் புத்திரனுக்கு மாதாவாகி உலக ஆசாரியர்கள் ஞானுசாரியர்கள் போதிப்பதற்கு முன்னேயே நீயே உனது இரண்டு கைகளையும் தாராளமாக நீட்டி ஹே! தபோமகிமையுள்ள குழந்தையே வாவென்று வாரியெடுத்துக் கார்த்துக்கொள்ளுவாயம்மா. பாண்டிய தேசத்தில் இந்தப் புத்திரனை அன்புடன் பெற்றெடுத்த மாதாவானவள் ஒரு பிரபல புண்ணிய கருமத்தின் பலனல் யீன்றவளாகுமே தவிர உண்மையில் நீயே மாதாவாகிருய். இந்தப்படியே சனிதிசையின் சூரிய

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

புத்தி போகச் சந்திரபுத்தி வந்துசேரும். அப்போது வயது முப்பத்தைந்து வருஷம் நான்கு மாதம் இருபத்தைந்து நாள்.

சனிமஹா திசையில் சந்திரபுத்தி.

ஹே பார்வதீ! இந்த சந்திரபுத்தியில் அதிகமான பலனுண்டாகும். மேல்படியில் ஏறுவான். உலக சஞ்சாரங் குறைவுபடுமென்று காகபுஜண்டர் கூறவும் அம்பாள் புஜண்டரை நோக்கி ஹே பிரஹ்மரிஷியே! இவ்வளவு தபோமகிமையுள்ள ஞானபுத்திரனாகிய இவனுக்கும் ஒரு பலனுண்டோ? ஏதேதோ சொல்லுகிறாயேயென்று கூற மஹரிஷியானவர் நான் சொல்லுவது உலக சம்பந்தமான பலன்களைப் பொருத்தல்ல. பேரின்பத்தை யடையக்கூடிய மார்க்கத்திலுள்ள பலன்களைச் சொன்னதே தவிர வேறில்லை. பத்தாமிடமாகிய துலா ராசியில் சூரியநாராயணனது குமாரனாகிய சனீசுவர பகவான் உச்சமாக வீற்றிருப்பதால் இவன் உலக சம்பந்தத்தை அடியோடு நீக்கிச் சோடச கலைகளையுந் தாண்டி ஆறுதாரங்களையுந் தள்ளித் தசவிதமான நாதபூமிகளையடைந்து அங்கு நின்றேறும்போது அங்குள்ள மாயமின்னார்கள் பிரசன்னமாகி மயக்குவார்கள். இவன் அதில் சம்பந்தப்படாமல் மேற்போவான். கடவுளைத் தெரிசிப்பான். மீண்டும் உலக நிலைமைக்கு வருவான். பிரபஞ்சத்திலே யார் கண்ணுக்குந் தோற்றமாட்டான். ஆனால் உலகத்திலேயே இருப்பான். சோமகலா ரசத்தைப்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பானம் பண்ணுவான். இந்தவிதமான பலன்களோடு கூடவே சனிதிசையின் சந்திரபுத்தி போகவும் செவ்வாய்புத்தி வரும். அப்போது வயது முப்பத்தியாறு வருஷம் பதினொரு மாதம் இருபத்தைந்துநாள்.

சனிமஹாதிசையில் செவ்வாய்புத்தி.

இந்த கெம்பீரமாகிய செவ்வாய்புத்தியில் பெரிய மலைகளுக்குச் சென்று ஜனங்கள் கண்ணுக்குத்தெரியாமல் மறைந்து மூன்று மாதம் ஆறு நாள் வரை அருமையான நிஷ்டையிலிருப்பான். அதற்குப்பின் வெளியில் வந்து உலகத்தாருக்கு விஸ்தாரமாக உபதேசம் செய்வான். தூரதேச யாத்திரை ஒரு தரம் போய் வருவான். வெளியிற்செய்யக்கூடிய தொழில்கள் ஓய்வடையும். ஒரு விஸ்தாரமாகிய மலைவனாந்தரத்தில் இருப்பு வைத்துக்கொண்டு ஞான நிஷ்டையில் வீற்றிருப்பான். காமமுதலாகிய சகல கெட்ட குணங்களையும் சமீபத்தில் வரவொட்டாமல் நாசஞ்செய்துவிட்டு பிரஹ்ம நாட்டமாகவே யிருப்பான். இரகசியமான ஓர் மலையில் பூமியின் கீழே ஏழாதாரமும் மேலே ஏழாதாரமும் மத்தியில் ஒரு ஆதாரமும் ஆகப்பதினைந்து ஆதாரங்கள் பூண்ட பஞ்ச தச கலா பீடயோக மந்திரம் என்ற பெயருடன் கருங்கல்லால் ஓர் கெட்டியான கட்டிடம் நிர்மாணித்துக் கபாடபந்தனம் செய்து அதினுள்ளிருந்து ஆவின் பாலையுண்டு பிராண வாயுவையும் மனோசலனத்தையும் நிறுத்துவான். இத்துடன் சனிதிசையின் செவ்வாய்புத்திவில

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கவும் இராகுபுத்தி வந்து சேரும். அப்போது வயது முப்பத்தெட்டு வருஷம் ஒரு மாதம் நான்கு நாள்.

சனிமஹாதிசையில் இராகுபுத்தி.

ஹே! ஜெகதீஸ்வரியே, இந்திரனுடைய பார்வை இந்தப் புத்தியிலுண்டாகும். உன்னுடைய நோக்கமும் பலமாயேறும். உனது உண்மையாகிய அருள் நோக்கம் பட்டவர்களுக்கு வேறு பாக்கியம் எதற்கு வேண்டும். நீயே சொல்லக் கடவாய். அளவு கடந்த தூரம் தேசயாத்திரை செய்து வருவான். எல்லைக் கடங்காத ஜோதி பருவத்தில் வாழ்ந்து வருவான். மீண்டும் திரும்பி வருவான். உடம்பை அழியாத படி செய்துவிடுவான். பேரின்ப சுகத்தில் எட்டியிருக்கப்பட்ட காயகற்பம் இவனுக்கு இருக்கும்போது வேறு கற்பம் தேடமாட்டான். இந்த ராகு புத்தியில் ஸ்தூல சரீரமானது வெகு அழகாகப் பிரகாசிக்கும். குராய்ப் புஷ்பத்தின் வாசனை கமழ்கின்ற குறவள்ளி தேவியினது மணவாளனாகிய ஆறுமுகக் கடவுளது அந்தரங்கக் கூட்டுறவும் அன்பும் வந்தடையும். புதிதான யோகங்களும் சித்திகளும் வந்து சேரும். இவ்விதமாகச் சனிதிசையின் இராகுபுத்தி முடியவும் குருபுத்தி வரும். அப்போது வயது நாற்பது வருஷம் பதினொரு மாதம் பத்துநாள்.

சனி மஹாதிசையில் குருபுத்தி.

இந்தக் குருபுத்தியில் அருமையாகிய யோக சாதனங்களெல்லாமுற்றி ஸ்தூல சரீரத்தோடு ஆகாயத்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

திற் சஞ்சாரஞ் செய்தல், மீண்டும் உலகத்திற்கு வருதல், சொந்தமாகிய ஆத்ம நிஷ்டை கைகூடுதல், எடுத்த காரியங்கள் கொஞ்சமேனும் பாழ்போகமாட்டாது. இந்தப் புத்தியில் இதற்கு முன்னிருந்தவைகளைக்காட்டிலும் புதிதான ரகஸ்யங்கள் வந்துசேரும். அமிர்தமதி மண்டலத்திற் சென்று அங்குள்ள அமிர்தத்தைப் பானம் பண்ணுவான். திடீரென்று சில மாற்றங்களுண்டாகும். பரம்பொருளின் யதார்த்தக் காக்ஷியில் மனது பற்றியிருக்கும். ஸ்தூல சரீரத்தின் சிலேஷ்தும பாகத்தை அறுத்துவிடுவான்.

சந்திரகலை, சூரியகலை, பூர்ணகலை இம்மூன்றுகலைகளையும் சரீரத்திலுள்ள பெரிய நாடியாகிய சுழுமுனையிலேற்றி யோகாசனத்திலிருந்துகொண்டு பௌர்ணமிதிதியன்று மட்டும் ஆகாரமுண்டு மற்ற நாட்களில் வாசியைச் சாப்பிட்டுச் சுத்த சத்துவ ஞானபோத நிஷ்டையிலிருப்பான். உடம்பிலுள்ள மலக்குற்றங்களையும் கிருமிகளையும் ஒழித்துவிடுவான். உடம்பானது கலிங்கமாத்திரை யளவு ஒடுங்கிவிடும். சரீரம் நன்குப் பிரகாசிக்கும். யாதொருவித சரீர ஆகாரமேயில்லாமல் பிரஹ்ம நிஷ்டையில் பொருந்தியிருப்பான். இந்த விஷயங்களெல்லாம் சூக்ஷ்மமானவைகள். இதுவரை கூறிவந்தது வெகு சுருக்கமானது முழுதுஞ்சொல்வது சாத்தியமாகாதது. இந்தவிதமாகச் சனிமகாதிசையின் குருபுத்தி விலகவும் சனிமஹாதிசையே முடிந்துவிடும். அப்போது வயது

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நாற்பத்துமூன்று வருஷம் ஐந்து மாதம் இருபத்திரண்டு நாள். இதோடு சனீஸ்வரனது மஹாகாலம் முடிந்தது. இனி புதமஹாதிசை ஆரம்பம்.

புதமஹாதிசையில் புதன்புத்தி.

இந்தப் புதன்புத்தியில் காலம் முழுமையும் ஜோதிமலையின் முடிவான இடத்தில் வசிப்பான். ஹே ஜெகதீஸ்வரியே! இனிமேல் என்னால் பலன் கூறுவதற்கு முடியாது. அக்காலத்தில் மோக்ஷ வீட்டின் நேராகிய ஆசாரவாசலின் கதவைப் பிண்டத்தில் திறந்துவைப்பான். அதற்குமேல் யாதொரு விதமான ஆகாரமுமில்லாமல் காற்றைப் புசித்துக் கொண்டு விசாலமாகிய காலாதீத வஸ்துவி னிடத்திலேயே பொருந்தி யிருப்பான். அப்போது ஸ்தூலசரீரம் ஆயிரத்தியெட்டு மாற்றுத் தங்கமய மாகிவிடும். அதோடு புதன்திசையின் புதன்புத்தி முடியவும் கேதுபுத்தி வந்து சேரும். அப்போது வயது நாற்பத்தைந்து வருஷம் பத்து மாதம் பத்தொன்பது நாள்.

புதன்மஹாதிசையில் கேதுபுத்தி.

இந்தப்புத்தியில் உலகத்தார்களெல்லாம் இப்படியும் ஓர் புருஷன் உலகத்திற்கு வரவேண்டியது தகுதிதானென்று பேசிக்கொள்வார்கள். அக்காலத்தில் இது நல்லது இதுகெட்டது என்ற பேதம் தோற்றமாட்டாது. கெடுதலில்லாத பல நக்ஷத்திரக் கூட்டங்களின் மத்தியிற் பிரகாசிக்கின்ற பூர்ண சந்திரனைப்போல உலகத்தில் பிரகாசிப்பான். இத்துடன்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

புதன் திசையின் கேதுபுத்தி முடியச் சுக்கிரபுத்தி வந்துசேரும். அப்போது வயது நாற்பத்தியாறு வருஷம் பத்துமாதம் பதினேரு நாள்.

புதன்மஹா திசையில் சுக்கிரபுத்தி.

இந்தச் சுக்கிரபுத்தி காலத்தில் சிறிது உலகசஞ்சாரமும் மலைவாசமுமாகவேயிருக்கும். பெரியபட்டணங்களிலும் வசித்திருப்பான். எல்லோரும் சிவ ராஜாங்க யோகியென்று போற்றுவார்கள். சமீபத்தில் பல ஜனங்கள் கூடியிருப்பார்கள். வாய்வார்த்தை அக்காலத்திலில்லை. அப்போது பெரிய அக்கினி மலையில் வீழ்ந்த சருகுபோல மனது பரமாத்மாவில் கலந்து அங்கேயேயிருப்பான். மீண்டும் திரும்பி வருவான். உலகத்திலுள்ளவர்கள் இவனைக் காணமாட்டார்கள். இவ்விதமான தன்மையோடுகூடவே புதன் திசையின் சுக்கிரபுத்தி போகவும் சூரிய சந்திரபுத்தி வரும். அப்போது வயது நாற்பத்தொன்பது வருஷம் எட்டு மாதம் பதினாறு நாள்.

புதன்மஹா திசையில் சூரியசந்திர புத்திகள்.

இந்தச் சூரியசந்திர புத்திகளில் தேகத்தை ஸ்திரமாக அழியாதவண்ணமாக ஆக்கிவிடுவான். எண்ணங்களை யெல்லாம் பரமாத்மாவினிடத்தில் சேர்த்துவிட்டு ஆனந்தத்தில் மூழ்கியிருப்பான். இப்படி புத திசையின் சூரியசந்திர புத்திகள் போகச் செவ்வாய் புத்திவரும். அப்போது வயது ஐம்பத்தொரு வருஷம் பதினேருமாதம் இருபத்திரண்டு நாள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

புதன்மஹாதிசையில் செவ்வாய்புத்தி.

இந்தச் செவ்வாய் புத்தியில் அதிகமேன்மையடைந்து வியாபகவஸ்துவினிடத்தில் நிலைத்துப் பெரிய மலைகளையே குடியிருப்பாகக்கொண்டு அருமையான யோகநிஷ்டையிலிருப்பான். வாயுவை உண்பான். மறலியைச் சமீபத்திலும் வாராதபடி ஓட்டிவிடுவான். முடிந்த பதமாகிய எல்லாவற்றிற்கும் மேலாகிய எதற்கும் உத்கிருஷ்டமான இராகத்வேஷமற்ற சமமான ஜீவன் முக்திப்பதத்தை யடைவான். கற்பக விருக்ஷத்தின் அடியிலேயே தங்கியிருப்பான். இவ்விதமாகப் புதன்திசையின் செவ்வாய்புத்திபோக இராகு புத்திவரும். அப்போது வயது ஐம்பத்திரண்டு வருஷம் பதினொருமாதம் பத்தொன்பது நாள்.

புதன்மஹாதிசையில் இராகுபுத்தி.

இந்த இராகு புத்தியில் சதாசிவ சொரூபத்திற் பொருந்தியிருப்பான். மோக்ஷ சுகத்தை அனுபவிப்பான். யாதொரு விதமான ஆகாரங்களையும் உண்ணமாட்டான். ஈசுவரனைப்போலாய் விடுவான். சித்தியின் வல்லபத்தால் திடீரென்று இருந்த இடத்தைவிட்டு மறைந்துவிடுவான். மீண்டும் தோன்றுவான். ஐந்துவித மௌனங்களையுங்கண்டு தேர்வான். தானடைந்த அனுபவத்தைச் சமீபத்திலுள்ள முக்கியமானவர்களுக்குப் போதிப்பான். தான் வந்த காரியங்களெல்லாம் இதோடு முடியவும், பூலோக காரணதுன்பங்களை யெல்லாம் விட்டுவிடவும் எண்ணி, ஓர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மலையில் சிலநாள் தங்கி வந்து பிராரத்த கரும சக்தியையும் போக்க முயற்சி செய்வான். ஹே ஜெகதாம்பிகையே! இதற்கு மேற் பலனைச் சொல்வதற்கு எனக்குத் தோன்ற வில்லையே. அப்பால் எல்லாப் பலன்களும் அவனே தானுப் ஏகவஸ்துவின் பலனாகவே தோற்றும். அக்காலத்தில் சித்தர்களும் முனிவர்களும் வலுவில் தரிசனந்தருவார்கள். பிரபஞ்ச மாயாஜாலமானது இவனை விட்டு ஓடிப்போகும். ஞானிகளும் முறையுடன் வந்து கூடுவார்கள். இவையெல்லாம் முன் ஜென்மாந்தர விட்டகுறைத் தபோபலமென்றே கண்டு கொள்ளுவாய். தேவர்கள் சூழ்ந்திருப்பார்கள். ஐம்பத்தெட்டாவது வயதில் சதாசிவன்போல் ஆய்விடுவான். எல்லோருடைய புத்திகளிலும் மனிதனென்று தோற்றும்படி செய்துவிடுவான். இந்த விதமான பலன்களோடு கூடவே புதன்திசையின் இராகுபுத்தி முடியக் குருபுக்தி, சனிபுத்தி வந்து சேரும். அப்போது வயது ஐம்பத்தைந்துவருஷம், ஆறுமாதம், எழுநாள். இந்த இரண்டு புத்தி காலங்களில் அசைபாத நிருவிகற்ப சமாதியைப் பூரணமாக அடைந்திருப்பான். சிறு சிறு கூட்டங்கள் வந்து மாறும். கொஞ்சம் பகிர்முகமும், அதிக அந்தர்முகமுமாகவே யிருக்கும். மூன்று வருஷங்களுக்கு முன்னுலேயே நூதனமாகச் செய்யப்பட்டிருக்கிற குகையில் சரீரம் அழிவு பெருதபடி இருந்து பின்யுகங்களிலும் உலகத்தார்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

களுக்கு ஆத்ம லாபத்தை யளிப்பதற்காக நிருவிகற்ப சமாதியில் தங்கியிருப்பான். இன்னவனுக்கு மறு ஜென்மமில்லை யாதலால், நந்தி காண்டம் கூறப்பட வில்லை. இந்தப் புத்திகளில் தான் செய்து முடிக்க வேண்டிய கோடி காரியங்களையும் செய்து முடித்து விட்டு இரவு பகலற்ற இடத்திலே இருப்பான்.

இவனது அறுபதாவது வயதில் விஜய வருடம் சித்திரை மாதம் சுவாதி நக்ஷத்திரம் பௌர்ணமை திதி, நடுப்பகற் காலத்தில் தனது சிஷ்யகோடிகளும் ஞானிகளுஞ் சூழ்ந்திருக்க அசைவற்ற அந்தர்முக நிஷ்டைக்குப் போய்விடுவான். இரண்டா மிடமாகிய கும்ப ராசியில் சந்திரனும் சுக்கிரனுமிருந்த காரணத்தினால் இன்னவனது மனது உலக உபகார சிந்தனையிலும், தனது அபேத நிஷ்டையிலும், நிஷ்டையிலும் கலந்தே செல்லும். இந்தப் புதன் திசை முடிய அறுபது வருஷம், ஐந்து மாதம், இருபத்திரண்டு நாள். அப்பால் கேது மஹா திசை யாகையால், அக்காலத்தில் இவனுக்கு உலகமே தெரியாது. பிரபஞ்சச் செய்தி சொல்பவர்களும் இவனிடம் பேசுபவர்களும் யாரிருக்கப் போகிறார்கள்? ஒருவருமில்லை. இன்னவன் பெறக்கூடிய மோக்ஷ லாபத்தை யார் காணப்போகிறார்கள்? இந்த ஞான புத்திரனுக்கு உன்னுடைய அருள் நோக்கம் பலமாயிருந்தபடியால், நீயே கடைசி வரை கை கொடுத்து ஆளுவதற்கு மறுக்கவில்லை. சிவ நிலையில் ஸ்திர ராசியில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சூரிய பகவான் வந்து சேரவும், திரிகோண ராசியில் சந்திரன் வந்து சேரவும், உள்ள நாளில் உலக காரியங்களை அடியோடு அகற்றி, சகல காண தத்துவாதிகளெல்லாங் கடந்து சைதன்யத்தில் கலந்து சரீரமழியாத பதவியிலிருப்பான். அப்படிப்பட்ட அரிய தவத்தைச் செய்திருக்கப்பட்ட இந்த அதிமானுஷனது சரித்திரம் இவ்வாறு என்றுற் கூறப்பட்டது.

சர்வ புவன தயாபரியே! இதுவரை நான் சொல்லி வந்ததில் ஏதாவது சந்தேஹமுண்டா? ஹே! நிஷ்டானுபூதித் தவசிரேஷ்டராகிய காகபுஜண்டமகரிஷியே! நீ இதுவரையில் சொல்லிவந்ததில் யாதொருவிதமான சந்தேகமும் தோற்றவில்லை. இன்னவன் சுப்பிரமண்யனைப்போல உலகத்தை உஜ்ஜீவிக்க வைக்க வந்தவன். இவனது ஸ்தூல சரீரப் பிதாவினது நாமம் ரெங்கசாமி அய்யங்கார், மாதாவின் பெயர் சுந்தராம்பாள், இவன் ஜனித்த நகரத்தின் பெயர் அனுமந்தபட்டி, மனைவியின் பெயர் ரெங்கநாயகி, இவனது நாமம் ஸ்ரீனிவாஸன்.

த்றவியான பின் வழங்குகிற நாமம் விலக்ஷணானந்த ஸ்வாமி. இந்த விதமாக இந்தப் புண்ணிய புருஷனது திவ்ய சரித்திரம் முடிவடைகின்றது. ஹே சர்வலோக சரண்ய ஜெகதாம்பிகையே! நான் வந்து வெகு நாழிகை ஆகிறபடியால், எனது இயற்கையான சுபாவப் பிரஹ்ம நிஷ்டைக்குப் போகவேண்டிய காலம் வந்துவிட்டது. உத்தரவு கொடுங்களென்று

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஊழி ஊழி காலமழிந்ததாலும், உலவாத உண்மைப் பெரிய ப்ரஹ்ம ரிஷியாகிய காகபுஜுண்டர் விடை பெற்றுக்கொண்டு மஹா கைலாச பருவதத்தைவிட்டு தனது ஸ்வாபாவீகமாக வசிக்கக்கூடிய ஸ்வர்ண மயமாயுள்ள மஹாமேரு கிரியின் உன்னத சிகரத்தில் அமைந்திருக்கப்பட்ட திவ்ய தேஜோன்மய சாகரானந்த அரமாண்டலீ தடாகத்தின் மத்தியில் வாய்ந்திருக்கப்பட்ட கற்பக விருக்ஷத்திற் போய்ச் சேர்ந்துவிட்டனர்.

இதோடு இவை முற்றுப்பெற்றது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மஹாவாக்கியம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ மாகேஸ்வரி நாகபுஜங்கண்ட விஸ்வாமித்திர ஸம்வாதம்.

மஹாவாக்கியம்.

1

மதியமுத வாரிதியாய் வானோர்கள் போற்றுந்
துதிமருவு மெஞ்ஞானச் சோதியாய்—மதிமவுலி
வாமமுலவு மணியாய் மணியொளியாய்த்
தாமிருப்பாள் தாளே சரண்.

2

ஒருபொருளா யிருவினையாய் மலங்கள் மூன்றாய்
உற்றமறை நாலாகிப் பூதமைந்தாய்
மருவுசமய மாறாய்க் கடல்களேழாய்
வளையுமட்டதிக்காகி மணியொன்பானாய்த்
திருமருவுந் சதிக்காய்ப்பதி னோருத்திரர்
திகழ்பன் னிராதித்தர் உலகம்பன்னால்
இருந சத்தெட்டாகமமும் புராணம்
பன்னேழொன் றேற்ற அய்ம்பத்தொன்றாய்
[மேலும்.

3

கலைஞான மெட்டெட்டாய்த் தத்துவாதி
கணங்கள் பலதேவர்களும் ஊழி ஊழி
நிலையான காலத்துமதுவாய் நின்ற
நிமலியுமாதேவி கயற்கண்ணி வெள்ளி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மலையொருபால் மலர்த்தடஞ் சூழ்சோலைமாடே
மணியொளிராதனத்திருந்து மகிழுங்காலை
நிலையான தவசித்தர் முனிவராதி
நெருங்கிவந்து பணிந்துநிற்க ஆசிகூற.

4

மாதவக்காக்கை காதி
மைந்தனும் பராசன் போகன்
யேதமில்பிருகு அத்திரி
இயல்செயன்வசிட்டன் கும்பன்
கோதமன் பிருங்கி பல்லோர்
கூட்டமாயனைபாலேகிப்
பாதமே பணிந்துநிற்கப்
பார்ப்பதி மலர்க்கண்ணோக்க.

5

பொன்னார் பூங்காபலையோன் போற்றுகின்ற மாதவ
தன் னரிவ்வாச்சிற் சத்தியே—நன்னைஞ் சேர் [மே
ஆதியே யார்க்கு மறியாய்ச் சுடர்வடிவே
சோதிமயமென்றே துதி.

6

துதிபுரிகாக்கைதன்னைத் தூய்யநல்லருளாலேற்று
அதிகமெய்த்தவனேவாழ்க அபருவாமெனதுமாடே
பத்தியதில் மெஞ்ஞானத்தின் பக்குவங்கண்டுவூழி
யெதினுமேபேதமில்தா இருடியே யெனதுபாலா.

7

பாலகாட்சி யிலொரு பக்குவியாகிவந்த
பாலனுக்கிசைத்த சாரம் பாடிபாராய்ந்து சேதி
காலவையோதாமென்னக் காக்கையுங்காதி மைந்தா
தாலமேற்புனிதனைச் சனிப்பவன் கிரகசாரம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

8

சாரமொன்றேதாமென்னத்
தவமிகுமுனிபேகேளும்
பாரகத்தொருவனுக்குப்
பானு உத்திராடம் ஒன்றில்
பூராடமூன்றிற் புந்தி
புகர்சதையத்திலொன்றே
ஆரணன் அறலீர் வக்கிரம்
அனுசம் நால் செவ்வாயாக.

9

ஏமன் சித்திரை ஒன்றிலாக
இராகு ரேவதி நாலாக
ஆம் கரமீனீர் கேது
ஆவிமான் நாலாம்பாதம்
போம்புலிமூன்றிலம்சம்
பொருந்தியதாகுஞ் சாரம்.

10

வருடம் நவதிரியே மாதம்நவமே
இருநசத்தொன்பான்தேதியிமையவர்கள்—குருவா
மதிசேர்கிதிநால்வரும் சதயமன்று [ரம்
பதிபத்திரவாகரணம் பார்.

11

வியநாமயோகமதே புருடகாலம்
விளங்குமதி லுதயமுதல் நாழி நாலும்
தயர்வான நாலேழுநாடி நேரம்
தோன்றுமந்தப்புனிதனுட கதையையாய்ந்து
நயம்படவே ஓதிடுவீரென்னக் காகம்
நவநாடி நிட்டைமுற்றி உமைதாள்போற்றி
வயணமுறநிற்குங்கால் யீசன் வேலன்
மற்றுமுள்ளகணதி சித்தர் வந்துகூட.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

12

மாதவியெழுந்துபோற்றி
மருங்கினி லமரச் செய்தாள்
நாதனுமற்றோர்க்கெல்லாம்
நயனமேசாற்றக்கந்த
நாதனைக்காக்கைபோற்ற
நாரணியாளைக்கந்தன்
பாதமேபணிந்து யீசன்
பக்கமேயிருந்துமற்ற.

13

மாதவர்ப்பணிய அன்பு
மலர் விழியாலே நோக்க
இந்தவாறிருந்த காலை
யிஸ்பரி தவவல்லோனே
அந்தமாகதைதனையோது
அப்பனே யென்னக்காகம்
காகமுந்தாயேயிந்தக்
கதைசொல்ல என்னலாமோ.

14

சாகரஞ்சூழ்பூமிதே
சனிப்பவர் தன்னிலிந்த
யோகவான்போலேகோடிக்
கொன்றுண்டோவது சந்தேகம்
ஆகாகா, யிவனைப்போலே
யாவர்க்கு எளிதாம்பாரே.

15

பாருலகிலிவன்முந்து செய்தநன்மை
பலித்ததிந்தசென்மமதில் பூலோகத்தார்
சீருரவும் பிறமதங்களறவும் நன்மை
செழிக்கவென்றேகாழிமறைச்சேயன் போலாம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பார்வதி நின்னருள் நோக்கும் அத்தன்நோக்கும்
படைத்த விவனைக் கந்தவேளையொக்கப்
பேருவகை யோடிவனைப்படைத்தாய் நீயே
பிரமவிதி வென்றிடுவான் எவர்க்கும் அஞ்சான்

16

அஞ்சான் மாயையவ்வழிப்பட்டு
மிஞ்சாதில்லம் விலக்கி ஞான
பஞ்சாக்கரமேபலபேருக்கு
நெஞ்சத்துயரைநீக்கும் மேலோன்.

17

இவன் கதையைச் சொலச் சொலப்பின் தெரியும்
என்னாலே சொல்வதற்கு உனது நோக்கும் [பாரு
சிவன்நோக்கும் குருநோக்கு மிருக்குமானால்
செப்புவேனெனச் சிவனுமம்மைவேலன்
தவமுனியே நீயறியாச் செயலுமுண்டோ
சாற்றுவாயெனக்காகக் காதிமைந்தா
நவநிலையேநின்றவித மறிந்தேன்கேளு
லக்கினத்தின் பலனுரைப்பேன் மகர ஆவி.

18

மலைதனக் குடையோனுச்சம்
மலைதனக் குருவும்பார்வை
அலைவுறுதவனைச் சேய்நோக்
காவதுங் குருவுமைந்தில்
நிலைபெற விருப்பதாலும்
நீலனுமுயிர்க்குப் பத்தில்.

19

துலைதனக்குடையோன் வாக்கில்
சோமனேடிருப்பதாலுந்
தலைசிறத்தங்கஞ் செம்மான்
சடம் ஒல்லி பின்னும்பாகம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கலைகளுங் கற்பான் கற்றுங்
கருதுவார்க் கெடுத்து ஓதும்
நிலைமையும் பூர்வபுண்ய
நேசமும் அருளும் அன்பும்.

20

மயலொடுக்கி நிருவிகற்ப மடைந்துமேலா
மானேக்க முடையவிவன்பின்னேபார்வை
செயலான துவாதசமும் பரமுங்காணும்
சித்தமே மனங்கவருஞ் சித்தமுள்ளான்
முயல்வார்கள் தபோபலத்தின் வடிவாய் வந்து
முளைத்தவிவன் லக்கினத்தின் முறைமையீதே
நயமாகப் பரகாயம் ககனப் போக்கு
நாட்டமைந்திற்குருவிருந்த நேர்மையாலே.

21

வாக்குத்தானத்திற் சுங்கரன்
மதியுடனிருக்கச் செவ்வாய்
நோக்குறத்தனத்தோ னுச்சம்
நோங்கிய செயலினலே
வாக்கது திக்கலேனு
மதியுடனிருந்த நேர்மை
வாக்கது குளிர்ச்சி யன்பு
வசனமு முதார மூக்கம்.

22

நோக்கொடு நயனச்சாய்வே
நுண்ணிடையார்கள் கையில்
தாக்கிடான் சமய யூகி
தத்துவந் தெரிவான் கைகால்
அரசசின்னத்தை யொக்கு
மரியெனு மடங்கலாக.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

23

முரசெனும் யோகக்காரன்
முழு முதல் வடிவங் காண்பான்
தரணியோர் மனத்தைக் கொள்ளை
தான் செய்யுஞ் சமர்த்தனுவான்
பரசமயத்தை வெல்லும்
பண்டிதனுவான் பாரே.

24

தீங்கேன் அதிர நடைவேகம்
செல்வாக்கேற்றம் சகடைபல
பாங்கேமலை காச்ஞ்சாரம்
பரவை கடந்தே பல தேயம்
போங்குமறி வான் கலமேறிப்
போவானயல் நாடெதிர் வெற்றிப்
பாங்குபலதே பூர்வபுண்யப்
பாவைமனையாய் வாய்ப்பதுவே.

25

ஏழிட மதியாய் வந்த
இயல்பினுலிவன் கார்யத்தைத்
தாழ்வு செய்யாத கற்பாள்
சார்வது யிதுவேரெண்டிற்
சூழ்பலன் மித்ரா மேலே
சொல்வது மூன்றும் பாகம்
பாழ்படாதறிவாய் மூன்றில்
பாம்புறக்குருவு மைந்தில்.

26

சோதரத் தானங்கேது
சூக்குமப் பார்வையாகி
தேவனைச்செவ் வாய்பார்வை
விழுவதுங் கொடியைப் பொன்னேக்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

காதலுந் துணைநாலாகும்
அவமிடைகுணம் போல்நின்று
ஏதம்பின் னேகத்தேகம்
இவனுக்கு நோய் சேராது.

27

வரிலுடன் தீருமார்க்கம்
வகைதெரிவானே நன்மை
உரிமையு மனவுச்சாகம்
உறுதிச் சொல்மாறுவாக்குப்
பிரியநன்மொழி வாய்க்கொள்ளல்
பிழைபடா விதபவாசி
கரியனுகாத ஞான
கைவல்யக் காரணுகும்.

குறிப்பு இதில் சிலவாக்கியங்களிருந்தன. அதைப் பின்னால் வசனத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

28

சதுர்தானச் செவ்வாய் லாபஞ்
சாரவே குருவும்பார்வை
சதுர்மனை காரிபார்வை
சதுர் சதுரிரட்டையாதி
மதியெனத் தனத்தே சேர
மாமவர்க்கத் துஞ்செல்வ
மதிகமேதிருவாள் வாசம்
அரசனேரான வாழ்வாம்.

29

வாழ் வதிலிவர்க்கேன் லாபம்
வாய்ப்பதும் பெருமைதானே
வாலினைக் கருதமாட்டான்
வஞ்சரை யணுகான் தீது
சூழிடஞ் சூரிபோல்வான்
சுகுணமே கல்வி ஞானம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

30

மாதுலர் பானுஞ் சித்தி
வளமையே தந்தையாலும்
சோதிடங் கணிதமாதி
..தொடரும் பண்டிதமுந் தேர்வான்
பேதறு பாஷை கற்பான்
எங்கும் சஞ்சாரனாகும்
போதம் வேத்தவை யிலேற்றும்
புகழ்படிப்பாளன் கண்டாய்.

31

வண்டிவாகனமும் போக்கு
வரவொரு பாலேசித்தி
கண்டித மகற்றியேமேல்
அகண்டித மதீதமாவான்
கண்டினிதான பேச்சுக்காரனே
பெருமைபேசான்
ஒண்டொடியார்கட் கெல்லாம்
உற்றசேயாவான் திட்டம்.

32

திட்டமே பலதுதேசச்
சேவையுந் தலங்களாதி
எட்டிய நோக்கமாகும்
இடம் சுகம் பொருளை நோக்கான்
இட்டவாரிது வாமேலே
யீன்றவள் செயலைக்கேளு
பட்டவள் பரந்தாள் செல்வப்
பாவையே அவளோடாக.

33

ஆகவே துணைபூதம்போ
லாகியே கடைநாளீரே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆகலாமவளும் நல்ல
அடிவயர்வாய்த்த மாதே
யோகவான்றன்னைப் பெற்ற
உத்தமியாகுந் தானே
காகனும்வில் கோணத்தே
காணுநாள் அவளின்சாவே.

34

சுந்தரமாதே யிந்தத்
தோகையின் சேதியீது
மந்திரக் கேள்விசேதி
வளமையே யிவனுக்காகும்
அந்தியகிரியையன்னைக்
காமிவன் பிதுருக்கேது
இந்தவார் நாலாம்வீட்டுக்
கேற்றதாமினி மேலேந்தே.

35

நாலவன்திசைசேராது
நவிலக்கேள் காதிசேயே
மால்படாதைந் தோன்வாக்கில்
மதியுடனிருக்க வைந்தில்
மேலவர் குருவும் நிற்க
வினயமாய்ச் செவ்வாய் டார்வை
யாலுமவ் வீட்டோன்றன்னை
யாற்லும் பார்வையாகி.

36

அய்ந்தையுமவனே நோக்க
மாவதின் பாகத்தாலே
சந்ததங் கௌசிகாகேள்
தானமுமா மன் பாகம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மைந்தரின்பாகத் தோடு
வரும்பிதுர் பிதுரின்பாகம்
இந்த வாரானதாலே
இவன்மாம்ன் அனேகசேமன்.

37

சேமம் கமலத்தாள் சேர்ந்திருப்பாளாக
நேமம் பலதே நேர்ந்தாலச்—சேமத்தைக்
கருதா னிவனே கற்பகமு மீர்நிதியும்
பெருவாறெருபாலேபின்.

38

பின்னேயறிவா யிவன்மூதோர்
பெருக்கஞ் சமனி பிதுர்காலம்
மன்னுஞ்செயலே யினிமகவின்
வளமைகேளு ஓர் மகவாங்
கன்னியவளேக் கண்டவுடன்
காதல் மறைந்து களிப்பாக
என்றுமழிப் பெருங்காத
லிச்சையாவா னிச்சயமே.

39

மேனுள் விதித்த விதியீதே
விஸ்வாவென வேமித்திரனும்
மேனுள் விதிக்கு இவன்முன்னாழ்
விரும்பிச் செய்த் தவமதனைத்
தானே யுரைப்பீரெனக்காகம்
தவனேயந்தக் கதை நந்தி
தானே யுரைப்பானீதேரு
சதாசிவம் காணப் பிறந்தார்க்கு.

40

மேனுட்செயலும் பின்செயலும்
விரும்ப வேதுஆனுலும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மானிலமீதுமாய்கைவலை
வசத்தாலுதிப் போர்க்கதுவுமுள
ஆனாலவனும் பலஜென்ம
மறிந்துபழகிவந்தமுறை
தானு மிவ்வூழ்கைவல்யம்
சமீபங்கிடைக்கு முக்திவழி.

41

மலைமேலுடைய பெருமானார்
வகையே கலையேயிவன்பிறப்பு
நிலையாமுன் னாழ்த்தவஞ்செய்து
நிமலனருளா லிச் செனனம்
கலையால் மதியால் திருவாலுங்
கலந்து ஞானசூரியனைப்
பலநாளிருப்பா னுடனுடனே
பாரிலீதோ ரதிசயமே.

42

வழியறிந்தாலும் பிரமன்
வரைந்தநாள் வந்தேதீரும்
சுழியதாமிதுவே யைந்தில்
சொல்வது இனிமேலாறின்
வழியது கேளு ஆறோன்
மாலவன்வியமாய்ச்சூரி
வழிப்பட்டுச் சனியும் பார்க்க
மனை தனைச்செவ்வாய் பார்வை.

43

பார்வையாலிவர்க்கு யாரும்
பகையில்லை வரினும்வெல்லும்
நேர்மையுங் கலங்கிடாத
நெஞ்சமும் படைத்தோனாகும்
தோர்வையேன் காரியாதி
சூக்குமம் அடுத்தார் நோக்கைப்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பார்வையாலறிந்து சொல்லும்
பக்குவம் இவர்க்குச் சத்துரு

44

தந்தைதாய் பந்துவர்க்கம்
தாரம்சேய் சிநேகத்தாலும்
வந்திடாவிலங்கு புட்கள்
வடுவிடம் ஜலம்தீகாலும்
வந்திடா ரோகம் பீதி
வயப்படான் எதிர்த்துப்போகும்
அந்தகன் பகையுமில்லை
அதற்கஞ்சான் அரசர்க்கஞ்சான்.

45

இந்த வாறுகுமாறி
னியல்புதான் காதிபுத்ரா
பந்தமில்தவனே யிந்தப்
பாலனுக்கெதிரி யேதும்
வந்திடாதென்றீர் ஆனேன்
மந்தன் பார்ப்பதினால்தீமை
வந்திடாதோ சொல்வீரே
மகத்தான வுலகதீபம்.

46

புந்தியைச் சேர்ந்து நின்றால்
புன்மைவே றுண்டோ சொல்லே
கந்தனோடம்மையத்தன்
களிப்புடன் ஆம் ஆமென்றார்
பந்தஞ்செய்யேழாம்வீட்டுப்
பாவகம் பாருமித்ரா
அந்த வில்மதியவீடு
அவன்மனைக்காரகனோடு.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

47

குந்திஞன் அதைச்சேய் பார்வை
குடும்பத்தானுச்சமாகிச்
சுகத்தானந்தன்னைப் பார்வை
சுக்தானத்தானைத்தேசி
இகலறப்பார்ப்பதானும்
இவ்னுக்கு முன் ஜென்மத்தில்
சுகம் கொடுத்தரியவாழ்வைத்
துகள் செய்தாள் மனைவியாமே.

48

அவள்பெரும் புனிதக்காரி
யாவதாலிவனைச் சேர்வாள்
இவன்செயல்க்கிடையூர் செய்யா
திருப்பதே யிவர்க்குலாபம்
புவனத்தே யிவள்போல் பாரி
பொருந்துத லரிதாமென்னத்
தவமிகுமுனியே யந்தத்
தையலாலிவற்கேன் லாபம்.

49

என்னவே தவத்தின்காகம்
இருடியே மதியைவிட்டாய்
கன்னியரால் தானெல்லாக்
காரியம் பலிதமாகும்
இன்னவன் துறந்துபோக
இச்சையா லவளும்வேறு
மன்னனை யடைந்தாலின்னேன்
மாதவமெங்கே கிட்டும்.

50

ஆவது மாதராலே அழிவது மாதராலே
சாவது மாதராலே சனிப்பது மாதராலே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தேவனுயடைய மார்க்கஞ் செய்வது மாதராலே
மூவருமாதராலே முன்னவரானூர் பாரே.

51

மனைவிகாரகனு மனைவியில்லோனு
மகிழ்ச்சியாய்க் குடும்பத்திலொற்றுத்
தனதனைமதியைத் தரைமகன் நோக்கம்
தனத்தனுமுச்சமாயிருக்க
அனைவழி மனைவியாமிவன்குருவில்
அசுரதேசிகனுடையூணில்
மனைவிசேர்வாளே மனமறுப்போடு
மாலையுஞ்சூட்டுவான் விருப்பேன்.

52

விருப்பமேனயலாருறுத்துவதானும்
வினைவசப்படியது கூட்டும்
கருப்பமொன்றேடே காதனுமடங்கும்
காமனுக்கென் செயலிவன்பால்
விருப்பொடுமனைவி விலகுவாள் மதியாய்
விட்டிடுமிவனையத் தொந்தம்
மருப்படாமனைவி மாணிக்கமலையில்
வாழுவாளவளிடம் சேர்வான்.

☞ இதில் அதிகமான வசன நடைகளிருந்தன.
பின் வசனத்தில் பொருத்தியிருக்கிறது.

53

இத்தகையேழாம் வீட்டு
இயல்பினி யெட்டிற்பாரு
அத்தலத்தோனுஞ் சூரி
யாயலியுடனே மோக்ஷம்
அத்தலந்தனைச்சுன்பார்வை
ஆயுள்காரகனுமே உச்சம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

எட்டினமட்டும் பத்தி
யேற்றுவான் மதியவீட்டில்.

60

கட்டிடம் கட்டிவைப்பான்
கால்விடான் கலைகள்செய்வான்
முட்டவும் பழுப்பான்காலம்
முடவனின் கேதுபுத்தி
தொட்டநா ளிருந்தேமேலாஞ்
சோதியைக்காண நோக்கம்.

61

நோக்கமிப்படியாஞ் சத்தி
நோக்கத்தை யடைந்தபேர்க்குத்
தேக்கமேன் தலமேன்பூசை
செய்வதேனுள்ளத்துள்ளே
பாக்கியம் பழுத்துநிற்கும்
பறவைகள் வந்து உண்ணும்
பாக்களுஞ் செய்வானீவான்
பலருக்கும் போதஞ்செய்வான்.

☞ இங்குள்ள வசனங்களைப் பின்னாலே சேர்த்துள்ளது.

62

பாக்கியத்தானச்சேதி
ப்கருவேன் பாராள்மன்ன
பாக்கியன்மாலே யாகிப்
பானுவோடிருப்பதாலும்
பாக்கியந்தனிலேகேது
பாம்புபொன் பார்வையாகப்
பாக்கியன்றன்னைக்காரி
பார்வையே மாலும்மோக்ஷம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

63

ஆக்கியசெயலினாலே
அத்தன் காரகத்தைக்கேளு
தந்தையின் துணைபோர் நாலாய்ச்
சாம்பொழு தேகமாகும்
தந்தையின் ஆஸ்திசீர்சீர்
தக்கவன் பொருமையாளன்
நிந்தையில் மனத்தனாகும்
நிரியாணமிவனின் காரி.

64

அந்தணான் வீட்டைத்தாண்டு
மக்கால மிறுதியாகும்
மைந்தனின்னவனால் கர்மம்
வாய்ப்பதேன் கேள்வியாதல்
அந்தநாள் வரைசீர்மாயை
யாமெனிற் பற்றிராதே
சொந்தக்கர்மத்தே சார்வான்
சோகமேன் சுடுகையாளன்.

65

போதகமனையான்வெள்ளிப்
பொருப்பிலே கவனக்காரன்
பேதகமனத்தனல்ல
பிழைபடாக்குருவின் ஆக்ஞை
யாதலே வேதமென்றும்
அறிவனஅறிவான் விஞ்ஞைசக்
காதலல்லாது காமக்
காதலேன் கள்வனாமே.

66

கள்வினைஞான வீட்டைக்
கவர்தலே கவனிக்கர்மன்

7

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விள்மறை யென்ற சித்தன்
விளம்பியபாக்கிய வீட்டுக்
குள்ள தாமினிமேல்பத்துக்
கோதுவோம்வெந்தே கேளு
உள்ளமோர்வழி நிறுத்தி
உயல்கியல்பறிந்த மன்னு.

67

மன்னவாபத்தாம் வீட்டில்
மந்தனே யந்தவீட்டோன்
நன்மதியுடனே யீரில்
நாட்டம் வர்த்தனையாய்மாற
அன்னவைச் சசியைச்
சேய்நோக்காவதே பத்தோனுள
அன்னவன் பத்தும் ஐந்துக்
குடையவனுனதாலே.

68

கர்ம தர்மச் செயலோடு
வர்மம் மர்மச் செயலோடு
பிரம பிரமச் செயலோடு
நிர்மல வமலச் செயலோடு.

69

பத்துப்படி போய்த்துவாதசமும்
பதினர்கலையும் பன்னீராய்
வைத்துமதி தேய்த்தனலாகி
வருமாபுன லுண்டவமற்றுச்
சத்துச்சித்து ஆனந்தத் தாண்டவ
மாடிப்பூரணத்தை
வைத்து வகித்துப் பரவசமாய்
மணியாய்ப்பத்துச்சங்கீதம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

70

ரிதம்கேட்டுக் கேடுகேட்டுக்
கிரியையுடைத்து உரிமையுள்ள
நாதமருந்திவாழ்வானே
நாகம்பிடித்துக் கையாடிப்
போதமறுத்தலிப்படியே
பொருந்தும் பத்தாமிடச்செயலே
பேதமுளதோவெனக்காதி
பிள்ளையுள்ளத்து வகையதாய்.

71

அரியதவத்து மாமுனியே
அருளியதெல்லாஞ் சரிதானே
விரிவேநிற்க இவன்முத்தி
வீடுகண்டு பேதமற
உரிமையடையக் காயகற்ப
முண்டோவென்னத் தவக்காகம்
புரியாண்டரியதவம்பெற்ற
புத்தியுடையாய்கேள் கவனம்.

இந்தக் கேள்விக்குப் பதில் கூறியது வசனமாயிருந்தபடியால் பின்னால் சேர்க்கப்பட்டிருக்கிறது.

72

உன்னுடன்நானும் மற்றும்
உள்ள இத்யாதி சித்தர்
என்னகற்பத்தை யுண்டு
இன்னிலையடைந்தோ மோது
முன்னவனருள் கற்பத்தை
முறைதெரிந்துண்டால் சித்தி
இன்னவனது போலாவான்
இவன் அதற்காகவந்தோன்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

73

இந்தவிதம்பத் தேகப்பதியொன்றுக்கு
இசைப்பதுகேள் அத்தானன் ஆகூியாகி
அந்தணனால் பார்வைபெற்று உயிர்க்குலாபம்
ஆவதுடன் அவன்லாபசுகாதியாகி
வந்ததினுற் பலன்கேளு இவர்க்குலாபம்
மாதுர் பிதுர் ஆஸ்தியிலே லாபமில்லை
மைந்தர்மனை சுற்றத்தாராஸ்தி லாபம்
வாராதுவந்தாலும் வேண்டான் வேண்டான்
அந்தவகை யாஸ்தியெலாமழிந்துபோமென்
றறிந்திவனும் பேரின்பத்தாஸ்தி லாபம்.

74

சொந்தமா யடைவதாகுஞ்
சுகானந்த வாழ்வேயாகும்
இந்தவாறெதுங்காலை
யிஸ்பரி பரிந்துகாகம்
இந்தமான் சகடையாதி
இசைபல போக்குக்கெல்லாம்
எந்த ஆஸ்தியைக் கொண்டு
இசைவதுவோதா யென்ன.

75

அன்னையே அதனைக்கேளு
அவனிடம் நீயும்வாணி
மன்னியே யிருக்கும்போது
மாதிருவேன் சேராது
மன்னிய கணக்கில் சீடர்
வளைந்தவ னெண்ணம்போலப்
பொன்பொருள் யாவுமீயப்
பொருந்தியே யிருக்கும்போது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

76

என்னதான் தாழ்வுநேரும்
இவரைப்போலெவர்தானுந்தன்
நன்னருள் பெருவார் நிற்க
நவின்றது பதினொன்றுகும்
பன்னிரு வீட்டுச்சேதி
பகருவேன் அவனுந்தேசி
என்னவே பெறுதிலேறி
இருப்பதும் பாக்கியாதி

77

எட்டவனோடு சேர்ந்து
இருப்பதும் மோக்ஷவீடு
திட்டமே யதைச்சுன் பார்வை
சேயாக்ஷி யோடுவேந்தை
எட்டிய வேழாம் பார்வை
என்றாலு மோக்ஷவீட்டோன்
திட்டமாய்க் கோணமேறுந்
திரமையாலிவர்க்கு மோக்ஷம்.

78

எட்டடிதானே யுண்டு
என்றாலுங்காலம் பின்னும்
திட்டமேபாக்கியத்தில்
சேர்ந்தவன் திசைவந்தக்கால்
எட்டுவான் சதாசிவத்தில்
இன்பமே யெண்ணும்வாரே
கிட்டுதலுறுதியாகும்
கௌசிகா கவனித்தாயா.

79

இத்துடன் முதலாம்பாகம்
இறுதியாமற்றோர் நாளில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சித்திசேரி ரண்டாம் பாகம்
செப்பலா மென்ன யீசன்
சத்தியும் வேலன் மற்ற
தவத்தரும் ஆமென்றேர்க்க
மித்திரன் காகமீர்வர்
விடைபெற்றுச் சென்றார் வாழி.

☞ இவ்விடத்திலுள்ள அதிகரகஸ்யமான விஷயங்கள் வசனமாயிருந்தபடியால் பின்னே இணைக்கப்பட்டிருக்கிறது.

மஹாவாக்கியம் முதல்பாகம் முடிந்தது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ மனோன்மணீ
காகபுஜண்ட விஸ்வாமித்திர
சம்வாதம்.

இரண்டாம் பாகம்.

80

மலரேமணமே மருவற்றமணியே
மணியில் ஒளிரொளியே
உலகோர் கருவிலேயுதவும்
உமையேயிமையோன் தவக்கனியே
நலமேயுதவுஞ் சுடர்வடிவே
நாதவிந்தாய்க் கதிர்முளையாய்
நிலவா யனலாய்த் தாங்கி
நின்றுநிறைந்த நிராமயமே.

81

அத்தனார் வாமமேலமர்கின்ற
வல்லியே ஆனந்தமானவல்லி
அதிபோகபூரணவடிவாகி வாழ்கின்ற
அமலையே கமலமணியே
அடலேறுமகிடனைச் சம்மாரவல்லியே
அன்புமிகும் ஞானவல்லி
அயிலோனையானைமா முகவனையீன்றிடும்
அன்னையே வேதமுடிவே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அம்பிகைபேர்சொன்னது பாதபத்மங்களை
    அகலாது போற்றுகின்ற
அடியேங்கள்மீதிலே கருணை வைத்தாளுவாய்
    அதீதமயமான வல்லி
அகம்புறமொன்றதாய் நின்ற மாவல்லியே
    அருள்புரியென்று போற்றி
அரசனுங்காகமும் நிற்கின்ற காலையில்
    அம்பிகை யுவகையோடு
அரியதவ மைந்தர்காள் நீவிருபேருமாய்
    அருளியமுந்து கதையில்
அமைவான மறுபாகமோது வீரென்னவே
    ஆமென்றுகாதி மகனும்
அம்புலி சதயமீர்பாதமேயாறனும்
    அனுடம் நாலானகாலே
அரியுத்திராடம் ஒண்கார்த்திகையிரிலே
    அரசனும் வக்கிரமாக
அசுரகுருசதயம் ஒண்ரேவதி நாவிலே
    அகிசிகி அஸ்தமீரில்
அரிமகன் சித்திரை மூணிலேமகரநால்
    அவியேயம்சபுலிமூன்
அமாவேவிஜயனில் இருபத்தியொன்பது
    அந்தனைவார பூர்வம்
அத்திலேநால்திதி சதயமேமுற்பகல்
    ஆவது கடிகை நாலும்.

ஆம்நொடி யிருப்த்திபெட்டிலே யுற்பவம்
    அருளுவீர்பலனை யெனவே
ஆங்குமுன்போலவே வேள்கிவன்
    அரியமெய்த்தவர்கள் யாரும்
ஆதிபோடம்மையை வேலனைப் போற்றவே
    ஆசிர்வதித்து அமர்கால்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆழிசூழ்வையமேலி வனொருசித்தனே
யாம் நல்லஜென்ம புனிதன்
ஆறலின்கண்டமே பாண்டிநன்னாட்டிலே
அமைவான சிறியபதியே
ஆவது அஞ்சலே சேயவன் பட்டியே
அனையனைக்குரியமனையே
ஆதவன்நேர் முகவாயலே வேதியன்
அரிமதகுலதிலகனே
ஆதியிற்பேர் சீனிவாசனே
லிலக்ஷணனந்தனே யானநாமம்
ஆயிபேர் சுந்தரம் பிதுர் ரெங்கசாமியே
அவதரிப்பானகாலம்
ஆவ்திற்போகியே வருடமெட்டேமதி
யைந்துநாளிருப தீரும்
ஆம்கேதுபுத்தியில் பதினொரு மாதமும்
அடுத்தீருநாளுமீதம்
ஆனகவி சித்திரம் யேகமதிநாள்தசம்
அட்டமம் கடிகைசூலம்
ஆம்புலன் கேளிவன் தோன்றுதல் முன்கரு
அனைசோகமேக மிகுதி
ஆயாசமே பலபால பிணிரோகமே
அடுத்தடுத்தாகுமறிவாய்
ஆதவன் சித்திரம் தேகவெப்பமே
அத்தனின் தேட்டுமுபரி
ஆயில்லஞ்சீருதான் தாய்வழிசேமமே
அனல்வாதை மீறியமரும்.

இத்தனை சேதியாய் ரவிபோகவிந்துவில்
இனநேசமான செயலே
இன்பமேயீர்வழிச் சோகமுங்கர்மமே
யேகாந்தமான பலனே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இனிதான விந்துபோய் ஆறலின் சித்திரம்
பேதுசீரான வாழ்வே
இல்லதுவிர்த்தியே நாலாவிதத்திலும்
இடரேது தொடர்புசுயமே
இயல்பானசேமமே சேய்போக ராகுவே
இரவிபகையவனு நேர்நேர்
இருப்பத்தினுற் சுயகருமமுஞ் சோகமே
இவன்பீடையாவுமேக
இனநேசபாசமே காலங்கடந்திட
இராகுபோந் தேசியாகும்
இந்தரிக்கேதிரி கேதுவுக்கொன்பது
எதிர் செந்தியாவதாலே
இசுலேதுமில்லையே அகமுஞ்சிறப்பதே
யேற்றமேனிருந்த மட்டும்
இறையவனிப்படிச் சனிபுந்திசித்திரம்
ஏற்கவே பீடைமாறி
இசைவான கோபசுய சோபமேதாய்வழி
யேற்றசீரான திருவே
இத்தோடு சித்திரம் மாறவேகேதுபோய்
ஏகதசமாத மிருநாள்
இதுஜெயமார்கழி தேதியொன்றேகவே
இனிக்கவிபுத்தி யாகும்
இந்தமட் டோதியபலாபலன்
புந்திகேதிருவருக்குரியபலனும்
இருவயதோர்மதி தசநாளதாகவே
இயல்காம மாசி நவமே
இராக்ஷதர்தேசிகன் வருடமூன்ரும்பலன்
இலக்கின குடும்பமேறி

ஈரினுக்குடையவன் பத்திலேவாசமாய்
இந் தோடுசுங்கன்மேவ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஈனமில்சேயெதிர் சுயசித்ரமோதவே
இணைசேர்தலேதமிகவே
ஈன்றவள் சோகமுந் தந்தை
தேட்டேவலு மேர்க்கையேமார்க்கமாக
ஈதலே நற்பலன்சோபனஞ் சுங்கனும்
ஏகவேவமாகமணியாம

ஈர்வழிச் செல்வமாய்ப்பாலகனின்பமே
இனவாதுவுடல் மனதே
ஈதிரவியாம் மதிசித்திரஞ் சுங்
கனேடிருப்பதினலே பிணியே
ஈறுசெய்யாதகல் நாளுங்கடந்திட
யேதுகோளில்ல மீதே
ஈட்டிய சோதரவாட்டமுமேகுதல்
இன்பமே சோபனதி

ஈது போலாமதி செந்தியில் வெந்துயர்
இடரேது சோகமயலே
ஈண்டரி ராகுவில் பிதுர்வருமானமே
இருந்தவாரான செயலே
ஈப்பையனை பக்கமும் ஊடலும் நேசமே
இவன்தேறிவளர்வாகவே
ஈடுடன் போகிபோம் தேவகுருசித்திரம்
ஏற்கவே மார்க்கதுயரம்

ஈனல் சுபவர்க்கமே காணலாம் பார்குரு
ஏகவே காகசித்ரம்
ஈனனும் உச்சமே சுங்கனுக்கேகவம்
இயல்பினலேது கவலே
ஈடுபாடாகவே அரிசாரிலாமே
ஏற்ற சோதர வளர்ச்சி
ஈதாகவேசனிமால் நொடிசித்திரம்
ஏழுமதி நாளுமீறே.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உத்தமச் சேதியாய்ப் பெற்றவரின்பமே
ஊக்கமே தீர்க்கமாக
உற்றசெயலிப்படிச் சோபனஞ்
சோகமே ஓதலாங் காதலுடனே
உடுமகன் கேதுவோடங்கமே காமியும்
உள்ளவயதைந்து மதிபொன்
உகளைந்துநாளதே விளம்பிகுடமே
நவம் ஓடவே பானுமதியே
உகளைந்து மாதமும் நாளிருபத்திநால்
உதயனும் மோக்ஷமாக
உரகத்துக்கே தசம்காரிநேர்
மாலுடனெக்கவே தேகவெப்பம்
உதவியனைபக்கமும் சேமமேசோபனம்
ஒவ்வுதல் கல்விபிவனே
உடந்தையாய் மாதுலர் கவனமுமாகவே
ஒருகோது மேதுயிலமேல்
உள்ளவார் காலமே கள்ளமேனுவது
உதயனுட புத்தியிதுவே
உறும்வயதைந்தேக தசமாதம் நாலுநாள்
ஒவ்வவே விகாரிசிலை மூண்
உடுபதிபுத்தியும் பதினெட்டு மாதமே
உசனனூடாக வாக்கில்
உகந்த வகிக்கேவியம் சேய்பார்வை யாவது
ஓதுவான் கல்வி நலமே
உய்வழிக்காமிவன் மாதுலவிர்த்தியே
உதவனு மூடுபீடை
உலகத்தை யாண்டுபின் கலகத்திலே
தவம் ஒப்பிய காதிமகனே
உனக்கிதிலேதேனு மாறுபாடுள்ளதோ
ஓதுவா யென்ன மித்திரன்
உயர்தவ வல்லவா யேதுசந்தேகமே
உண்மையே ஓது மேலே.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஊர்ச்சிதமா யிவனிந்து போய்ச் சேய்வர
ஒருவருடமா றுதிரிநாள்
ஊக்கமுயிர்லாபமாய் திசையவர்ங்கே
நவம் உம்பர் தேசிகனு நேர்தல
ஊறுபலதே பிணிகாக்ஷியுஞ்
சொபனம் ஓங்கலே ஞகிடாது
ஊணதுவிர்த்தியே அரியக்ம்மாகவே
ஒருவழிவாது சிலவே
ஊடுசோதர யேதமீதமே நல்லசீர்
ஒப்பவே அப்பனுபரி
ஊடுசேர்வதே காலமுமிவ்விதம்
ஓடலேல் செந்திமதியாய்
ஊழ்வினைப்பந்தமாய்ப் படிப்பிலே
யூகமே உற்றவயதெட்டுமதி அய்
ஊனமில்லாமலே யீராறுநாள்விட
உள்ளதே சுபகிர்தானி
ஊடிருபத்தியோர் நாள்விட ராகுபோம்
உம்பர்தேசிகனும் வரவே
ஊன்றுமவன் வியதிரியில்லவன்
உற்றகோணத்தில் சேய்நேர்
ஊக்கமதாலவன் சுயசித்ரமேன்
பலன் உதவியுமாறலயலே
ஊர் மதிப்போடிவன் மாமனுந்தந்தையும்
உகந்திவன் கல்விபயில்தல்
ஊடாடியே நல்ல செல்வத்திலாகவே
உயர்வு பெற்றின்பமாக
ஊழ்ப்படி தேறுவான் காருபாரக்கமே
ஒப்விலது காலபேதம
ஊனமதியேனி னிக்காரியில் சித்திரம்
உள்ளுள்ளே ஊடலாக
ஊதாரி யேனிலம் நானுவிதத்திலே
உரைத்தவிப்பலனதாமே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

எத்தனம் ஆகவே காரிபோய்மாலிலே
இடரேது காலசெயலே
எய்தியபாகமே சோதரமீதமே
இன்பவகையாவதறியே
என்றபகை சித்திரம் கர்மமேயாவது
இருவகைக் கேள்வியாதி
என்னவேயோதல் நல்லிணக்கமுமாகவே
இகலேது கேதுபோக

எருதுடையவன் சித்திரம்வந்திடச்
சோபனம் இனத்தயல் சொந்தமாக
எழுமதி யென்னவே மாதுலர்பக்கமே
ஏகசெயலான க்ஷேமம்
என்ருலுமேன்நயம் ஆவதுபாவகம்
இப்படியாகவருதல்
என்றாழின்நாளிலே காயலேமாறுதல்
யீன்றவள் சோகமேக

எரிசித்ரமற்பமே யிந்துசீராகுதல்
இயல்பானலாப சாலி
எதிரேதுதந்தை தாய்வர்க்கமுன் துட்டியே
இச்சையே நிச்சயாதி
என்னெழுத் தோடிவன்கற்பதேமுற்பட
இந்துபோய்ச்செந்திவரவே
எஞ்சவே சஞ்சலம்மிஞ்சிடா தாகமே
ஏற்றமேன் தாழ்வுமேது

என்றபல னிவ்விதம்அறலேகராகுவில்
இல்லமும் நல்லசீராய்
எக்களிப் பாகநல்லின்பமே யீர்வகை
யேடணேயொக்கும் விதமே
எரிவிடமேகவே குருவுறுமுற்றதாம்
இவன்வயது தசமுமதியேழ்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

எட்டோடிரண்டுநாள் குரோதியாவணிநவம்
ஏகவே காரிமதியே.

ஏமனுக்கே மதிமுப்பதீரார்தினம்
இலக்கின மிரண்டுமுரிமை
எற்றவன்பத்திலே திசையவர்காறிலே
இருக்கவவ்விலோனும் வாக்கில்
ஏறியதாற்சனிசுய சித்ரமேனவம்
இவன்கல்வி சுவனமிகுதி
ஏறமேயீன்றவ ரிணைக்குடன்மாறிலா
திகல்படா தன்புமுயலல்
ஏமனுடசித்திரம் போகமால்
கேதுவிலிட்டமுன் பட்டதொந்தம்
ஏற்குதல்ஞாபகம் காதியின்மைந்தனே
என்றுனு மாயைவிடுமோ
ஏதவ்வாருகினும் பின்னிலேதேறுவான்
இருக்குது காலமினியே
ஏகுதல்மால்கொடிசுங் கனிலிங்கிதம்
இயல்புபோ லாவதினியே
ஏறுமார்செய்திடான் சோபனம்பக்கமே
இணைமீத மானநயமே
ஏராளமாமனை வர்க்கமேயாதர
விராக்ஷத தேசிபோக
ஏழ்பரியோனுடன் மதிசெந்திசித்திரம்
எஞ்சாதவாழ்ப தியல்பே
ஏதமாகாதிலம் காரியாகாரியம்
இந்தரி சித்ரமாதல்
ஏற்றவக்காரிக்குச் சத்துருத்தானமேல்
இருப்பதாலூடல் சுயமே
எசனும்பூசனும் மாசதாப்மாசையால்
இனதர்க்கம் பக்கமாக

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஏதமற்றில்லமேலாதலே சோகமும்
இதுவகிசித்திர முடிவே.
ஐயனும்தேசியில் நையனுமாறவே
அவமேது கவலைமறுபால்
ஐயமும்உய்வதும் கல்வியுமாகுமே
அனேக்கேத மேதுதயமே
ஐயமவ்வகையிலே தேசியோடேகரி
யந்தமே வயது கேளு
ஐயிரண்டுந்திரி மாதமு மேகவே
அத்தோடு இருபதிருநாள்.
ஒவ்விய பராபவ மாசி மூவேழ்தினம்
ஓடமேற் புந்தி மதியே
ஒவ்வுதல் நவதிரி மாதமும் ஆறுநாள்
உயிர்க்கு மோக்ஷத்தின் மாலே
ஒவ்விய சூரியும் சேரவும் நாதர்க்கு
உகந்திடக் காரி நோக்கம்
ஒவ்வியு மானதா லவன் சுயசித்திரம்
உள்ளபல னேத வறிவாய்.
ஒப்வனை பாகமே கேதுகவிசித்திரம்
உள்ளமட்டின்ப வாழ்வே
ஓங்கிய கவனமே கல்விபல் வாரதே
உயர்பதவிக்கேகு மிவனும்
ஓதாது ஓதுவான் பின்னிலே யாகநால்
உத்தமனை இவனும்
ஓடுமே கேதுக்வி சூரிமதிசேயிலே
வுடுக்கமாமன்னை பாடே.

ஔவியமேனிவன் காலமிவ்வாறதே
உறவுசுய சோககருமம்
அவ்வகையாகவே நாளுங்கடந்திட
ஆதாயம் தந்தைகவலே

.CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அவ்வமய கர்மமே போதனே மாதுலன்
அகலாத செல்வ செயலாய்
அவவுமவ்வுங் கலந்தானந்த வல்லியின்
அருள்வந்து குடிபுகுதுமே
அக்கமுந் தூக்கமும் பக்கமே மிக்கவே
அகிசித்ரமெய்து நாளில்
அக்காவிலக்கண போதமே காதலே
ஆயினும் அந்தநாள்பின்
அக்கவன மெய்துதல் போகிழீதாங் குரு
அவன்கால நல்லபலனே
அக்கதை போலவாம் நாளுங்கடந்திட
அரியேது மிடிமையேதே.

82

கவனமனமே காதகமேனுதல்
தவகுருபோகச் சனியாக—அவமேது
அன்னைசெபனுமாம் முதலியாம்பாகம்
தன்னைப்பார்தேரு நீதான்.

83

காவலா இந்தவாரே கரிவிடமாலோன் புத்தி
ஆவதுவயது பன்னேந்தடுத்து நால்மாதம் நாலேழ்
போவதே சவுமியாவேர்புகல் நவதிரியாங்தேதி
ஆவதே யனேபாடேமுன் அதற்குத்தான் கேதுபுத்தி

84

கிரகமாம் கேதுதிசையவர்க் கைந்தில்
கேடுறுதுயிர்க் குப்பாக்கியத்தில்
திரமெனவுபய ராசியேயிருக்கத்
தேட்டவன் பலன் சுயகருமம்
வரவதே கவனம் பட்டினத்தான் போல்
மனங்கவனித்தலே பாலன்
பரவிய பதினேர் மாதம் நாளாறே
பாரவன் சுயங்கவி சித்ரம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

85

கீழ்மைபாகாது எண்ணமும் பலிதம்
இலேசமுஞ் சுயவழியணைமுன்
பாழிவன்கருமம் துணைவளராண்பெண்
பலிதமே பலனது பிதுர்நலமாகத்
தாழ்வுநேராது குருவையே நோக்கந்
தலைப்படுந் தவக்க முமிடையே
சூழ்பலனிதுவாய்க் கொடிகவி
யேகச்சூர்மதி சேயிவர்சித்ரம்.

86

குடுப்பது ஞானபந்த மேயாகில்
கூடுமோ இந்த நாள்தனிலே
படிப்பதுங் கணித மாதுலர் பிதுரால்
பாக்கியவானி வன்பாரே
எடுப்பது மூழ்வந்த டுப்பதுமாக
யேகுமே சூர்மதிசேயே
அடுத்திடுமி ராகுதனிலவமேது
ஆக்ஞை கேட்டாவது முயல்வே.

87

கூடுமேகவனம் கராவினைத்தேடும்
குழவிபோற் காந்தமுமயமும்
கூடுதல்போலாம் ராகுபோய்த்தேசி
கோதகல் மனமுடன்கவனம்
கூடுமார்செயலே வேந்தனுமேகக்
கூற்றுவன் மாலிலேகொள்கை
நாடுவான்நாடி நயப்பட்டலான
நியாமும் உபாயமுங் கருத்தே.

88

கெட்டிடான் பின்னே காலமாராய்வாய்க்
கேள்வியும் ஆண்மையுந்திரனுய்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விட்டுப்போங்கரிமால் கேதுவுணர்ந்தம்
விளம்பலாஞ் சோடசமதினால்
தொட்டுநால்தினம் சாதாரணவையம்
சூலெனுந் திகதியுமேகத்
தொட்டிடுஞ் சுக்கிரபுத்திபீராண்டே
சொல்மதி யெட்டதே பலன்கேள்.

89

கேளுகௌசிகனே பத்தைந்துக்குடையோன்
கிருபையாய்த் தனத்தினிலேறிக்
கோளுரா மதியோடிருக்கச் சேய்பார்வை
குருவவனில்லத்தேமேவ
மீளுமன்னவனின் சுயசித்ரம்பாரு
விவேகமும்பற்றறு நோக்கும்
மூள்வதாஞ்சுற்றம் பந்துக்கள் தடுத்தல்
முயற்சியுந் தளர்ச்சியும் பலதே.

90

கைமேற் பலித்திடுங் காலமாமிதிலே
காணலாம் வீணல்லபலனே
செய்கையே சூர்மதி சேயுடசித்ரம்
திருமணமுயற்சியே யாதல்
நையல்மனதோடிவன் ஓவ்வுதலாமே
நங்கை சுயமங்கையனை பால்
உய்வழிக்கே யுதவிசெய்கிற மாதவள்
உறுத்தலே சொந்தவகையார்.

91

கொள்வனே யிந்தரி பொன்னவன் காலமே
கோதுமன வேறுபாடாய்த்
தள்வதேனோ மனைபேர் ரெங்கநாயகி
சத்வகுணமுள்ள வனிதை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விள்பலனிப்படித்துணையிலே மீதமே
விடங்தேசி சித்ரமேக
உள்கிதைய கேள்வியே காரியின் சித்திரம்
உகந்தின்ப காதல்சுகமே.

92

கோதுகொள்ளாத நெஞ்சங்
கொள்வதே உபதேசச்சீர்
மீதிலே கவனம் வீழ்தல்
விலகுமே காரிமேலே
தூதுடன் கொடிகாலத்தே
சுகாதீத வாழ்வில் நோக்கு
மோதுமே அத்தோடின்னேன்
முயற்சியாந் தொடர்ச்சி ஞானம்.

93

கௌவிய மாயைதன்னைக்
கடக்கவே கலத்தைத்தேடி
வௌவுதல் சுகானுபோகம்
மருவுமே கொடிமால் காலம்
இவ்விதஞ்சுங்கன் புத்தி
யேகவே தசமுந் தொண்டும்
அவ்வகையுடனே நால்நாள்
ஆமினிப்பொழுதின் புத்தி.

94

சக்கரன் நவமே மாதம்
தானூறு மூன்றுநாளே
லக்கினவியம் வேந்தர்க்கு
நாலிரண்டில்லில்மாலோ
டொக்கவே சனியும் பார்க்க
உடந்தையே காதல் சூலாம்
மிக்கவே கவலை ஞானம்
விருப்பமே மயல்வெறுப்பும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

95

சாருதல் ஆசான் நோக்குஞ்
சதாசிவத்தருளின் நோக்குஞ்
சேருதல் செக்த்தின் மாயை
தீட்டுவான் ஞானவாளைப்
பார்பல நூலுமாய்தல்
பழக்கமுஞ் செய்தல் காலம்.
பூருவ வினைக் கொப்பாயோர்
பூவைச்சேய் தோற்றம்பாரே.

96

சிவநிலை காணும்வாரே தேடுவான் சூரிபுத்தி
இவளவேபத்தொன்பானு மெட்டொருதிங்களோடு
கவுசிகா யிருபானீர்நாள் காண்பிரமாதீசாகோலே
நவமிருதிதியாந்தேதி நவிலக்கேள்சந்திரபுத்தி.

97

சீரிளமதியும்வாக்கில் திசையவர்க் கொருபத்தாகிப்
பார்மகன்பார்வையேற்கப் பளிங்குடனிருப்பதாலே
ஈரெட்டுமாதச்சேதி யீட்டியமகவுமாதே
காருபாரகற்றியில்லங் கடப்பது தொடக்கந்தானே.

98

சுத்தஞானம் பெற்றுவாழப்
பித்தமேறிச் சித்தமொருபால்.

99

ஒருபாலிருபால் ஒய்விலாஞானப்பால்
பெருவானடைவான் பின்காணீ—மருவும்
பாரிகவனம் பாலகியின்மேற்கவனம்
சீரியயல் ஊரில்செல்.

100

சூக்ஷியாகாதபோதஞ் சொல்லுவானவையிலேறிக்
காக்ஷியாய்க்காணுமாறு கலைஞானவுதாரணுகி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சாக்ஷிகொண்டோதிச்செய்து தருவதுந்திரிவதாக
ஸாக்ஷிபெற்றெவரும்போற்ற மார்க்கமுந்தீர்க்கமெய்
[தும்.

101

செல்வமதிசெல்லத் தேய்நவமூண்
எல்லொன்றும் நாளிருபத்தீரும்—செல்ல
ஆனந்தமாசியா மிருபத்தோர்தேதி
ஆனந்தமேதொடர்ச்சிஆம்.

102

செந்திபதினோர் திங்களுட—னாறு
செந்திஉயிர் லாபம்சேரவே—நந்தியுறும்
இறைநோக்கமாக இலாபநாலாதிபதி
இறை முன்பு தானேர்வதே.

103

இல்லம்புகுவா னிசையாதெவர்நோக்கும்
செல்லாதவண்ணந் திரும்புவான்—வெல்லாத
மாயைதொடரா வகைபேபரிசுத்த
மாயை தொடர்ந்தேவரும்.

104

சேர்வதுபலபேர்மத்தி திவ்வியவுபதேசத்தை
ஆர்வமாயஞ்சாதோதல் அவைபலபுகுதலாதி
பார்மகன்புத்தியீதாம் பதினோருஇரட்டியாண்டும்
பீர்தசத்தெட்டுநாளே இராக்ஷதர்தை மூவொன்
[பான்.

105

சையெனவிகழ்ந்தபேருஞ் சரியெனமதிக்குமாறு
உய்யவே ஆத்மபோதம் உரகத்தின் புத்திபாரு
அய்யமில் நாலேழ்மாதம் அறுசதுர்தின மேசேதி
பைபராதிசைக்கு லாபம் பாய்ந்துபிர் பணபரத்தே.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

106

சொல்லேவழுவான் சோர்வுபடானே
கொல்லேறனையான் குளிர்மதியம்—சல்லியுடன்
வாக்கேறிநின்ற வளமைகுருபஞ்சம்
தாக்கியதால் நல்வசனம்தான்.

107

சோகமடையாதிவ்வாறே சுருதியுக்தி அனுபோகம்
பாகமாற்றி யனுபவித்தே பலன்யூகித்தே சுருதியெ
[னும்
பாகமிதுவே ராகுவிடப்பாரிருப்பத்து நால்வயதும்
போகமதிஅய்யிருபானீர் பொழுதேகாளயுத்தியிலே.

108

தமதாக ஆனிதானிருபத் தொன்றும்
விமலையருளாமேவுதல்—எமன்திசையே
பத்தொன்பானுண்டு பலனுமவன்காலம்
எத்தேயமும் போய்வருவதே

109

காரியுமுச்சதானங் கவிமனையேறிநிற்கப்
பாரந்தக்கவியுமீரில் பப்திபோடிருப்பதாலும்
காரியைமற்றோர்நோக்குக் காண்கிலாவகையினாலும்
பார்திரிவருடத்தோடு பக்கமேநாளுமூன்றே.

110

தானயல்போக்குமாதி சாஸ்திரம் பலநூலாய்ச்சி
தானனுபவமும்போதம் சம்சாரசாகரத்தைத்
தான்கடந்தலேக்கப்பாலுஞ் சார்ந்தவையேறித்தீய
தானவேர்மதங்கண்டித்துச் சமர்த்துடனெதிர்த்துக்
[கேட்போர்.

111

தியக்குறப்பேசல்சொந்த சித்திரம்சனிக்குப்போக
வயப்படமாலின்நூற்கள் வசனநல்லிதமேசேர்த்து

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வயப்படார்தமையும்பேசி வணங்குமார்பலதுசுற்றி
இயக்கமேன் இறைவன்கோபம் எய்தினுஞ் சிறை
[யேனுகும்.

112

தீமொழிபேசான் மால்போஞ் சிகிவரக்கருமக் கேள்வி
யாமிவன்கருதானே னு மவசமேயகலும் பின்னே
சாமியைக் காணுமாறு சதவலிதனைப் பந்தித்துப்
போம்வகை கருதான்காயம் பொருந்திடான் வாசி
[யேறி.

113

தொடர்பெனும் பிறவிநோயைத்
தொலைப்பதற்கான பாட்டை
தொடர்வதே மதியாயிந்தைச்
சுருக்கியே சூரியாக்கி
சுடர்விளக்கொளியே காணல்
சுக்கிரசித்திரத்தே
படர்வினைவந்த வாறும்
பார்த்திடல் அவிழ்தமாதி.

114

தூசறு கணிதமாதி
சுருதிகள் நல்லபோதம்
மாசறக் கவனமிவ்வார்
வளமை சூர்மதிசேயாள்கை
பேசலாம் பிழைச் சொல்லேது
பெண்ணராவினித் தீண்டாது
ஆமசனச்சகடையாதி
அமைதலே தேகவெப்பம்.

115

தெய்வமேவேதமாஸ்தி
செறிந்த சுற்றங்கள் அல்ல

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உய்வதெம்மதமு மொன்றென்
றுறுதிகொண்டாடிப் பேசல்
பெய்மதிமுகிலைக கண்டு
பேசுவான் மதிசூர் ஆறல்
செய்வதிப் படியாம் ராகு
செம்மலாற்பாது காப்பு.

116

தேடிமாடி ருப்பதாகும்
தேயமும்பலது போக்கு
வாடியபயிர் கட்கெல்லாம்
மழை யெனப் பொழிதலாகும்
ஓடிடும் ராகு பொன்னில்
உபதேசம்பலபேர்மத்தி
பாடியபனுவலாதி
படிப்படியோதல் சித்தி.

117

தொழுபவர்பலருபேர்கள்
துதிக்க நல்லுதாரங்காட்டி
வழுவறப்பேசல்நல்ல
வாய்மொழி யினிமைகிதம்
பழுதறுஞ் சோதிவீட்டின்
படியறிந்தெட்டப் பார்ப்பான்
முழுவதுமிப் போதாகா
முயற்சி பின்னெட்டுந்தானே.

118

தோர்வையாகானே யென்னத்
தொல் புவியாண்ட மன்னன்
பேர் பெருந்தவமே காலம்
எப்போது மன்னுகேளு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பார்புந்தி புத்திக்கெல்லாம்
பலிதமே நிருவிகற்பம்
சீருஞ்சாதனையாய்க் கொண்டே
செல்லு நாளதுவுமுற்றி.

119

நலமானமுத்தி ஞானிதிசையில்
நலமாய் கிடைக்கும்நாள் பின்பார்—பலனறிவாய்
சூரிபுத்தி போகக்காணும் வயதீர்பானேழ்
பார்பஞ்சம் ஐயய்ந்தேபார்.

120

புந்தி புத்தி நற்காலம்
பொருந்துங் கவனஞ்சுயமாக
வந்த தெட்டு நால்மதியும்
மருவும்தினம் நவமே
புந்திவியமே மேவுதலும்
பொழுதோடிருக்கச் சனிபார்க்க
மந்தர்க்கே மூண்சுயசித்ரம்
வளமைநலமாம் பண்டிபல.

121

பலபலசகடையாதி பலபலநாடுசுற்றல்
நலநலசிநேகமாதி கலகலக்காசுசேரும்.

122

சேருஞ்சிலவே யாரும்முடனே
சோருந்துகிலும் மீருஞ் செயலேன்.

123

நாலாவிதமேமனமிருத்தல்
நவிலுமால்மேல் ஞானிகவி
காலம் பலநூல்புவிக்குதவல்
கணிதம் கவனம்யார்க்குமிது

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

113

மேலாதரிதே நற்பாடம்
இயல்பாங் கயவாறுகாரே
மேலாம்நிலையே நிருவிகற்ப
விசாரணையாகூடி சாதனையே.

124

நிலவுலகத்தில்பல்பேர் நெருக்கமாயுருக்கமாகி
நிலவுதல் ரவியிந்தாறல் நேருநாள் பலதுபோக்கில்
பலன்தரும்படி போதிப்பே பகையிவர்க் கெவரு
[மாகார்
உலவுதல் பாதுகாப்போ டொப்பவேறு கில்பாரே.

125

பாரதில்மலைப்பு நீக்கிமேயமலையில்
பண்ணுவான் நிருவிகற்பத்தைச்
சீரதேமீண்டும் நாட்டிலேயுலவல்
தேசிகன் சனிசித்ரமெல்லாம்
பார்சடவெதுப்பும் பலதுபோக்காகப்
பலன்தரு மெவ்விதப்பலன்கேள்
பேரின்பக்கனியின் பலனதுயிதுவே
பேசலாம் புதன்புத்திமுடிவே.

126

நீயறிவயது முப்பதுமதியீர்
நீங்கியேநால் தினமந்த
ஞாயங்கேள் ருத்ரோர்காரி பங்குனி
நாள் திரியாமினிக்கேது
தூயவக்கேதுகாரிக்கு வியமே
சொல்லுயிர்க்கேநவமாகிப்
பாயவும்போகிபார்வையுமாகப்
பதிமூன்று மதிநவதினமே.

127

நெருங்குதல் ஞானம் நிலம்பலசுற்றல்
சுருங்குதல் ஞானம் தொடர்போரிடத்தே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

114

அருங்கனிஞான அமுதகலேயின்
பெருங்கடல்ஞானப்பிதேவித்தாய்.

128

நேசித்த வித்தைஞான
நிலத்திலே பதியவூன்றி
வாசித்த அன்புநீரை
வளமுறப்பாய்ச்சிக் கார்த்துப்
பூசித்து வாலேபாதம்
போற்றியே மாயைபுட்கள்
நேசித்து அணுகாவண்ணம்
நிலேபெற்ற மனத்தால்வேலி.

129

நொய்தா துய்தே
செய்தாழ் வெய்தான்.

130

நோய்வரிலேகும் நோக்கம்வேறேது
தாயிடம்நாடுஞ் சந்ததிபோலே
ஞாயிறுபகையில் நடப்பதிதுவே
பாய்மனக்குரங்கைப் பற்றிக்கட்டல்.

131

பருவமேழுமுப்பத் தொன்றும்
பக்கமூண்மதிபன் மூண்நாள்
வருடமுங் குரோதனவில்
மறிமதி பன்னீர் தேதி
பிருகுடபுத்தி காலம்
பிறைமுப்பத்தெட்டே யந்த
பிருகைந்து பத்துக்குள்ளோன்
பிறையுடன் தனத்திலேற.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

132

பாசம்விட்டுப் பசுவாகிப் பதியுமாகிப்
பாழ் குட்சிவாதைவிட்டு ஒருபோதுண்டு
நேசம்விட்டுப் பேச்சற்று நிட்டையாதி
நிலையாகிவிந்துகட்டும் நாதமீறும்
ஆசனங்கொண்டே யணலைமூட்டிமூட்டி
அவியேற்றுக்குண மாறற்றுப்பற்று
ரேசகபூரக மாதிகும்பித்துள்ளே
நேரோடத்தேரோட்டி வாசிபூட்டி.

133

பின்னேவாங்கி முன்னேவிட்டுத்
தன்னந்தனியாய்த் தன்னையறிந்தே.

134

பீடுபெற லோடுலவி
லோடுமெதி வீடுபுக.

135

புகர்சுடசித்ரமீதாம்
பொழுதுடனிந்துசெந்தி
அகலிடந்தனியேவாசம்
ஆம்சுகம் அதிகப்பேச்சேன்
ககனமுந்தனக்குத்தானே
காணலாங்காயகற்பம்
இகல்சோதிருந்திடவே சுகானுபோகம்
எய்திடலாம் ரவிசோமன் பூமன்மாற.

136

பூரணமறிதல்ராகில்
புதையலாமுன்னேவைத்த
காரணப்பொருளைக்கண்டு
காக்ஷியாய்ச்சாக்ஷியாகி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆரணப்படியாம்போக்கி
அகலப்பொன்காரிசித்ரம்
மாரணம்பண்ணித்தானே
மாயைவிட்டகல்வதாமே.

137

பெருகுமானந்தவாரி
பிரமவானந்தமேகம்
உருகும்வார் அாசுபோலாம்
உள்நயனத்தின்மத்தி
அருகிலோராழிமத்தி
யாடுமண்டபமுந்தோற்றம்
வெருவரக்காணக்காண
விநோதமேவினயக் கூத்து.

138

பேரம்பலமே பேதமறக்காணும்
நேரம்பலமாய் நித்திரையாய்ப்—பாரம்
பலமேஅலிசிகியில் பாயாதுவாசி
தலம் தசமுந்தாண்டுவான் தான்

139

பையரவனையவல்குல்
பாவையர் கூட்டங்காணும்
அய்யமில்லாதுகூடி
யாடலாம் சுக்ரபுத்தி
செய்வது இதுவே அன்னுள்
சேர்வது முப்பானுளும்
அய்மதிநாள் பன்மூன்றே
ஆம்விப ஆனிபன்னீர்.

140

பொழுதுடபுத்திசேரப்
பொழுதொன்றே யுண்ணலாகும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விழுமதீகுறைத்துவாங்கி
விழுங்குதல் உலகச்சுற்று
தொழுதுபின் செல்வார்கோடி
துகளறப் பலதுநாலும்
முழுதுங்கண்டெழுதலீதல்
முழக்கமே வழக்கமீதே.

141

மதிபுத்திபத்தோடொன்பான்
மதியதன்பலனைக்கேளு
மதிதனஞ்சுங்கனோடு
மந்தனுக் கைந்திலாகி
மதிதனைச் செவ்வாய்பார்க்க
மறைந்திவன் வேற்றூர்நோக்குப்
பதிவதேன் மலைகாவாசம்
பக்குவமுற்றுங்காலம்.

142

மாதவமுனியேயிவ்வார்
வயததுநீளப்போனால்
பூதலத்தோருக்கென்ன
பொருந்தும் நிச்சயத்தை யோதும்
காதலார்காதிமைந்தா
கமலத்தோன்வரைந்தகாலம்
ஆதலைக்கடந்து அல்லோ
அடைவது வுசிதமாமே.

143

மிருதியேனுணவோர்காலம்
விண்மயந்தன்மயாதி
தகுதிகண்டடங் கலோடுஞ்
சதவலிதன்னைக்கட்டல்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தகுமிதேமதிபூண்போக
சடுசடுவபதினேடு
மிகுமதிபத்தோடொன்று
மிகத்தினம் பஞ்சபஞ்சம்.

144

முனிவனே பிரமோதூதா
குனிசிலை யிருபானுலே
இனியறல் புத்தியோராண்
டனிமதியொண் நாளொன்பான்.

145

மூதறிவுடைமையோங்கு
முழுமதியென்னும்வீட்டின்
பாதையைத்துலக்கிவீடு
பண்ணியேவாயல்வைத்து
வேதையுண்டாகாவாரே
மெய்த்தீபவெளிச்சம்பார்த்தே
ஓதருமறைகட்கெட்டா
வுயர்நிலையிடத்தேபோக்காய்.

146

மெய்பதுகனகமாகும்
விலகிடுஞ்செவ்வாய்புத்தி
அய்யய்ந்துபன்மூன்று ஆண்டோர்மாதம்
அடுத்து நால்தினமேயாக
அய்யமில்பிரசோர்ப்பத்தி
அரிகுடந்திகதிரூலம்
பையராப்புத்திமூன்று
பத்துடனுலுமாதம.

147

மேல்தினம்ஆறோகு
மீனமேதிசையோர்க்காறில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சாலவேசுயமாஞ்சித்ரம்
சார்வனேகமனசித்தம்
யேலவிப்படியேபின்னில்
இருநிலத்திமைக்கெட்டாது
போலவான்பரிமேல்போக்கு
புனிதமேபொன்னுங்காரி.

148

மையமேமடைவாழ்விடமாக்கிச்
சையோகித்துத் தனிப்பெருங்கருணை
மொழிபலபேசி முழுதுணர்வற்று
மொய்க்குந்தேனை முழுதுண்டின்பம்.

149

வந்தபலனுப் மன்னவன்காரி
வாய்ப்பூட்டாகி மால்சிகிதன்னில்
விலகாவாறு விவேகமாகி
வீயாச் சடமாய் வீழாவகையே
உறக்கமற்று வுறுதியாக
ஊனுமேது வீனுமாகாது
வெட்டவெளியாய்ப் பட்டப்பகலாய்
வேற்றூர்கான மாட்டாமயமாக
வையமீதோர் வளமையாக
அய்யமின்றி அவிமாலேக.

150

கவிசூரிமதிசெந்தி சித்ரமெல்லாங்
காணுதபேரின்பக் கடாரங்கண்டு
தவியாது சுவர்க்கவழி நேராம்போக்குத்
தனதாகும் அகிபுத்திதாண்டும்பாரே
அவியாதசுடர்மணியாந்தீபமேற்றி
அமர்வானே நாற்பதுடன் பதினோர்மாதம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

புவியாள் வோய்தசதினமே பவாவில்திங்கள்
பொருந்து மட்டதினமேலே பொன்னன்புத்தி.

☞ இதில் சில வாக்கியங்களிருந்தன. பின் வசனத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

151

நல்லது கெட்டதென்ற
ஞாயமும் அப்போதேது
சொல்லது மற்றுத்தெய்வச்
சோதியைக் கலக்குமாறு
நல்வழிக் கபாடங்கட்டி
நானென்ற வார்த்தையற்று
அல்லென்றும் எல்லென்றெண்ணு
அகம்புற மொன்றதாகும்.

152

மால்கொடிகாலம் அப்படித்தானே
வகுக்கலாங் கவியுடசித்திரம்
மேல்மனைபோவான் தாலமும்வருவான்
விவகாரமேன் இனிமேலே
தாலமேயாண்ட கௌசிகாமுன்னம்
சாற்றுதற் கொருபலன் மறந்தேன்
காலமேகாரி திசைரவிபுத்தி
கருதிய தந்தையின்சேதி.

153

சேதியம்மட்டே சேதிகேட்டயர்வே
போதிலேமாறும் மீதுமேல்கேளே

154

சரியோடிந்து அறலோடரவில்
சரியாயதுவுந் தானுந்தானுய்க்
கிரியையினியேன் கேள்விகள்பலவேன்
அரியூணிதுவாய் அகலவும்மேலே.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

155

நாற்பான்மூன்றும் நாலொருமதியும்
யேற்பாயிருபத் திரண்டுநாளும்
பார்ப்பாயீஸ்வரப் பாடவைமூவேழ்
கார்ப்பான்வீடு கட்டிமுடிவே.

156

சாமன் திசையே சகலமும்சித்தி
சாமனும்ஆவி தனக்குமோக்ஷம்
தாமனோடாகச் சனியெதிராகச்
சாமன்சுயவூண் சதுரேழ்மாதம்.

157

ஆமிருபத்தி யாறேடொருநாள்
சித்திரம்சுயத்தும் சிகியிலுமுன்னே
வைத்தபொருளை வழியறிந்தெடுத்தே
கைத்தலநெல்லிக் கனியெனவாக்கி
வைத்துண்டின்ப வாரிதிமூழ்கில்.

158

ஏமனும்அஞ்சும் இறையஞ்சும்
காமனும்அஞ்சும் கலியஞ்சும்
காமனுஞ்சூரி கலைமதிசித்திரம்
ஆமதுகாலம் ஆகாரமேனும்.

159

புலன்பொறிகருவியாதி புணர்ச்சியேனுணர்ச்சியேனு
நலம்பெரும்பூமன்போகி நாளிலேஅசையாவாசம்
தலமதிற்குகையேசெய்து சடந்தனைக்கனகமாக்கி
மலங்கெட்டுமுன்னிருந்த வழியிலேவிழியைவைத்தே

160

மடத்தகலைமூலமென்ற
மவுனமாய்ப் பொன்சுன்காலம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சடத்தைவிட்டேகி மீண்டும்
சர்வமுந் தானேயாகிப்
படத்தலை நாகமென்னப்
பதுங்கியே பாய்ச்சலாகி
இடத்தனை யொருங்கே காணல்
இகத்திலோர் புதுமையாமே.

161

புலவன்புத்தி போயினிக்கேதுள்
நிலவரைவாசம் நினைத்தாலெழுதல்
பித்தனென்றே பேசவுலகம்
முத்தர்கண்டு முனியாவண்ணம்
தானும்அதுவாய் அதுவேதானாய்
மானும்படியே வழியதுபற்றி
ஞானிக்கிதுவாம் நாற்பத்தாறும்
பான்மதிநாளும் பன்னுறேக.

162

சுங்கன்முப்பா நாலுமாதம்
சுங்கன்திங்கள் துவிவீட்டேறி
மங்கலன்பார்க்க மாலுக்கேமூண்
சுங்கன்பலன்கேள் சுயசித்திரத்தே.

163

அந்தநாளிவனை யாவருங்காண
அரிதரிதாகுமே யப்பால்
வந்துலகத்திலுலவுவான் வியப்பே
வான்மதிசெந்தியில் மவுனம்
தந்தையுண்ணல் சோழநன்னாட்டில்
சமாதியே கட்டுவானொருவன்
கந்தன்பேருடையோன் அவனிவன்பொருப்பே
காணலாம்போகி பொன்சித்திரம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

164
அசையா திசையாய்
வசையே னிசையேன்.

165
உண்ணுன் எண்ணுன்
கண்ணுல் விண்ணும்.

166
சித்திதருவான் முத்திபெருவான்
சத்தியமிதுவே நித்தியம்பூசை.

167
காரிபுதன்கொடி சித்ரஞ்சகசநிட்டை
கண்டார்க்கு உண்டுபலன் கர்மம்போகும்
யாரிடத்திலிப்புதுமை காண்பார்பூவோர்
அரசனேயெனக் காதிமகனுமற்ருேர்
பார்பதியுமுவகையுடன் காகமேநில்
பாலனிவன் புதன்திசையில் ராகுபுத்தி
சேர்கிற காலந்தனிலே ராசரீகம்
செயவேணுமே நின்ற கிரகசாரம்.

இந்தக் கேள்விக்கு விடை வசனமாயிருந்த படியால் பின்னுலே சேர்க்கப்பட்டிருக்கிறது.

168
இத்துடன்சுக்கிரபுத்தி ஏகுமேநாற்பத்தொன்பான்
அத்துடனெட்டுமாதம் அட்டமஇரட்டிநாளே
மித்திராசுபானுகன்னி வீட்டிலேபதினேந்தேதி
அத்தின்பின்சூரிபுத்தி அதற்குமேற்பலனேயோத.

169
ஓதவேமுடியாதெற்கு ஊழிகண்டனுபவிக்குஞ்
சாதனையடைந்தபின்னே சாதகப்பலனெதற்கு
ஆதலாலிவனின்சேதி அலிதிசைமட்டுங்காணும்
கேதிலேபரத்தோடொன்ருய்க் கிட்டலாம்பலன்
[மேலில்லை.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

170

திரிகோணமதியமுறத் திரராசிவேந்தனுற
அரியாவி கேந்திரமே ஆனநாள்—சரிமெசயலே
சோதியோடொன்றறவே துலங்கும்மறுபிறப்பு
ஏது இதில் முடிவதே.

171

கருணைகொடு உவகையொரு
கருவிலருள் பெருமைபெரு காரணீகமலிமாலி
கலைமதியநதியறகு புனைசடில
பகவசெகத்காரணு ஆதிசிவமே
பொருவசுரர் குலமறவே
திருவயிலை விடுமுருக போதனனந்த குருவே
புவியிலிது மகனுடைய
செயலிதுவே முடிவதுவாம் பூரணமானகதையே
ஒருவனுடன் உமைமுருகன் பலமுனிவர்
கவுசிகனும் உவகைகொண்டாடிமகிழ
உலகிலிவன் கவுணியர்கோன்
எனவுதய மதவயிரி உத்தமபாலனுகும்
பெருவுலகும் அலைகடலும் மதிகதிர்விண்
மறைசமயம்பிறங்கு மற்றவையும்வாழி
பிறையணியும் இறையுமைபால் விடைகருதி
யவரவர்தம் நிலையணுக வாழியே.

இவ்வாறு இது முடிந்தது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ பரமேஸ்வரி நாகபுஜங்கண்ட விஸ்வாமித்திர மகாவாக்கிய சம்வாதம்.

வசனம்.

ஞானாமிர்த சமுத்திரமாய், சர்வதேவர்களும் ஸ்தோத்திரம் புரிகின்ற ஞானப்பிரகாசமாய், சந்த்ர கிரீடம் ஜ்வலிக்கின்ற ஜடாபாரத்தையுடையாய், நவ ரத்னமணி ஒளிஉடையாய், உன்னுடைய உபயபா தாரவிந்தங்களையும் பிறிவில்லாது வணங்குகின்றேன்.

ஏகவஸ்துவாய், இரண்டு வினையாய், மூன்றுமலங் களாய், நான்குவேதங்களாய், ஐந்துபூதமாய், ஆறு சமயமாய், ஏழு கடல்களாய், எட்டுத்திக்காய், ஒன் பது ரத்தினங்களாய், நவக்கிரகங்களாய், பத்துப் பக்ஷமாய், பதினோரு ருத்திரர்களாய், பதினொருபாக மாய், பனிரெண்டு சூரியர்களாய், பதின்மூனறு குணங்களாய், பதினாலு உலகமாய், பதினைந்து உப நிடதங்களாய், பதினாறு கலைகளாய், பதினெட்டுப் புராணங்களாய், இருபத்துநான்கு தத்துவங்களாய், இருபத்தெட்டு ஆகமங்களாய், ஐம்பத்தோரக்ஷர மாய், அறுபத்துநாலு கலையாய், பலதத்துவாதி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

களாய், நாநாவித தேவர்களாய், கணங்களாய், பிரகாசமாய், ஊழிஊழி காலத்திலும் சதோதயமாய் விளங்குகின்ற பரிசுத்தமான லோகமாதாவே! அம்மையே! அங்கயற்கண்ணியே என்று பலசித்தர்களும், முனிவர்களும், ரிஷீஸ்வரர்களும், மஹாகைலாச பருவத சிகரத்தில் நாநாவித புஷ்பங்கள் நிறைந்த விசாலமாகிய தடாகங்களாற் சூழப்பட்ட காந்தர்வ சோலையின் சமீபத்தில் இரத்தின சிம்ஹாசனத்தின்மீது யோகாசனத்தில் வீற்றிருந்தருளிய ஸ்ரீ உமாதேவியாரை அன்புடன் நமஸ்கரித்துநிற்க, அம்பிகை ஆசீர்வதிக்க, மஹா தவசிரேஷ்டர்களாகிய காகபுஜண்டர், விஸ்வாமித்திரர், பாராசரர், போகர், பிருகு, அத்திரி, ஜெயமுனி, வசிஷ்டர், அகஸ்தியர், கௌதமர், பிருங்கி இத்தனைபேர்களும் இன்னும் பலரிஷீஸ்வரர்களும் ஒரேகூட்டமாக ஜெகதீஸ்வரியினிடஞ் சென்று வணங்கி, எழுந்துநின்று ஸ்தோத்தரிக்க, மாதாவானவள் கடைக்கண்ணுற் பார்த்து அருள்செய்ய, இன்னவர்கள் அனைவரும், பருவதராஜன் புத்திரியாகிய மஹாதபோவடிவமே! உவமானமில்லாத ஞானபராசக்தியே! ஆதி ஆனந்தவல்லியே! ஜோதியே! யாருமறியமுடியாத பிரகாசவடிவமே! என்று ஸ்துதிசெய்ய, உமாதேவியார் ஸ்தோத்திரம் பண்ணப்பட்டவர்களில் காகபுஜண்ட மஹரிஷியை மாத்திரம் தமது பரிசுத்தமாகிய அருட்பார்வையால் அங்கீகரித்து, அளவுக்குமிஞ்சிய தவத்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தைச்செய்தவனே! நீ வாழக்கடவாய். எனது சமீபத்தில்வந்து மெதுவாக அமரக்கடவாய். பிரஹ்ம சொரூபத்தினிடத்தின் மெஞ்ஞானப் பக்குவத்தால் எதார்த்தத்தை யறிந்து, எந்தக் கற்பகாலங்களிலும், எந்த வஸ்துவினாலும் அழிவுபெறாத மஹரிஷியே! ஹே! காகபுஜண்டரே! இப்பூமண்டலத்தில், ஒரு பாலகன் ஞானபக்குவியாகி வரப்போகிற பொருத்தமாகிய சாரங்களைத் தெரிந்து, நன்றாய் ஆராய்ச்சி செய்து, எந்தெந்தக்காலங்களில் என்னென்ன காரியங்கள் எப்படியெப்படி நடக்குமோ அவைகளை அப்படி அப்படியே சொல்லுவாயென்று கூற, உடனே காகபுஜண்டர் விஸ்வாமித்திரரைப் பார்த்து, பாரத கண்டத்தில் ஒருவன் தெய்வ ஆக்ஞையோடு பரிசுத்தவானாகப் பிறக்கப்போகிறான். அன்னவனது கிரக சார நிலைமைகளைச் சொல்லுவாயென்று கூற, தவ சிரேஷ்டராகிய முனிவரே! நான் கூறுகிறேன், கவனமாய்க்கேள். தாங்கள் மொழிந்தபடி அன்னவனுடைய கிரகநிலை: உத்திராடம் ஒன்றில் சூரியன், பூராடம் மூன்றில் புதன், சதையம் ஒன்றில் சுக்கிரன், கார்த்திகை இரண்டில் குருவக்கிரம், அனுஷம் நாலில் செவ்வாய், சித்திரை ஒன்றில் சனி, அஸ்தம் இரண்டில் கேது, சதயம் மூன்றில் சந்திரன், ரேவதி நாலில் ராகு, லக்கினம் மகரம் நாலாம் பாதம், இருபத்தேழாவது வருடம், ஒன்பதாவது மாதம், இருபத்தொன்பதாவது தேதி, தேவகுரு நாள், வளர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பிறையின் நாலாவது திதி, இருபத்திநாலாவது நக்ஷத்திரம், பதிபத்திரவாகரணம், வியநாமயோகம், புருஷகாலம், முக்குணத்தின் முதற்குணவேளை, உதயகால முதல் நாலு நாழிகை, இருபத்தெட்டு விநாடி, இந்தக் காலத்தில் தோன்றக்கூடிய இன்னேனது சரித்திரத்தை நன்ருய் ஆராய்ந்து நயமாகச் சொல்லுவீரென்று கூற, காகபுஜுண்டர் ஒன்பது விதமான நாடி தேவதைகளின் நிஷ்டையைச்செய்து முடித்துக்கொண்டு, உமாதேவியார் பாதத்தில் நமஸ்கரித்து எழுந்தகாலத்தில், அர்த்தநாரீஸ்வரர், சுப்ரமண்யர், மற்றுமுள்ள கணங்களும், சித்தர்களும் கூட்டமாக வந்து சேர்ந்தார்கள். உடனே உமாதேவியார் எழுந்து பரமேஸ்வரனுக்கு நமஸ்காரம் செய்து, தனது சமீபத்தில் ஓர் ஆதனமிட்டு அமரச்செய்தாள். ஈஸ்வரனும் மற்றெல்லோரையுங் கடைக்கண்ணுற் பார்த்து உட்காரச் செய்தார். அப்போது காகபுஜண்டர் குமாரக்கடவுளை ஸ்தோத்திரம் செய்தார். பின்பு முருகக்கடவுள் உமாதேவியாரின் இருபாதங்களையும் பணிந்துவிட்டுப் பிதாவாகிய யீஸ்வரன் பக்கத்தில் வீற்றிருந்து, மற்றத் தபசிரேஷ்டர்கள் நமஸ்கரிக்க, அவர்களையெல்லாம் தனது கண்மலர்களாலேயே பார்க்க அவர்களும் ஆசனத்திலமர்ந்தார்கள்.

அப்போது யீஸ்வரி புஜுண்டரை நோக்கி, இந்த மகத்துவமுள்ள சரித்திரத்தைச் சொல்லக்கடவாயென்று கூற, முனிவரும் தாயே! இந்தச் சரித்திரத்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தைச் சொல்ல என்னால் முடியுமா? முடியாதே. ஆனாலும், என்னாற் கூடியமட்டும் சொல்லி முடிக்கிறேன்.

சமுத்திரஞ்சூழ்ந்த இப்பூமண்டலத்தில் பிறக்கக் கூடியவர்களில் இந்த யோகசிரேஷ்டன்போல கோடிக் கொன்றிருக்குமா? அதுவும் சந்தேகம். இதுவெகு ஆச்சரியம். இன்னவனுக்குக் கிடைத்த அதிருஷ்டத்தைப் போல எவருக்கு எளிதாகக் கிடைக்கும். இவன் முன்ஜென்மங்களில் செய்துவந்த நன்மையானது இந்த ஜென்மத்தில் பூரணமாகப் பலித்துவிட்டது. இந்தப் புண்ணிய புருஷன், பூலோக ஜனங்கள் நன்மை யடையவும், அந்நிய மதங்கள் நசிக்கவும், பல்வளங்கள் செழிக்கவும், சீர்காழியிலுதித்த அந்தணர் குலச்சிறுவன்போல் வருவான்.

ஹே பார்வதியே! உன்னுடைய அருட்பார்வையும், பரமேஸ்வரனது நோக்கமும் பூரணமாகக் கொண்ட இந்தப் பாலகனை, குமாரக் கடவுளைப்போல பெரிய சந்தோஷத்துடன் நீயே சிருஷ்டித்தாய். இந்தப் புண்ணியவான், பிரமதேவனது விதியைவென்று விடுவான். எவருக்கும் அஞ்சான். மாயாஜாலங்களுக்குப் பயப்படமாட்டான். சிலநாள் உலக மாயையில் வசப்பட்டது போலிருந்து, அதை மிஞ்சவிடாது இல்லறத்தை நீக்கித் துறவறம் பூண்டு ஞானியாய் அநேகம் பேர்களுக்கு மனத்திலுள்ள துன்பங்களை நீக்குகின்ற தன்மையையுடையவனாவான். இவ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

னது சரித்திரத்தின் ஆச்சரியமானது பின்னாலே சொல்லச்சொல்ல விஸ்தாரமாகத் தெரியும். அதை என்னாலே சொல்ல வேண்டுமானால் உமாதேவியாராகிய உமது திருநோக்கும், எம்பிரானது பார்வையும், குருநாத முருகபிரானுடைய கருணையும் இருக்குமானால் சொல்லுகிறேனென்று கூற, அம்மை, யீசன், கந்தன் இம்மூவரும் முனீஸ்வரரை நோக்கித் தவ சிரேஷ்டரே! நீ இனித்தெரிந்து கொள்ள வேண்டிய விஷயமும் இருக்கிறதா? உனக்கு எல்லாந் தெரியுமாதலால், இச்சரித்திரின் விபரத்தைக் கூறுவாயென்னக் காகபுஜண்டர் விஸ்வாமித்திரரை நோக்கி, நவக்கிரகங்கள் நின்ற விதங்களெல்லாம் தெரிந்து கொண்டேன். அவற்றில் முதலில் லக்கினத்தின் பலனை மட்டுங் கூறுகிறேன். சாவதானமாகக் கேட்பாய்.

இலக்கின பலன்.

லக்கினத்திற்குச் சொந்தமாகிய சனிபகவான் உச்சமாயிருக்கிறான். அந்த மகர லக்கினத்தைக் குரு பார்க்கிறார். அந்த பிரஹஸ்பதியைக் கெம்பீரமாகச் செவ்வாய் பார்க்கிறார். இந்தக் காரணங்களாலும், ஐந்தாமிடத்தில் தேவகுரு நிலைபெற்றிருக்கச் சனி லக்னத்திற்குப் பத்திலிருப்பதினாலும், துலாராசிக்குடைய சுக்கிரபகவான் வாக்கு ஸ்தானத்தில் சந்திரனோடு வீற்றிருப்பதலாலும், சிரசு சிறியதாய்ச் சரீரம் சிகப்புநிறமாய், உடம்பு ஒல்லியாய் இருக்கும். சகல

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கலாசாஸ்திரங்களேயுங் கற்றுவிடுவான். தான் கற்றதை விருப்பமுடையவர்களுக்கு வஞ்சகமின்றி எடுத்துக் கூறுவான். அசைவற்ற நெஞ்சுடையவன். பூர்வ புண்ணிய நிலைமையும், சாந்தமும், அருளும், அன்பும் குடிகொண்டவன். மான்போன்ற பார்வையையுடையவன். இவனது கண் பார்வை பின்னேக்கமாகவே தோற்றும். உலக மயக்கங்களை அடியோடு அகற்றி, நிருவிகற்ப சமாதி நிலைமையைப்பற்றி மேலாகிய செய்கைகளை யடைந்து, துவாதசாந்த பரமசந்திர ஜோதியையும், பராபர வடிவத்தையுங்கண்டு தெளிவான். யார் பார்த்தாலும், அவரவர்களுடைய சித்தங்களைக் கவர்ந்துவிடுகின்ற மனத்தையும் பார்வையையுமுடையவன். பல ஜென்மாந்தர முயற்சியின் தன்மையால், தபோமகிமையின் சொரூபமாக வந்து பிறந்த இவனது இலக்கினத்திற்கு மட்டுங் கூறிய பலன் இதுவாகும். இந்த லக்கினத்திற்கு ஐந்தாமிடமாகிய ரிஷபத்தில் குரு இருந்த காரணத்தினுல், ஆகாயகமனமும், பரகாயப்பிரவேசமும் சித்திக்கும். லக்கினுதிபதி வெகு பலமாய்க் கேந்திரத்தோடு உச்சமேறிக் கர்மஸ்தானத்தை அடைந்திருந்ததினுல், இவன் பிரமாதி தேவர்களையும், உலகத்தார்களையும் பொருளாக மதிக்கமாட்டான். இனிமேல் இரண்டாமிடத்தின் பலன்கூற ஆரம்பிக்கிறேன்.

இரண்டாமிடப்பலன்.

வாக்குஸ்தானமாகிய கும்பத்தில், வெகுதீக்ஷண்யமுள்ள சுக்கிரபகவானும், சந்திரனும் வீற்றிருக்க,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விருச்சிகராசியிலிருந்த செவ்வாய், வாக்குஸ்தானத்தைப் பார்க்க, வாக்குஸ்தானாதிபதியும் தனஸ்தானாதிபதியுமான சனி உச்சமாய்க் கெம்பீரமாயுமிருந்த காரணத்தினாலும், வாக்கானது திக்கலாயிருந்தாலும். வாக்குஸ்தானத்தில் சந்திரனிருந்த நன்மையினால் வார்த்தை குளிர்ச்சியும், அன்பும், கெம்பீரமான வசனமும். உதாரமும், ஊக்கமும், நவினமான சாய்ந்த பார்வையையுமுடையவனாயிருப்பான். சிறிய இடைகளோடுகூடிய மாதர்கள் கையில் அகப்படமாட்டான். சமயத்திற்குத்தகுந்த யூகமுள்ளவன். சகல தத்துவங்களையும் தெரிந்துகொள்ளுவான். கைகால்கள் இராஜ சின்னத்தைப் பொருந்தியிருக்கும். சிங்கம்போன்ற துணிவையும் வீரியத்தையுடையவன். சந்திரனுக்கு நாலாமிடத்தில் குருவிருந்த காரணத்தினால், கெஜகேசரியோகமும் இவனைப்பொருந்துகிறது. ஒரு சிங்கத்தைக்கண்ட அளவிறந்த யானைகள் அலறி ஓடுவதுபோல, இவனைக் கண்ட சத்துருக்கள் நடுங்குவார்கள். உலக பாக்கியங்கள் கூப்பிடாமலே வந்துசேரும். முரச யோகமும் இவனுக்கு உண்டு. முழுமுதலின் சொரூபத்தைத் தெரிசிப்பான். உலகத்திலுள்ள ஜனங்களின் மனத்தைக் கொள்ளை செய்யும் சாமர்த்தியமுடையவனாவான். அன்னிய மதங்களை ஜெயிக்கும் ஞான பண்டிதனாவான். நீயே பார்த்துக் கொள்வாய். யாதொரு தீங்கும் இவனுக்கு உண்டாகமாட்டாது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பூமி அதிரும்படி நடக்கமாட்டான். இவனது செல்வாக்கு எங்கும் மேலாகவேயிருக்கும். பலவண்டிகள் எப்போதும் சமீபத்திலேயேயிருக்கும். மலை, காடு இவைகளிற் சஞ்சாரஞ் செய்வான். சாகரத்தைக் கடந்தும் பிரயாணம் செய்வான். மரக்கலமேறிப் போவான். அன்னிய நாடு சென்று அவர்களோடு எதிர்த்து வெற்றிபெறுவான். ஏழாமிடத்து அதிபதி சந்திரனுயிருந்த காரணத்தினுல், பூர்வ புண்ணிய மிகுந்த ஓர்பாவை மனைவியாய் வாய்ப்பதாகும். இவனது மோக்ஷஞான காரியங்களில் யாதொரு தாழ்வும் செய்துவிடாத கற்பு நிலைமைவாய்ந்திருப்பாள். இதுவரை இரண்டாமிடத்தின் பலன் கூறப்பட்டது. இனி மூன்றுமிடத்தின் பலன் சொல்லுகிறேன்.

மூன்றுமிடத்தின் பலன்.

மூன்றுமிடத்தில் ராகு இருக்கவும், ஐந்தாமிடமாகிய ரிஷிபத்தில் குரு இருக்கவும், அம்மூன்றுமிடமாகிய சகோதரஸ்தானத்தைச் சூக்ஷமமாகக் கேது பார்க்கவும் பிரஹஸ்பதியைச் செவ்வாய் பார்க்கவும், கேதுவைக் குரு பார்க்கவுமாகிய காரணங்களால், இவனுக்குச் சகோதரம் நான் காகும். மத்தியில் ஒன்றுபோய்விடும். மூன்று மிஞ்சும். பிற்காலத்தில் ஒன்றுதான் மீதம். இந்த யோகவானுக்கு எந்தவிதமான நோய்களும் பொருந்தமாட்டாது. அப்படியே ஒருவேளை வந்தாலும் உடனே தீர்ந்துவிடக்கூடிய மார்க்கங்களெல்லாங் கண்டு கொள்வான். சகல நன்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மைகளும் இவனைச் சொந்தமாகச் சேரும். மனம் மாறுத உத்ஸாக மாகவேயிருக்கும். உறுதியான சொல், மாறுதவார்த்தை, பிரியமான வசனங்கள், குற்றமில்லாத ஹிருதயம், சமானமில்லாத ஞானம், மோக்ஷம் இவைகளை அடையக் கூடியவனுமாவான். மூன்றும் வீட்டுப் பலனிதுவாம். அவ்வீட்டோன் திசை இவனுக்கு எட்டு வயதுக்குமேல் வரும், அப்போதுதான் மாயாபந்தமும், மாயை அகல்வதும், அயல்தேச சஞ்சாரமும் நேரும். இனி நாலாமிடத்தின் பலன் கூறுகிறேன்.

நாலாமிடத்தின் பலன்.

நாலாமிடமாகிய மேஷ லக்கினாதிபதியாகிய செவ்வாய் லாபஸ்தானமாகிய பதினோராமிடத்திற் சேரவும், அந்தச் செவ்வாயைக் குருபார்க்கவும், நாலாமிடத்தைச் சனிபார்க்கவும், பத்தாமிடத்ததிபன் சந்திரனோடு தனஸ்தானத்திற் சேர்ந்திருக்கவும், இவன் ஜனித்தவனாகையால் அம்மான் வர்க்கத்தில் செல்வம் அதிகமாக இருக்கும். இலக்ஷ்மீதேவி வாசஞ் செய்வாள். ஓர் அரசனுக்குச் சமமான வாழ்வுண்டாகும். அப்படி அம்மான் வர்க்கத்தார் வாழ்வதினால் இவனுக்கோர் லாபமுமில்லை. அதனால் உலகத்தார் பெருமையாகமட்டுங் கூறுவார்கள். உலக வாழ்வை மனத்தில் ஒரு பொருட்டாய் எண்ணமாட்டான். வஞ்சகமுடையவர்களிடம் சேரமாட்டான். தீமைசூழ்ந்த இடங்களுக்கு அக்கினிபோலாவான்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சகல குணங்களும் நிறைந்திருக்கப்பட்டவனுயிருப்பான். மாமன் வர்க்கத்தாராலும், பிதா வர்க்கத்தாராலும் சிறிது கல்வி பயில்வான். ஜோதிட வித்தையும், கணித சாஸ்திரமும் வெகுவிலேயே இவனைத் தொடரும். சகல பாண்டித்தியத்திலும் வல்லவனுவான். குற்றமில்லாத பாஷைகளைமட்டும் படிப்பான். பேதமின்றிச் சகலவிடங்களிலும் சஞ்சாரஞ் செய்வான். பெரிய இராஜசபைகளிலேறி உண்மை ஞானத்தைப் போதிக்கும்படியான கீர்த்திவாய்ந்த வித்தியா சாமர்த்தியமுடையவனுயிருப்பான். நானுவித வண்டிகளிலும், வாகனங்களிலும் போக்குவரத்துடையவன். ஒரு அளவுக்குட்பட்ட பதார்த்தங்களை விலக்கி, அதற்குமேலுள்ள அகண்டாகாரமான அதீதவஸ்துவை அடைவான். வெகு இனிமையும் கண்டிப்புமுள்ள பேச்சுக்காரனுயிருப்பான். தன்னைப்பற்றிப் பெருமையாகப் பேசமாட்டான். சகல பெண்களுக்கும் நிச்சயமாகச் சொந்தப் புத்திரன் போல் ஆய்விடுவான். அநேகவித தேசசஞ்சாரமும், ஸ்தலயாத்திரையும், மூர்த்தி சேவைகளும் எட்டிய வரை செல்வான். சஞ்சார காலங்களில் இடம், சுகம், ஆகாரம், பொருள் இவைகளை எதிர்பார்க்க மாட்டான். இனிமேல் மாதாவின் செய்கைகளைச் சொல்லுகிறேன் கேட்கக்கடவாய். இவனது மாதா செல்வவானது மனையில் பிறப்பாள். ஐந்து சகோதரர்கள் பிறந்து கடைசியில் இரண்டுபேர் மிஞ்சுவார்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கள். இந்தப்பாக்கியமுள்ள யோகவானைப் பெற்ற ஒரு குணத்தால் புண்ணியம் வாய்ந்த அடிவயிற்றை யுடையவளாகும். உத்தமமான கற்புநிலைமையை யுடையவளாகும். தனுர்லக்கினத்திற்கு ஒன்பதாமிடத்தில் சனிவரும்போது, இன்னவள் சரீரத்தை விட்டுவிடுவாள். இவளது நாமம் சுந்தராம்பாள். இந்தப்புண்ணிய புருஷன் சகல மந்திரங்களின் தந்து வார்த்தங்களை அறிவான். இவன் அன்னைக்குமட்டும் சரமகிரியை செய்வான். பிதாவுக்கு அந்தியகிரியை செய்யமாட்டான். செய்யமுடியாது. செய்யக் கூடாத நிலைமையிலிருப்பான். இந்த நாலாமிடத்ததிபதியாகிய செவ்வாயினுடைய திசையானது இன்னவனைப் பொருந்தமாட்டாது. இந்தவிதமாக நாலாம் வீட்டுப்பலன் முடிந்தது. இனி ஐந்தாம் வீட்டுப் பலன்கூற ஆரம்பம்.

ஐந்தாம் வீட்டுப்பலன்.

ஐந்தாமிடத்ததிபதியாகிய அசுரகுரு யாதொரு கெடுதியுமின்றி, சந்திரனுடன் வாக்குஸ்தானமாகிய இரண்டாமிடத்திலிருக்க, ஐந்தாமிடத்தில் தேவகுரு அமர்ந்திருக்க, செவ்வாய் கெம்பீரமாகக் குருவைப் பார்த்திருக்க, ஐந்தாம் வீட்டோனையும் ஆறல் பார்க்கப் பிறந்தவனானபடியால், இவனது மாமன் செல்வபாகங்கள் மைந்தவர்க்கத்தினிடையே வந்துசேரும். மாமவர்க்கத்தார், க்ஷேமமாகவும் கல்வியுடையவர்களாகவுமிருப்பார்கள். யாதொருவித செல்வத்தை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

யும், க்ஷேமத்தையும், கல்வியையும் இவன் கருத மாட்டான். சதோதயமான ஞானசம்பத்தையும், கற்பக நிதியையும் அடைவான். இவனது வம்ச மூதோர்களும், பிதாவரையுள்ளவர்களும், சமமான கல்வியும், தெய்வபக்தியுடையவர்களுமாயிருப்பார் கள். இவன் துறவியான காலத்திலும் பிதாவினிடம் அந்தரங்க பக்தி வைத்திருப்பான். ஓர் புத்திரயோக மட்டும் இவனுக்கு உண்டு. அதுவும் பெண்ணுகவே யிருக்கும். குடும்ப சம்பந்தமாகிய ஓர் பெண் மகவு உதித்தவுடன், பற்று நீங்கி அழியாத பெரிய ஆசை யைப் பொருந்தி யிருக்கப்பட்ட ஞானபதத்தில் ஆசைவைப்பான். ஆதியில்விதித்த விதியானது இவ் வாறிருக்கிறது. அது நடந்தே தீரும் என்று காக புஜண்டர் கூறவும், ராஜரிஷியாகி விஸ்வாமித்திரர் முனிவரை நோக்கி, இவனுக்கு அப்படி அனுதி காலத்திலேயே விதிப்பு ஏற்பட்டிருக்கிறபடியினுலே துறவுபெற்று அதீதமாகிய ஞானபதவியை அடைய வேண்டியதிருக்கிறபடியினுலே முன் ஜென்மங்களில் என்ன தவம் செய்து முடித்தானென்று கேட்க, ராஜ ரிஷியே! நீ கேட்டதன் முழுவிபரங்களையும் நந்தி தேவர் விஸ்தாரமாகக் கூறுவார். அதனுல் தெரிந்து கொள்ளலாம். மாயாசம்பந்தமான உடம்பை யடைந் தும், மாயையை அகற்றக்கூடிய வல்லபமும், உலகப் பற்றைவிடுகிற ஆற்றலும், சதாசிவ சொரூபதரிசனம் பெறுதலும், மாருத இன்பநிலையை அடைதலுமான

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

குணங்களைப்பல ஜென்மாந்தரங்களாகப் பழகிவந்த முறைமையுடன் சூரியனுற்பத்தியாகிற காலத்திற்கு முன்னும், சமுத்திர அலை உண்டாகிற காலத்திற்கு முன்னும் இவன் இவ்விதமான மோக்ஷமுயற்சியிலே யே வந்திருக்கிறுனதலால், இச்சென்மத்தில் முடிவான பரமபதத்தைப் பெறுவான். கோடியிலும் அருமையுடையவனுகி உலகத்திற்ருேன்றுவான். இனிப் பிறக்கமாட்டான். பிரமதேவனது கட்டளையின்படி சில உலக அனுபவங்கள் வரும். தெய்வகுருவைச் செவ்வாய் பார்த்திருக்கிறபடியால், தெய்வ ஆக்ஞையினுல் பிறந்தவன். இவ்வாறு ஐந்தாமிடத்தின் பலன் கூறிமுடிந்தது. இனி ஆருவது இடத்தின் பலன் கூறுவாம்.

ஆறுமிடத்தின் பலன்.

ஆறுமிடத்ததிபதியாகிய புதன், பனிரெண்டாமிடமாகிய தனுசில் சூரியனேடு சேர்ந்திருக்க, துலாராசியிலிருந்து மூன்ரும் பார்வையாகச் சனிபார்க்க, ஆறுமிடத்தை விருச்சிகராசியிலிருந்து செவ்வாய் பார்க்க பிறந்தவனுனபடியால், இவனுக்குச் சத்துருக்கள் யாருமிருக்கமாட்டார்கள். அப்படியே ஒருவேளை சத்துருக்கள் வந்தாலும் ஜெயித்துவிடக்கூடிய ஒழுக்கமும், கலங்காத மனமுங் கொண்டவனுவான். தோல்வியென்பது ஓரிடத்திலும் வராது. வெகு சூக்ஷமமாகவே உலக காரியங்களைச் செய்வான். சமீபத்தில் வரக்கூடிய ஜனங்களின் எண்ணங்களைப்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பார்வையினுல் தெரிந்துகொள்ளக்கூடிய பக்குவம் வாய்ந்திருப்பான். இவனுக்குத் தாய்தந்தை, சுற்றத்தார்கள், மனைவி, புத்திரன், சினேகிதர்களாலும், மிருகங்கள், பக்ஷிகள், சமுத்திரம், ஜலம், அக்கினி, காற்று இவைகளாலும் யாதொரு விரோதமும் வர மாட்டாது. வியாதிபயம் இவைகளில் வசப்படமாட்டான். எல்லோரையும் எதிர்த்துப்போகக்கூடிய எம தருமராஜனது பகையுமில்லை. அந்த எமனும்கண்டு அஞ்சக்கூடிய நிலைமையிலிருப்பான். உலக அரசர் களுக்கும் கொஞ்சமேனும் அஞ்சமாட்டான். இந்த விதமாக ஆறுமிடத்தின் தன்மையென்று காகபுஜண்டர் விஸ்வாமித்திரரை நோக்கிகூற, அம்முனிவன் புஜண்டரைப்பார்த்து, இந்தப்பாலகனுக்குச் சத்துருக்கள் ஒருவருமில்லையென்று கூறினீரே! சத்துருஸ்தானுதிபதியும், ஆறுமிடத்ததிபதியுமாகியபுதனைச் சனிபார்ப்பதினுல், சத்துருக்களால் தீமைவாராதோ வென்றுகூற, நீ சொல்வது சரிதான். மஹாமகத்துவமுள்ள உலகதீபமான சூரியனைப்புதன் சேர்ந்து நின்றபடியால், விரோதிகளால் எந்தவிதமான தீமையுமுண்டாகுமாவென்று, புஜண்டர் கூறக், கந்தன், உமை, சிவன் இம்மூவரும் வெகுசந்தோஷத்துடன் நீ சொல்வது சரிதான் சரிதான் என்று அங்கீகரித்தார்கள். இந்தவிதமாக ஆறும்வீட்டுப்பலன் முடிய, இனி எல்லோரையும் பந்தஞ்செய்யக்கூடிய ஏழாமிடத்தின் பலனைப்பற்றிக் கூறுகிறேன்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஏழாமிடப்பலன்.

இந்த ஏழாமிடமானது சந்திரனுடைய வீடாகை யால், அவன் களத்திரகாரகனாகிய சுக்கிரனோடு குடும் பஸ்தானத்தில் வீற்றிருந்தான். அந்தக் குடும்பஸ் தானத்தைச் செவ்வாய் பார்த்தான். குடும்பஸ்தானா திபதியான, சனி பலமாய் உச்சம் பெற்று சுகஸ்தா னத்தைப்பார்த்தான். சுகஸ்தானாதிபதியான செவ் வாயை யாதொரு குற்றமுமில்லாமல் குருபார்ப்பதா லும், இவ்விதக் காரணங்களால் இவனுக்கு முன் ஜென்மத்தில் வாய்த்த மனைவியானவள் உலக சுகத் தை அதிகமாகக்காட்டி, அருமையான ஞானவாழ் வை நாசஞ்செய்து வந்தாள். ஆனால், அன்னவள் பரிசுத்தமாகிய கற்புநிலைமையை உடையவளாதலால், இந்த ஜென்மத்திலும் இன்னவனையே பர்த்தாவாக அடைவாள். இந்த ஜென்மத்தில் இவனது ஞான மார்க்கத்திற்கு யாதொருவிதமான இடையூறும் செய்யாதிருப்பதே ஓர் பெரிய லாபமென்று கருத வேண்டும். இந்த உலகத்திலிவளைப்போன்ற மனைவி கிடைப்பது அரிதென்று புஜுண்டர் கூறவும், விஸ் வாமித்திரர் புஜுண்டரை நோக்கி, ஹே! தபோமகி மைமிகுந்த முனீஸ்வரரே! அந்தப் பெண்ணாலிவனுக் கென்னலாபமுண்டாகுமென்று கேட்க, ஹே விஸ் வாமித்திரா! நீ உன்னுடைய மதியைவிட்டாய். புத் தியை மறந்து பேசுகிறாய். கன்னியர்களால்தான் உலகத்திலுள்ள எல்லாக்காரியங்களும் பலிதமாகும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இன்னவன் துறவியாய்ப்போய்விட, அன்னவள் உலக அஞ்ஞான ஆசையினால், வேறு அன்னிய புருஷனைச் சேர்ந்துவிட்டால், இவனது மஹாதபசு எங்கே பலிதமாகும். சகலகாரியங்களும் முடிவதும், சகலமும் அழிவதும், மனுஷ்யர்களிறப்பதும், வாழ்வதும் தெய்வசொரூபமாக ஆகவேண்டுமென்று முயற்சிப்பதும், சக்திவடிவமான மாதர்களால்தான் ஆகவேண்டும். இந்தப்பெண் வடிவமான சக்தியினாலேயே திரிமூர்த்திகளும் உன்னதபதவிக்கு வந்திருக்கிறார்கள். அப்படி யிருப்பதினால் தபம், பவம், தனம், மனம், மோக்ஷம் மற்றும் எந்தக்காரியங்களை அடையவேண்டுமானாலும், சக்தியினால்தான் ஆகவேண்டும். ஒருவனது மனவி தீயவழியிற்சென்றுவிட்டாளென்று அவனறிவானாகில், உடனே மனமாறிச் சினமுண்டாகும். சினத்தால் தவமழியும், அந்தவண்ணம் அவளது மனது செல்லாமல் நமது மணவாளனே நமது தெய்வம், நல்நடக்கையினால்தான் நாம் கெதியடைவோமென்று எண்ணி நடப்பவளே இல்லற தருமத்திற்கேற்ற கன்னிகையாவாள், என்று புஜுண்டர் கூற, விஸ்வாமித்திரர், சுவாமி! இந்த ஜாதகன் பூர்வ புண்ணியமுடையவன். எதார்த்தமான தபத்தைச் செய்து முடித்தவன். துறவுபூண்டவன். காரணகுரு இவ்வளவு மகிமையுடையவனச்சுதே, இவனுக்கு இந்தவிதமான கவனமெதற்கு வரவேண்டும் என்று கேட்க, மன்னவா! இன்னேன் இல்லறத்திலுஞ் சில

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நாளிருந்து ஓர் மகவீன்றபின், அதைக்கடந்து வந்தவ ஞதலால் இந்தவிதமான சந்தேகம் வந்து மாறும். அதற்கெல்லாம் இந்தமனைவியாதொரு இடையூறுஞ் செய்யாமல், நிருமலமான கற்புவாய்ந்தவளாயிருப் பாள். இது இப்படியிருக்க, களத்திர காரகனுகிய சுக்கிரனும், களத்திர ஸ்தானுதிபதியாகிய சந்திர னும், வெகு சந்தோஷமாய்க் குடும்பஸ்தானத்தில் ஒற்றுமையாயிருப்பதாலும், அந்தச் சந்திரனையும், சுக்கிரனையும், நாலாம் பார்வையாக விருச்சிகத் திலிருந்து செவ்வாய் பார்ப்பதாலும், தனஸ்தானுதி பதி உச்சம் பெற்றிருப்பதாலும், மாதாவர்க்கத்தின் கன்னிகையே மனைவியாக வாய்ப்பாள். குருதிசை யின் அசுரகுருவின் புத்தியில் விவாகமாகும். மனச் சம்மதமில்லாமலும், வெறுப்போடும் மாலை சூட்டு வான். அன்னியர்கள் கட்டாயப்படுத்துவதாலும், முன்ஜென்மவினைவசம் அப்படியிருப்பதாலும் விவா கம் முடியும். அப்படி முடிந்தாலும், ஒரு புத்தி ரோர்ப்பத்தியுடன் முன் ஜென்மவினையின் இச்சை அடங்கிவிடும். அதற்கப்பால் இவனிடத்தில் காம னுக்கு யாதொரு வேலையும் இருக்கமாட்டாது. அப் புறம் மஹாபதிவிரதையாகிய இந்த மனைவியை ஆத்ம விவேகத்தினல் விலக்கிடுவான். அந்த மனைவியின் தொந்தமானது அப்புறம் இவனிடம் வராது. அதற் கப்பால் ஜெகன்மோகன மயக்கமில்லாத மாணிக்க மலையில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய யாதொரு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

குற்றமுமற்ற தன துசொந்தமனைவியினிடம் சேர்ந்து விடுவான். இப்படியாக ஏழாம் வீட்டுப்பலன் முற்றுப்பெற்றது. இனிமேல் எட்டாமிடப்பலன் கூறுகிறேன்.

எட்டாமிடப்பலன்.

எட்டாமிடப்பலன் கூற ஆரம்பிக்கும்போது விஸ்வாமித்திரர் புஜாண்டரை நோக்கி, இவன் முன் ஜென்ம விட்டகுறை ஞானமுடையவனாகவும், பால்யமுதல் ஞான நோக்கமுடையவனாகவும், பலமான தெய்வ சங்கற்பத்தினால் உதித்தவனாக இருந்தும், ஏன் மனத்தை அகற்றக்கூடாது என்று கேட்க, விஸ்வாமித்திரரே! நீ மிகுந்த தவத்தைச் செய்தவனாக இருந்தும், ஒரு தேவதாசியாகிய மேனகையினிடத்தில் கெட்டு உன் தவம் அழிந்து வீணாய் விட்டாய். இப்படிப்பட்டவார்த்தைகளை இனிமேற் பேசாதே. இதற்கு முன்னால் அநேக துறவிகள் இல்லறத்திலிருந்து அதை அப்புறம் அகற்றிவிட்டு; மோக்ஷத்தை அடைநதிருக்கவில்லையா, நீயே சொல் பார்ப்போம். உன்னுடைய புத்திசாலித்தனம் முழுமையும் எங்கேவிட்டுவிட்டாய். அப்படி இல்லறத்திலிருந்து துறவியாவதுதான் எல்லாவற்றிலும் பெருமையானது, ஹே! காதிபுத்திரா! தேவர்கள்கூட உலகோபகாரமாகப் பூலோகத்தில் அவதரித்து இல்லறத்திலிருந்து அதை விட்டுவிட்டு, அவர்களது தெய்வீகபதவிக்கு வந்திருப்பது உனக்குத் தெரியா

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ததா. உன்னுடைய தபோ அகங்காரத்தால் நான் கூறுவதைத்தடுத்துக் கேட்டாய் என்று கோபித்துப் புஜுண்டர் எதிர்க்கக் கௌசிகன் தனது வல்லமை யிழந்து, மாதவமுனிவரே! நான்செய்த குற்றத்தைப் பொருத்துக்கொள்ளுவீரென்று கூறப் புஜுண்டர், அரசனுயிருந்து, அரிய தவஞ்செய்து, இந்த நிலை மைக்கு வந்தவனே. இன்னவனுக்கு அஷ்டமாதி பதி சூரியனுய்ப்புதனுடனே மோக்ஷ ஸ்தானத்தில் சேர்ந்திருந்தபடியினுலும், அந்த மோக்ஷ ஸ்தானத் தைச் சனி பார்ப்பதாலும், அந்தச்சனி உச்சம் பெற் றிருப்பதாலும், எட்டாமிடத்தைச் சுக்கிரனும் சந் திரனும் பார்த்திருப்பதனுலும் வெகு நல்லது. இவ னுக்குச் சிறு ஜுரம், மயக்கம் இவைகளுண்டாகும். எந்தவிதமான வியாதிகளும் இவனை வந்து பொருந்த மாட்டாது. அப்படியே வந்தாலும் யாதொருவித மான துன்பமும் செய்யமாட்டாது. ஆனாலும் பல வித உலக சஞ்சாரத்தினுலும், பலதேச வாசத்தினு லும் பெரிய சபைகளிலேறிப் பேசுவதினுலும், சரீரத் தில் உஷ்ணமாத்திரம் உண்டாகும். அதற்கும் ஔஷதமார்க்கம் தெரிந்து கொள்வான். அதுவும் உணவற்றுப் போகும்போது ஒழிந்துவிடும். இவ னிடத்தில் ஏமனுக்கு யாதொரு வேலையுமில்லை யென்று யீஸ்வர நியதியே இருக்கும்போது, நா மென்ன நிச்சயமான வயதைச் சொல்லிவிட முடியும். ஆனுல் பிரமதேவனுல் அமைக்கப்பட்ட வயது அறுப

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தாகும். இவன் அந்த நான்முகனது அமைப்பையுந் தள்ளி அதன்மேலுள்ள இரண்டில்லாத மோக்ஷத்தை அடைந்து விடுவான். இந்தப் பெருமையுள்ள பால கனிடம் இயமனும் காமனும் பொருந்தமாட்டார்கள். எந்தவித உபாயங்களினலும் ஒன்று சேராததாயும் கட்டுப்படுத்த முடியாததாயுமுள்ள பிராணவாயுவை யோகஞான உபாயங்களினல் சேர்த்து இழுத்து விசேஷமாகிய ரேசகம், பூரகம், கும்பகம் இவைகளை முறைப்படிசெய்து, ஆறுதார நிலைமையைத்தாண்டிப் பிரமரந்திரத்தில் அமைந்துகிடக்கின்ற, சந்த்ரகலா அமிர்த சமுத்திரத்தில் மூழ்கி அதைப்பானம் பண் ணிக்கொண்டு வெகுதாராளமாக உலகத்தில் உலாவு வான். துவாதசாந்த நிலைமையையுந் தாண்டி அதனப்பாலுள்ள ஸ்வர்ண ஸ்தம்ப வுச்சியிலேறி எவராலும் அறிய முடியாத நித்தியானந்தமான மோக்ஷ வீட்டைச்சேருவான். இவன் எந்தக்காரி யத்தைத் தொட்டாலும் விடமாட்டான். முடியாத காரியத்தில் பிரவேசித்து வீண் போகமாட்டான். நன்மை தீமைகளை எண்ணமாட்டான். உலக ஜனங் கள் உஜ்ஜீவிக்கும் பொருட்டுச் சிலாசாசனங்கள் எழுதிவைப்பான். உலகத்தார்களுக்குத் தன்னுற் கூடுமான வரையில் யீஸ்வரபக்தியை ஏற்றிவிடுவான். யோக சாஸ்திர விதிப்படியுள்ள பல கட்டிடங்களும் ஆஸ்ரமங்களும் கட்டிவைப்பான். பிராணவாயுவை வெளியில் விடமாட்டான். ஞானகலாயோகஞ்செய்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வான். முடிந்த பழுத்த ஞானியாவான். நான் கூறி வந்த விஷயங்கள் வீண்போக மாட்டாது. எட்டா மிடத்ததிபனுடைய திசையை இவன் அனுபவிக்க மாட்டான். இப்போது நான் சொல்லிவந்த தெல்லாம், சனிமஹாதிசையின் கேதுபுத்தி ஆரம்பித்த நாளிலிருந்தே மேலாக அனுபவத்திற்கு வந்துசேரும். ஞானப் பிரகாசத்தைத் தெரிசிப்பதற்கு எண்ணு வான். ஆரம்பித்து விடுவான்.

ஹே பராசக்தியே! உன்னுடைய அருள் நோக்கத்தை அடைந்த பேர்களுக்குத் தடைகள் வருமா? அன்னவர்கள் பூஜை, ஸ்தலயாத்திரை, ஜெபம் இவைகள் ஏன் செய்யவேண்டும்? இவனுக்கு முன்ஜென்ம ஞானபாக்கியமானது, உள்ளத்தினுள்ளே முதிர்ந்து பழுத்துவிடும், பக்ஷிகளுங்கூட வந்து புசிக்கக்கூடிய ஸ்லோகங்கள் செய்து உலகஜனங்களுக்குக் கொடுப்பான். பல அதிகாரிகளுக்கு ஆத்மஞான வுபதேசஞ் செய்வான். இவனது உடல் நெட்டையாயும் ஒல்லியாயுமிருக்கும். இதுவரை எட்டாமிடப் பலன் கூறி முடிந்தது. இனி ஒன்பதாமிடப்பலன் கூறுவேன்.

ஒன்பதாமிடப் பலன்.

பாக்கியஸ்தானாதிபதி புதனாகிச் சூரியனோடு பனிரெண்டாமிடத்தில் வீற்றிருந்தமையாலும், அந்தப் பாக்கியஸ்தானத்தில் குரு, இராகு இவர்கள் பூர்ண பார்வையைப் பெற்றுக்கொண்டு கேது இருந்தபடியாலும், பாக்கியஸ்தானாதிபதியான புதனைச் சனி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பார்த்திருப்பதாலும், அந்தப் புதன் மோக்ஷஸ்தானத்திலிருந்தமையினாலும், பிதாவின் சகோதரர்கள் நான்கு பேர்களாகி, மரணமாகும்போது ஒருவரேயாகும். பிதாவின் செல்வமானது கெடாமல் சீராகவேயிருக்கும். அந்தப்பிதா மிகுந்த பொறுமையுடையவனும், நிந்தனையில்லாத மனத்தை யுடையவனுமாகும். குருவினது சொந்தவீடாகிய தனுசுராசியைச் சனி தாண்டுங்காலத்தில், பிதாவினது பிரியாண காலமாகும். இந்தப் புத்திரனால் இந்தப் பிதாவிற்குச் சரமகைங்கரியம் வாய்க்கமாட்டாது. பிதாவினது மரணத்தைப்பற்றிக் கேள்விப்பட்டு மனது சோகமடைந்து பின்புமாறிவிடும். ஆனால் யாதொருபற்றுமின்றித் தனது சொந்தக் காரியத்திற்குச் சென்றுவிடுவான். உலகத்தாருக்குப் போதிப்பதில் வல்லமையுடையவன். வெள்ளிபக்கிரியிலேயே கவனம் வைத்திருப்பான். பேதமில்லாத மனத்தையுடையவன். குருவின் ஆக்ஞையும், வேதத்தின் ஆக்ஞையும் ஒன்றென்ற எண்ணமுடையவன். அறியவேண்டியவைகளை யெல்லாம் அறிந்துவிடுவான். ஞானவித்தையின் ஆசையையொழிய மற்ற ஆசைகள் இவனிடம் வராது. ஞானவீட்டைக்கவர்ந்து கொள்ளக்கூடிய திருடனுயிருப்பான். ஆதிருக்ஷமமாகச் சகல காரியங்களையும் செய்வான். வேதரகசியங்களை உள்ளவாறு சொல்லக்கூடிய சித்தனுவான். இதுவரை ஒன்பதாமிடத்தின் பலன் முடிந்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தது. இதற்குமேல் பத்தாம் வீட்டுப் பலன் கூற ஆரம்பம்.

பத்தாமிடப் பலன்.

மனத்தை ஓர்வழியில் நிறுத்தி, உலகசுபாவங்களை யெல்லாம் நன்ருய்த் தெரிந்துகொண்ட அரசனுகிய விஸ்வாமித்திரா! பத்தாவது வீட்டிற் சனியிருப்ப தாலும், அத்தப் பத்தாமிடத்ததிபதியாகிய சுக்கிரன் சந்திரனுடனே சேர்ந்து, இரண்டாமிடத்தில் பரி வர்த்தனையாய் மாறியிருப்பதாலும், அந்தச் சுக்கிர னையும், சந்திரனையும் செவ்வாய் பார்ப்பதாலும், பத்தாமிடத்ததிபதியாகிய அந்தச் சுக்கிரன் ஐந்தா மிடத்துக்கும் அதிபதியானபடியாலும், இன்னவன் புண்ணிய கருமம், தருமம், தீரம், வீரம், இரகஸ்யம், பிரஹ்மம், பரிசுத்தம் இந்தவிதக் காரியங்களோடு அந்தர்முக திருஷ்டியிலுள்ள அதிரகஸ்யமாகிய பத்துவித நாதகிதப் படிகளையும் ஏறித்தாண்டி, அப் புறம்போய்த் துவாதசாந்த நிலைமையையுந் தள்ளிப் பதினறு கலைகளையும் பனிரெண்டாக்கிச் சந்திர கலையை இல்லாமற்செய்து, சூரியகலையைக் குண்டலி யிற் சேர்த்து, அவியாத அனலை உண்டாக்கி, அங் கிருந்து வரக்கூடிய அமிர்தஜலத்தைப் பானம் பண்ணி, அதையுந்தாண்டிச் சச்சிதானந்த வடிவ மான பூர்ணமாகிய நிர்த்தன சொரூபத்தைத் தரி சித்து, ஆனந்தமடைந்து, நாதாந்த நிலையிமேலேறி, அதையுங் கெடுத்து, அங்குள்ள தடைகளையும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஒழித்து, ஞானனுபவமடைந்து, அதையும் தள்ளி, அனுதிமாயையைக் கையிற்பிடித்து ஆட்டி, அதனைப் பாற் சென்று, சொந்தமாகிய அமிர்தத்தையுண்டு வாழ்ந்திருப்பான். ஹே விஸ்வாமித்திரா! இதுவரை யில் நான் கூறிவந்ததில் ஏதாவதுனக்குப் பேதந் தோற்றுகிறதோவென்ன, மஹரிஷியே! இதுவரை கூறிவந்ததில் யாதொரு சந்தேகமுமில்லை. எல்லாம் சரியாகவேயிருக்கிறது. ஆனால் இவன்யாதொரு பேத முமில்லாத மோக்ஷத்தையடைந்து தானுய்நிற்பதற்கு ஏதாவது காயகற்பமுண்டாவென்று கேட்கப் புசுண் டர், கோசிகா! உலகத்திலே பலபேர்கள் காயகற்ப யோகியென்றும், வாசியோகியென்றும், ஞானயோகி யென்றும், தவயோகியென்றும், சிவயோகியென்றும் பேர்வைத்துக்கொண்டு, நம்போன்ற அநுபவிகள், அநுபவிகள் அநுபவித்து எழுதிவைத்த எழுத்து முறையைக்கண்டு அர்த்தபேதங்கொண்டு ஒவ்வொரு வனும் கற்பமென்பது வனமூலிகையென்றும், பாஷா ணமென்றும், காய்கனியென்றும், வெண்சாரை கருஞ்சாரையென்றும், மூலப்புளியென்றும், அமுரி யென்றும், முப்பூவென்றும், வாசியென்றும், கிரியாவி சேடமென்றும், வைராக்கியமென்றும், பத்தியென் றும், ஸ்தலசேவையென்றும், நதிமூழ்கலென்றும், தொண்டென்றும், பலபேர் பலவிதமாக எண்ணிக் கொண்டு, தன்னுடைய லலாடலிகிதத்தை யறியா மல், ஒன்றைவிட்டொன்றைப் பற்றிக் கடைசியாய்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

எடுத்த ஜென்மப் பிரயோஜனத்தை அடையாமல், அடைய மார்க்கமில்லாமல் தவித்து, ஒன்றுக்கு முதவாத பிரேத ஜென்மத்தை அடைகிறார்கள். அவன்மட்டுமல்லாது, அவனது ஏழு தலைமுறைக்கும் நீங்காத பழியை அடைவித்துவிடுகிறார்கள். கற்பம் கற்பம் என்று கூறுவது நதிபோன்ற நாதவிந்து. அந்த நாதவிந்துவில், மனதைச் சேர்த்துச் சினமொடுக்கி, மனமடக்கிச் சோமகலாரசத்தைப் பிழிந்துண்பதே யாகும். இதைத்தான் மஹாஞானிகள் பேரின்ப கற்பமென்று பெயர் வைத்திருக்கிறார்கள். உன்னோடு கூட நானும், மற்றும் இங்குள்ள ரிஷிகள், சித்தர்கள், ஞானிகள் இவர்களெல்லாம் எந்தவிதமான கற்பத்தைப் புசித்து இந்தவித நிலைமையை அடைந்திருக்கின்றோமென்று நீயே சொல்வாய். கடவுளின் அருள்மயமான ஞான கற்பத்தை அதன் மார்க்கந்தெரிந்து புசித்தால் சித்தியாகும். இவன் அந்த நிலைமையை அடைவான். அதற்காகவே இவன் வந்தவன். இந்தவிதமாகப் பத்தாம் வீட்டுப்பலன் முற்றுப்பெற்றது. இப்பால் பதினோருமிடப்பலன் கூற ஆரம்பம்.

பதினோருமிடப் பலன்.

பதினோருமிடத் ததிபதியாகிய செவ்வாய், அந்த ஸ்தானத்திலேயே ஆட்சிபெற்று, பிரஹஸ்பதியினால் பார்வையடைந்து, லக்கினத்திற்கு லாபஸ்தானத்திலிருப்பதுடன் அவன் லாப சுகாதிபதியான காரணத்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

திஞல், மாதாபிதாக்களின் சொந்த ஆஸ்தியிலிருந்து இவன் யாதொரு லாபத்தையும் அடையமாட்டான். புத்திரர், மனைவி, பந்துக்கள் இவர்களுடைய செல்வத்திஞலும் இவனுக்கு லாபம் வரமாட்டாது. வந்து பொருந்திஞலும் அங்கீகரிக்கமாட்டான். உலகத்தி லுள்ள எந்தவிதமான ஆஸ்திகளும் அழிந்து போகு மென்று அனுபவத்திஞலறிந்து, பேரின்ப ஆஸ்தியைச் சொந்தமாக அடைவான். மாருத ஆனந்த வாழ்க்கையிலேயேயிருப்பான். இப்படிப்புஜுண்டர் கூறும்போது ஈஸ்வரியானவள் அன்போடு, ஹே புஜுண்ட முனிவரே! இந்த அதிமானுஷ்பனுக்கு எந்தவிதமான ஆஸ்தியும் உலகத்தில் இல்லையென்று கூறிஞல், பலதேச சஞ்சாரங்களும், பலபேர் கூட்டங்களும், பல சகடைகளும் பொருந்துவதாகத் தெரிகிறதே இவைகளுக்கெல்லாம் எந்தஆஸ்தியைக்கொண்டு நடைபெறுமென்று கேட்க, மாதாவே! அதன் விபரத்தைக்கேள். அவனிடம் ஜெகதீஸ்வரியாகிய நீயும், சரஸ்வதீ தேவியும் பொருந்தியிருக்கும்போது இலக்ஷிமிதேவி மட்டும் ஏன் சேரமாட்டாள். இதைத் தவிரவும், கணக்கில்லாத சிஷ்யக் கூட்டங்கள் இவனை வளர்ந்துகொண்டு இவன் நினைக்கிறதுபோலவே சகல காரியங்களையும் செய்து முடித்துக்கொண்டிருப்பார்கள். இவனது செல்வ நிலையை எவரும் அறியமுடியாது. இவனுக்கு ஒரு தாழ்வுமுண்டாகாது. உன்னுடைய அருள்பெற்றவர்களில் இன்னவனைப்போல

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

யாரிருப்பார்கள். இதுவரை கூறிவந்தது பதினேரும் வீட்டுப்பலனாகும். இப்பால் பனிரண்டாமிடப் பலன் கூற ஆரம்பம்.

பனிரேண்டாமிடப்பலன்.

பனிரெண்டாமிடத் ததிபதியாகிய வியாழ பகவான் ரிஷப ராசியில் ஏறியிருப்பதாலும், ஞானபாக்கியாதிபதியான புதன், எட்டாமிடத்ததிபதியாகிய சூரியனேடு சேர்ந்து பனிரெண்டாமிடத்திலிருப்பதாலும். இவனுக்கு இந்தஜென்மத்தில் பிறவாமோக்ஷங் கிடைப்பது நிச்சயம். அந்த மோக்ஷஸ்தானத்தைச் சனி பார்க்கவும், செவ்வாய் ஆக்ஷியாயிருந்து குருவை ஏழாம் பார்வையாகப் பார்த்தாலும், மோக்ஷஸ்தானுதிபதி திரிகோணமேறியிருந்த வல்லமையினுல் இவனுக்கு இந்த ஜென்மத்தில் மோக்ஷம் கிடைப்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. ஆனுல் இடையில் சில தடைகளுண்டாகும். அதையும் ஜெயித்துவிடுவான். மோக்ஷமானது இவனுக்கு எட்டடி தூரந்தானிருக்கும். அப்படியிருந்தாலும் பாக்கியஸ்தானுதிபதியின் திசைவந்தபோதுதான் சகல காரியங்களும் சித்தியாகும். இவன் பரம்பொருளில் கலந்துவிடுவான். இது உறுதியாகும். ஹே விஸ்வாமித்திர முனிவனே! இதை நன்ருகக் கவனித்தனையா? இவனது பாக்கியமே பாக்கியம். இதோடு முதற்பாகம் முடிவடைகிறது. இனி இரண்டாம் பாகத்தில் விஸ்தாரமாகக் காலவரையறுத்துக்கூறுவோமென்று

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

புஜுண்டர்கூற, அங்கிருந்தவர்களெல்லாம் ஆச்சரிய மடைந்து, பூலோக மனுஷ்யர்களில் இப்படியும் ஒருவருண்டா என்று கேட்கப் புஜுண்டர், இதன் உண்மை யாதென்றால் கலியுகத்திலே அதர்மம் மேலான காரணத்தினால், மூன்று மூர்த்திகளும், இந்திராதி தேவர்களும், தங்கள் தங்கள் அம்சமாய் பூலோகத்தில் அவதாரம் செய்து, தருமத்தை நிலைநாட்டி மீண்டும் தங்கள்பதவிசேர்ந்துவிடப்போகிறார்கள். அதுபோல தெய்வ ஆக்ஞையின்படி கலியுகாதி, சதுகூகூச. நாலாயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்று நான்காவதுவருஷத்தில் இந்தப்புருஷனோடு ஒன்பதுபேர்கள் உற்பத்தியாவார்கள். மூன்றுபேர்கள் மறைந்துவிடுவார்கள். நான்கு பேர்கள் தபோநிஷ்டர்களாய் இமையமலையிலுள்ள கேளரீபாத் என்ற வனத்திலிருப்பார்கள். மற்ற இரண்டுபேர்களில் ஒருவன் உலக சஞ்சாரஞ் செய்துகொண்டு உலகானுபவத்தை மட்டுங் கருதியிருப்பான். இவன் உலகமுழுவதுஞ் சஞ்சாரஞ் செய்து, உலக ஜனங்களுக்கு ஆத்மஞானத்தை உபதேசித்து, நன்மார்க்க வைபவங்களைக் காட்டிக் காரணக் குருவாயிருந்து, தீயமதங்களுக்கு வைரியாய்ச் சிங்கம்போலிருந்து, அஷ்டமாசித்திகளை வசப்படுத்தி அதனால் உலக ஜனங்களுக்குப் புத்தியுண்டாகும்படி செய்து, மோக்ஷபதவி சேர்ந்துவிடுவான். இத்துடன் ஏகபாகம் முடிந்தது. இனி மற்றோர் நாளில் இரண்டாவது பாகத்தைக் கூறலாமென்று புஜுண்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

டர் கூற, ஈஸ்வரன், சக்தி, முருகன் இம்மூவர்களும் மற்ற தபோசிரேஷ்டர்களும், ஆமென்று அங்கீகரிக்க, விஸ்வாமித்திரர், புஜண்டர் இருவர்களும் உமாதேவியாரிடம் விடை பெற்றுக்கொண்டு சென்றுவிட்டார்கள்.

முதற்பாகம் பூர்ணம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ பராசக்தீ
காகபுஜண்ட விஸ்வாமித்திர சம்வாதம்.

மஹா வாக்கியம்

இரண்டாவது பாகம்.

மலர்ந்த புஷ்பமே, அதன் மணமே, களங்கமில்லாத இரத்தினமே, இரத்தினத்திற் பிரகாசிக்கின்ற ஒளியே, உலகத்தை ஒரு நினைப்பிலே சிருஷ்டிக்கின்ற வுமாதேவியே, இமாசல அரசன் தவக்கனியே, நன்மையைத்தருகின்ற ஜோதிஸ்வரூபமே, நாதவிந்தாகி, கதிர்முனையாகி, பொற்கம்பமாகி, பூர்ண சந்திரனாகி, அக்கினியாகித் தானாகி நிறைந்துநின்ற நிராமயமே! சங்கரனது இடபாகத்தே அமர்ந்திருக்கின்ற பசுங்கொடியே, ஆனந்தவல்லியே, பூர்ண ஞானவடிவமாகி வளர்கின்ற அமலையே, சுபலபணியே, மகிடாசூரனைச் சப்ஹாரஞ்செய்த ஞானநிதியே, வேலாயுதத்தையுடையவனையும் யானை முகத்தோனையும் ஈன்றிடும் அன்னையே, வேதாந்தமே, அம்பிகையே, அதீத வடி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வமான ஞானப்பூங்கோதையே, அகமும் புறமும் ஒன்ருய் நிற்கின்ற ஆனந்தமே என்று இவ்விதமாக விஸ்வாமித்திரரும் காகபுஜுண்டரும் ஸ்தோத்திரஞ் செய்துகொண்டு நிற்கின்ற காலத்தில், அம்பிகையானவள் சந்தோஷத்துடன் அவர்களைப் பார்த்து, அரிய தவப்புத்திரர்களே! நீங்களிரண்டு பேருமாய் முன்சொன்ன சரித்திரத்தின் மற்ருேர் பாகத்தைப் பொருத்தமாகச் சொல்வீர்களென்று கூறவே, விஸ்வாமித்திரர் கூறுகிருர்.

சதயம் இரண்டில் சந்திரன், அனுஷம் நான்கில் செவ்வாய், உத்திராடம் ஒன்றில் சூரியன், கார்த்திகை இரண்டில் குரு, சதயம் ஒன்றில் சுக்கிரன், ரேவதி நான்கில் இராகு, அஸ்தம் இரண்டில் கேது, சித்திரை மூன்றில் சனி, பூராடம் மூன்றில் புதன், இலக்கினம் நான்கில் மகரம், விஜய வருஷம், மார்கழி மாதம், இருபத்தொன்பதாநாள், குருவாரம், சதுர்த்தசி திதி, சதைய நக்ஷத்திரம், முற்பகல் நான்கு நாழிகை, இருபத்தெட்டு விநாடி- இதனுடைய பலனைக் கொஞ்சமேனும் பிசகாது கூறுவீரென்று கௌசிகன் புஜுண்டரை நோக்கிக்கூற, அங்குள்ள மஹரிஷிகள் எல்லோரும் பரமசிவன், சக்திவேலவன் இவர்களை ஸ்தோத்திரம் செய்துநிற்க, மூவரும் இவர்களை ஆசீர்வதித்து அமரச் சொன்னபின் காகபுஜுண்டர் கூற ஆரம்பிக்கிருர்.

விஸ்வாமித்திரா! இந்தவுலகத்தில் இவனொரு ஆச்சர்யமான சித்தனுவான். நல்ல ஜென்ம புனிதன்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

செவ்வாய் கண்டம். பாண்டிநாட்டில், அழகிய சிறிய நகரத்தில், அஞ்சலை சேயவன்பட்டியில், மாதாவின் மாதாவிற்குச் சொந்தமனையில், கீழ்முக வாயற் கொண்ட கிரஹத்தில், பிராமண குலத்தில், வைஷ்ணவமதத்தில் ஜெனிப்பான். ஆதியில் இவனது பெயர் ஸ்ரீனிவாஸன். அதனப்பால் வழங்குகிற நாமம் விலக்ஷணனந்தன். மாதாவின் பெயர் சுந்தராம்பாள். பிதாவின் நாமம் ரெங்கசாமி அய்யங்கார்.

இவன் அவதரித்த காலத்தில் இராகுதிசை செற்பச்செல் போகப் பாக்கி எட்டுவருஷம், ஐந்துமாதம், இருபத்திரண்டுநாள். ஆரம்பத்திலுள்ள புதன் புத்தி கேதுபுத்தி காலங்களில் மாதாவின் சரீரபீடை, ஆயாஸம், பாலாரிஷ்டம் முதலியன வந்துமாறும். சூரியனுடைய சித்திரத்தில் சரீர வுஷ்ணமும், பிதாவின் செல்வச் சேர்க்கையும், தாய்வழி க்ஷேமமுமுண்டாகும். அக்கினிபாதை மீறியடங்கும். பந்துக்கள் நேசமாயிருப்பார்கள். மாதாபிதா வர்க்கங்களில் துக்கமுண்டாகும். குடும்பம் விருத்தியாகும். வந்த பீடைகளெல்லாம் மாறிவிடும். இனிமேல் சுக்கிரபுத்தி.

சுக்கிரபுத்தி.

இந்தச் சுக்கிரபுத்தி வருஷம்மூன்று. இவன் இலக்கினத்திற்கு இரண்டாமிடத்தில் நின்று, இரண்டாமிடத்திற்குடைய சனி பத்தாமிடத்தில் வாசமாகிச் சந்திரனோடு சுக்கிரன் சேர்ந்திருப்பதால் சகோதர நாசமும், மாதாவின் துக்கமும், பிதாவின் செல்வச்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சேர்க்கையு முண்டாகும். குடும்பத்தில் சோபன காரியங்கள் நடக்கும். மாதாவின் வழியிலும், பிதாவின் வழியிலும் இந்தப் பாலகன் செல்வமாய் வளர்வான். பந்துக்களில் வாதமுண்டாகும். ஒரு சோதரமுண்டாகும். பிதாவிற்குத் தான்யலாபமும், சகோதரவளர்ச்சியு முண்டாகும். இவனால் மாதா பிதாக்களுக்கு இன்பமுண்டாகும். இவ்விதமாகச் சுக்கிரபுத்தி முடியும். அப்போது வயது, ரு வருஷம், க மாதம், ரு நாள். விளம்பிஞு குடமீ ஆறுவது நாள். இனிமேல்

சூரியபுத்தி.

இந்தப் புத்தியில் தேகவெப்பமுண்டாகும். மாதாவர்க்கத்தில் க்ஷேமமுதயமாகும். மாதுலர் கவனமாகவே கல்விகற்பான். யாதொரு குற்றமும்வராது. இவ்வாறு சூரியபுத்தி போகச் சந்திரபுத்தி வரும். அப்போது வயது, ரு வருஷம், கக மாதம், உ௰சு நாள். விகாரிஞு மார்கழிமீ ௩௨. இதற்குமேல் சந்திரபுத்தி வந்து சேரும்.

சந்திரபுத்தி

இந்தச் சந்திரன் சுக்கிரனோடு சேர்ந்து வாக்குஸ்தானத்திலிருக்கவும், இராகுவிற்குப் பனிரெண்டாமிடத்தில் இவன் இருப்பதாலும், இவனைச் செவ்வாய் பார்ப்பதாலும், சிறிது கல்வி பயில்வான். அதுவும் மோக்ஷ மார்க்கத்திற்கானதும், உய்வழிக்கான கல்வியாகவே இருக்கும். அம்மான் சமீபத்திலேயே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வசிப்பான். உலகத்தை அரசாக்ஷி செய்து பின்பு கலகத்திலே தபசியான விஸ்வாமித்திரா! உனக்கு இதுவரை சொல்லிவந்ததில் ஏதாவது மாறுபாடு தோற்றுகிறதா? கூறுவாயென்ன, எனக்கு யாதொரு சந்தேகமுமில்லையென்று விஸ்வாமித்திரர் கூறினர். இவ்விதமாகச் சந்திரபுத்தி முடியவும், செவ்வாய் புத்தி வரும். அப்போது வயது, எ வருஷம், ரு மாதம், உ௰கூ நாள். இப்பால்,

சேவ்வாய்புத்தி

இந்தச் செவ்வாய் லக்கினத்திற்கு லாபஸ்தான மேறித் திசாநாதனுக்கு ஒன்பதாய்க் குரு பார்வை பெற்றிருப்பதால், சொற்பபிணியும், சொந்தத்தில் சோபனங்களுமுண்டாகும். இந்தப் புத்தியிலேயே முன்ஜென்ம தொந்தம் பற்றிக்கல்வியில் யோகசாலி யாயிருப்பான். இவ்விதமே செவ்வாய்புத்தியுடன் இராகு திசை முடியும். அப்போது வயது, அ வருஷம், ரு மாதம், இருபத்திரண்டு நாள். சுபகிருதுஹூ ஆனிமீ, இருபத்தொன்றாந்தேதி. இதோடு இராகு திசை சம்பூர்ணம். இனிமேல் குருதிசை.

குருதிசையில் குருபுத்தி.

இந்தக்குரு, மூன்று பன்னிரெண்டாமிடங்களுக்கு உரியவனாய்ச் செவ்வாய் பார்க்கத் திரிகோணத்தி லிருப்பதால், ஊரார்கள் மதிப்புடன் மாமனாலும், தந்தையாலும் கல்விபயில்வான். செல்வமாகவே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வளர்வான். முன்ஜென்மவிட்டகுறையை எண்ணு வான். தான் வந்தவேலை எதுவென்று ஆராய்வான். உள்ளத்தில் உறுதியான உண்மையைநாட நினைப் பான். நல்லவர்கள் சேர்க்கையை நாடுவான். அன்னி யத்திலும், சொந்தத்திலும் சோபனங்கள் நடக்கும். சரீரத்திலுள்ள வெப்பம் நீங்கும். முன்ஜென்ம விட்டகுறைச் சஞ்சலமும், மற்ற இரண்டு ஏடணை களும் வந்து பொருந்தும். இத்துடன் குருமஹா திசையின் குருபுத்தி முடியும். அப்போது வயது, ௰ வருஷம், எ மாதம், ௰ நாள். குரோதிஹு ஆவணிமீ கூஉ இனிமேல்.

சனி புத்தி.

இந்தச்சனி இலக்கினத்திற்கும் இரண்டுக்குமுடை யவன். லக்கினத்திற்குப் பத்தாமிடத்திலும், திசா நாதனுக்கு ஆறுமிடத்திலுமிருக்கிறான். சனியிருந்த வீட்டுக்குடைய சுக்கிரன் வாக்கேறி யிருக்கிறான். இக்காரணங்களால் கல்வியில் அதிக கவனமாயிருப் பான். மாதா பிதாக்கள் இவனிடம் அன்புபூண்டி ருப்பார்கள். முன்ஜென்மத்தில் தான்செய்த விஷ யங்கள் ஞாபகத்திற்குவரும். ஆனாலும் பிரபஞ்ச மாயை சுற்றும். அப்படிச் சுற்றினாலும் இன்னும் கொஞ்சகாலமிருக்கிறபடியால் பின்னாலே தேறுவான். வீண்காரியங்கள் செய்யமாட்டான். மாதாவர்க்கத் தார்கள் அதிக க்ஷேமமாயிருப்பார்கள். பந்துவர்க் கத்தில் கலகமும் வாதங்களும் வரும். மோக்ஷமார்க்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கத்திற்கான கல்வி கற்பான். இத்துடன் குருமஹா திசையின், சனி புத்திமுடியும். அப்போது வயது ௰௩ வருஷம், க மாதம், உ௰உ நாள். பராபவஹூ மாசிமீ, உ௰கவ. இப்பால்,

புதன் புத்தி.

இந்தப் புதன் லக்கினத்திற்கு மோக்ஷஸ்தானத்தில் சூரியனோடு சேர்ந்திருப்பதாலும், திசாநாதனுக்குச் சொந்தமானவிடத்தில் புதன் இருப்பதும், மோக்ஷஸ்தானத்தைச் சனிபார்ப்பதாலும், இவன் பலவிதமான கல்விகளைக்கல்லாது கற்பான். பிற்காலத்தில் உயர்ந்த பதவிக்கு வருவான். மாதாவின் சரீரமானது மாறுபடும். பராசக்தியின் அருள்வந்து குடிபுகும். சகல வுலக லக்ஷணங்களையுந்தெரிந்து கொள்வான். இடையில் சில தடைகள் வரும். ஒரு மதத்திலும் பற்றுவைத்திருக்க மாட்டான். இந்த விதமாகக் குருமஹாதிசையின் புதன் புத்திபோய் விடும். அப்போது வயது, ௰௫ வருஷம், ௬ மாதம், உ௰உ நாள். சௌமியஹூ, வைகாசிமீ, இருபத்தேழாந்தேதி. இனிமேல்.

கேதுபுத்தி.

இந்தக் கேது திசாநாதனுக்கு ஐந்தாமிடத்திலிருப்பதாலும், லக்கினத்திற்குப் பாக்கிய ஸ்தானத்திலிருப்பதாலும், உபயராசியா யிருப்பதாலும், இந்தப் புத்தியில் இவனது மனம் பட்டினத்தான் போலத் துறவு பூண எத்தனிக்கும். இவன் எண்ணங்கள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வீண்போகாது பலிதமாகும். மாதா வர்க்கத்தில் துக்கமுண்டாகும். ஆண்பெண்களாகிய இருவகைச் சகோதரர்களும் வளர்வார்கள். பிதாவின் சமீபத்திலேயே யிருப்பான். ஞானகுருவைத் தேடுவதற்கு இச்சிப்பான். இடையில் தவக்கம் நேரும். ஞானத்திற்குத் தடையுண்டாகும். முன்ஜென்ம விட்ட குறை வந்து பொருந்துவதும் உடனே மறைவதுமாக இருக்கும். குரு வுபதேசத்தைக் கேட்டாக வேண்டுமென்று முயல்வான். காரியக் குருமார்களிடம் செல்லமாட்டான். பசுவைத் தேடுங்கன்றைப் போலவும், காந்தமும் இரும்பும் போலவும், ஞானசாரியனை நாடிச்செல்வான். அந்தரங்கமான இடத்தை நாடுவான். வெகு உபாயமாகக் காரியங்கள் செய்வான். பிற்காலத்தைப்பற்றி யோசிப்பான். முன்ஜென்மாந்தரங்களைப்பற்றி நினைப்பான். ஆண்மையையும், ஸ்திரபுத்தியையும் உடையவனுமாயிருப்பான். இந்தவிதமாகக் குருமஹாதிசையின் கேது புத்தி போய்விடும். அப்போது வயது, கசு வருஷம், ௬ மாதம், ௬ நாள், சாதாரண௵ வைகாசிமீ ௩௨ இனிமேல்,

சுக்கிர புத்தி.

இந்தச்சுக்கிரன் பத்து லந்துக்குடையவனாய் தனஸ்தானத்தில் சந்திரனோடிருப்பதாலும், அவனைச் செவ்வாய் பார்ப்பதாலும், அவனது வீட்டில் குரு வீற்றிருந்தமையாலும், இந்தப்புத்தியில் ஆத்மவிவே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கமும் பற்றற்ற நோக்கமுமுண்டாகும். சுற்றத்தார்களும் பந்துக்களும் தடுப்பார்கள். இவன் செய்கிற ஞான முயற்சிக்கு இடையூறு செய்வார்கள். இவன் தனது முயற்சியை விடமாட்டான். விவாக முயற்சிகள் நடக்கும். வருத்தத்தோடு விவாகத்தை ஒப்புக்கொள்ளுவான். மனைவி மாதா வர்க்கத்தின் மங்கையாக இருப்பாள். மோக்ஷ மார்க்கத்திற்கு உதவி செய்கிறவளாயிருப்பாள். சொந்தக்காரர்கள் இவனது செயலைக்கண்டு நிந்திப்பார்கள். இவனது மனம் வேறுபட்டேயிருக்கும். மனைவியின் பெயர் ரெங்கநாயகி. சாத்வீக குணமுள்ள வனிதையாயிருப்பாள். இவன் பலபேர்களுக்கு வுபதேசஞ் செய்வான். சுகநீத வாழ்க்கையிலேயே இவனது நெஞ்சு செல்லும். அப்பொழுதிருந்தே தீவிரமான ஞானமுயற்சியில் ஆரம்பித்துவிடுவான். தன்னைப் பற்றியிருக்கிற மாயையைக் கடந்துவிடுவதற்காக மரக்கலம் தேடுவான், ஏறுவான். உலகமாயை வந்துசுற்றும். இந்தவிதமாகக் குரு மஹா திசையில் சுக்கிரபுத்தி முடிந்துவிடும். அப்போது வயது, கக வருஷம், ௪ நாள். பரிதாபிஹூ தைமீ ௩௨. இனிமேல்,

சூரியபுத்தி.

இந்தச் சூரியன் இலக்கினத்திற்கு விரையஸ்தானத்திலும் பிரஹஸ்பதிக்கு எட்டிலுமிருந்து, புதனோடு சம்பந்தமாகிச் சனியும் பார்த்திருப்பதால் இந்தப் புத்தியின் ஆரம்பகாலத்திலேயே, முன் ஜென்ம

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விட்டகுறையை நினைத்துக் கவலைப்படுவான். ஞான விருப்பமேலிட்டுத் துறவியாகிவிட எண்ணுவான். உண்மையானகுருவின் பார்வையும் பகவானது நோக்கமும் உண்டாகும். பிரபஞ்ச மாயையை அறுப்பதற்காக ஞானவாளைத் தீட்டுவான். பலஞான அனுபவ சாஸ்திரங்களை ஆராய்வான். சமாதி அப்பியாசம் செய்வான். பூர்வபிராரத்த சம்பந்தமாய் ஓர் பெண் மகவு உதிக்கும். மோக்ஷ நிலைமையை அந்தரங்கத்தில் தேடுவான். இந்தவிதமாகக் குரு மஹாதிசையின் சூரிய புத்தி முடிவடையும். அப்போது வயது, கக வருஷம், கூமீ, உ௰உ நாள். பிரமாதீசாஸு, ஐப்பசிமீ, உகஉ. இனிமேல்,

சந்திரபுத்தி.

இந்தச் சந்திரன் இலக்கினத்திற்கு இரண்டாம் வீட்டிலும், திசாநாதனுக்குப் பத்தாமிடத்தில் தங்கியும், செவ்வாய் பார்வைபெற்றுச் சுக்கிரனுடனிருப்பதால் இவன் அப்போதிருந்தே வீட்டைவிட்டுப் புறப்படுவதற்கு ஆரம்பமாவான். பரிசுத்தமான ஆத்மஞானத்தைப்பெற்று அதீத வாழ்வை அடைவதற்குத் தீவிரமாக எண்ணுவான். ஞானப்பாலை உண்பதற்கு மார்க்கங் கண்டுபிடிப்பான். மனைவி, புத்ரி இவர்கள்மீது கவனம் வைக்காமல் அயல்நாடு சென்றுவிடுவான். பெரிய சபைகளில் ஏறி சூக்ஷ்மமான ஞானவிஷயங்களைப் போதிப்பான். கலைஞான வுதாரனுயிருப்பான். எல்லோரும் போற்றுவார்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தான் சென்ற மார்க்கத்தில் திடமாயிருப்பான். இப்படியே குரு மஹாதிசையின் சந்திரபுத்தி பூரணமாகும். அப்போது வயது, உக வருஷம், க மாதம், உஉ நாள். ஆனந்தஹு மாசிமீ உகவ. இனிமேல்,

செவ்வாய்புத்தி.

இந்தச் செவ்வாய் லக்கினத்திற்கு லாபஸ்தானத்தில் இருந்தும், ரிஷப ராசியிலுள்ள குருவின் நோக்கம் பெற்றும், நான்கு பதினொன்று மடங்களின் ஸ்தானாதிபதியாயுமிருப்பதால், இந்தப் புத்தியில் இவன் ஞான வீட்டிற்குள் புகுந்து பார்ப்பான். உலக வீட்டிலும் புகுவான். எவர்கள் நோக்கமும் இசையாது. குடும்பத்தினின்று மீண்டுந் திரும்புவான். அசுத்த மாயையானது தன்னைத் தொடராத வகை செய்துகொள்வான். சுத்தமாயை மாத்திரம் தொடர்ந்து நிற்கும். அநேக ஜனங்களின் மத்தியில் நல்லவுபதேசத்தை அதிக கெம்பீரமாய் பயப்படாமல் போதிப்பான். பற்பல சபைகளுக்குச் சென்று வருவான். இந்தவாறுகக் குருமஹாதிசையின் செவ்வாய்புத்தி முடியும். அப்போது வயது, உஉ வருஷம், க மாதம், க நாள். இராக்ஷசஹு தைமீ உஎவ. இப்பால்,

இராகுபுத்தி.

இந்த இராகு திசாநாதனுக்கு லாப ஸ்தானத்திலிருப்பதாலும், இலக்கினத்திற்கு மூன்றாம் வீட்டிலிருப்பதாலும், சந்திரன் சுக்கிரனுடன் வாக்குஸ்தா

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hahiharan Collection, Sholinganallur, Chennai

னத்தில் நின்று, குரு ஐந்தில் வீற்றிருந்தபடியாலும், இவன் சொன்னசொல் தவறமாட்டான். எந்தக் காரியங்களையும் சோர்வுபடாமற் செய்வான். சிங்கம் போன்ற குணமுடையவன். குளிர்ந்த வசனங்களையே பேசுவான். முதலில் நிந்தித்த பேர்களும் சரியென்று அங்கீகரிக்குமாறு ஆத்மஞானோபதேசஞ் செய்வான். சுருதி, யுக்தி, அனுபவம் இவைகளை மாற்றி அனுபவிப்பான். இந்தவிதமாகக் குரு மஹாதிசையின் இராகுபுத்தி முடிவடையும். அப்போது வயது, உ௬ வருஷம், ரு மாதம், உஉ நாள். காளயுக்திஹூ, ஆனிமீ, உகஉ. இத்துடன் குருமஹாதிசை சம்பூர்ணம்.

சனி மஹாதிசையில் சனிபுத்தி.

இந்தச் சனி சுக்கிரனுடைய வீட்டில் உச்சஸ்தானமேறி யிருப்பதாலும், அந்தச் சுக்கிரன் சந்திரனோடு இரண்டாமிடத்திலிருப்பதாலும், சனிக்கு வேறு ஒருவருடைய நோக்கமும் இல்லாதிருப்பதாலும், இந்த திசையில் ராஜாங்கபோகம் அனுபவிப்பான்.

சனி சித்திரம்.

இதில் எல்லாத் தேசங்களுக்கும் போய்வருவான். பராசக்தியின் அருள்வந்து பொருந்தும். தேசசஞ்சாரத்தோடு கூடவே பல சாஸ்திரங்களையும் பாஷைகளையும் ஆராய்ச்சி செய்வான். சொந்த ஞானானுபவத்திற் செல்வான். கடல் கடந்து அப்பாற்சென்று

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வெகு சாமர்த்தியமாய்க் கெட்டமதங்களைக் கண்டிப்பான். எதிர்த்துக் கேட்பவர்கள் தியங்கும்படி பேசி வெற்றிபெறுவான். இவ்விதமாகச் சனி திசையின் சனியினது புத்தியில் சனியினது சித்திரம் முடிவடையும்.

புதன் சித்திரம்.

நூதனமான சாஸ்திரங்கள் செய்து உலகத்தாருக்குக் கொடுப்பான். பல தேசஞ்சென்று வசப்படாதவர்களைக்கண்டு பேசி வணங்கும்படி செய்துவிடுவான். அரசாங்கத்தாருடைய கோபம்வந்து அதிகரிக்கும். ஆனால் சிறைப்படுத்த முடியாது. கெட்டவசனங்களைப் பேசவும் நினைக்கவும் மாட்டான். இதோடு புதன் சித்திரம் முடியும்.

கேது சித்திரம்.

இதில் உலகத்தாரை விட்டுவிலக எண்ணுவான். ஜனங்கள் கூட்டங்கூட்டமாகச் சேருவார்கள். பிராணவாயுவைப் பந்தித்து, ஆத்ம தரிசனம் செய்ய ஆரம்பிப்பான். உடம்பு பாரமாகத் தோற்றும். பிறவி நோயைத் தொலைப்பதற்கான மார்க்கங்களைக் கண்டுபிடிப்பான். சந்திரநாடியைக் குறைத்துச் சுருக்கிச் சூரியநாடியில் சேர்த்துச் சுழுமுனை தெரிசனஞ் செய்வான். இவ்வாறு கேதுவின் சித்திரம் போய் விடும்.

சுக்கிர சித்திரம்.

இதில் தம்மைப்பற்றி யிருக்கும் வினைகள் எங்கிருந்து வந்ததென்று பார்ப்பான். சித்தாதிகள் மார்க்-

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மான சில ஔஷதங்கள் செய்வான். ஜோதிடநூற்கள் கற்பான். இந்தவிதமாகச் சுக்கிர சித்திரம் போய்விடும்.

சூரிய சித்திரம், சந்திர செவ்வாய் சித்திரம்.

இதில் பிழையான வார்த்தைகள் பேசமாட்டான். பெண் சர்ப்பமானது இனிமேல் இவனைத் தீண்டமாட்டாது. அறுசுவை உண்டியில் வெறுப்பாகவேயிருக்கும். அழகிய சகடைகளில் ஏறிச்செல்வான் தேகவெப்பம் உண்டாகும். சுற்றங்களும் செல்வமும் ஆஸ்தியல்ல, தெய்வமும் வேதமுமே எனது ஆஸ்தியென்று, உறுதிகொண்டாடிப் பேசுவான். எல்லா மதங்களும் ஒன்றென்ற எண்ணமுடையவன். சூரியன், சந்திரன், மேகம் இவைகளை அந்தரங்கத்தில் கண்டு பேசுவான். இவ்விதமாகச் சூரிய சந்திர செவ்வாய் சித்திரங்கள் போய்விடும்.

இராகு சித்திரம்.

இதில் அரசாங்கத்தாரால் பாதுகாக்கப்படுவான். பலதேச சஞ்சாரஞ்செய்வான். வாடியபயிர்களுக்கு மழை பெய்வதுபோலப் பல ஜனங்களின் மத்தியில் உபந்யாஸம் செய்வான். இவ்விதமாக இராகு சித்திரம் போய்விடும்.

குரு சித்திரம்.

இதில் பல பெரிய கூட்டங்களின் மத்தியில் மீறிப் பேசுவான். பல சாஸ்திரங்கள் செய்வான். பல

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பேர்கள் வணங்கிச் செல்வார்கள். சத்தியமாகப் பேசுவான். சங்கீதவித்தை கற்பான். மோக்ஷ வீட்டின் படிகளைத் தெரிந்து எட்டப்பார்ப்பான். ஆனால் இப்போது முழுமையும் பூர்த்தியாகமாட்டாது. இந்தமுயற்சி பின்னால் பலிதமாகும். உடனே அடைகிற எண்ணம் உதிக்கும். இப்படிக் கூறும் போது, விஸ்வாமித்திரர் புஜூண்டரை நோக்கி இவன் மோக்ஷமுயற்சி எப்போது பலிதமாகும். எப்போது இவனது பெருந்தவம் முடிவுபெறும் என்று கேட்க, ஹே கோசிகா! புதன்புத்தி காலங்களில் சீரானசாதனையாய் மெல்ல மெல்ல நிருவிகற்பசமாதி பலிதமாகும். கேதுபுத்தியில் ஜீவன் முக்தி நிலைமையை அடைவான். நீ இதைப் பின்னாலே பார்த்துக்கொள்ளுவாய். இவ்விதமாகச் சனி மஹாதிசை யின் சனிபுத்தி போய்விடும். அப்போது வயது, உஎ வருஷம், ரு மாதம், உரு நாள். துன்மதிஹூ ஆனிமீ உசஉ. இனிமேல்,

புதன் புத்தி, புதன் சித்திரம்.

இந்தப்புதன் லக்கினத்திற்கு விரயமாய்ச் சூரியனோடு பொருந்தியிருக்கச் சனி பார்க்கவிருப்பதால், இதில் அநேகவிதமான சகடங்களில் நாநாவிதமான நாடுகளுக்குச்சென்று வருவான். நூதனமான கூட்டங்கள் வந்துசேரும். அதிகமான உலக சம்பத்துக்கள் வந்து பொருந்தும். உடனே செலவாகிவிடும். அன்னமும் வஸ்திரமும் மட்டுமே அங்கீகரிப்பான்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சொந்தக் காரியத்திலேயே மனத்தை நாட்டியிருப்பான். பலவித உலககாரியங்களிலும் மனது செல்லும். இவ்விதமாகப் புதன்புத்தியின் புதன்சித்திரம் முடியும். அப்பால்,

கேது சுக்கிர சித்திரங்கள்.

இதில் அனுபவ நூற்களியற்றி உலக ஜனங்களுக்குக் கொடுப்பான். பல சிஷ்யக் கூட்டங்களுக்கு ஞான சாஸ்திரபாடம் சொல்லுவான். சன்மார்க்க விரோதிகள் சமீபத்திலும் வரமாட்டார்கள். ஆத்ம விசாரணையிலும், நிருவிகற்ப சமாதியிலும் காலத்தைக் கழிப்பான். பல பெயர்கள் உருக்கமாக நெருங்கியிருப்பார்கள். இப்படியாக இந்தச் சித்திரங்கள் முடிய

சூரிய சந்திர செவ்வாய் சித்திரங்கள்.

இக்காலங்களில் பலவித தேசசஞ்சாரங்கள் செய்து கொண்டே உலகத்தார்களுக்கு உண்மை ஞானத்தைப் போதித்துக் கொண்டுவருவான். ஒருவரும் இவனுக்கு பகைவராக மாட்டார்கள். அரசாங்கத்தாரின் பாதுகாப்போடு உலகத்தில் உலாவுவான். இவ்விதமாக இந்தச் சித்திரங்கள்போக

ராகு சித்திரத்தில்.

யாதொருவித சந்தேகமும் அதைரியமுமில்லாமல் மலைகளிலேறி நிருவிகற்ப சமாதியிலிருப்பான். மீளவும் நாட்டிலே உலாவுவான். இவ்விதமாய் இந்தச் சித்திரம் போக

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

குரு சனி சித்திரங்களில்.

சரீரம் வெப்பமாயிருக்கும். அத்துடன் பல சஞ்சாரங்கள் செய்வான். இதின் முடிவில் பேரின்ப ரசத்தை ஜனங்களுக்குப் போதித்து வருவான். இத்துடன் சனிமஹா திசையின் புதன்புத்தி போய்விடும். அப்போது வயது, ௩௰ வருஷம், ௨ மாதம், ௪ நாள். ருத்ரோத்காரிஞு, பங்குனிமீ . ௩௨ இனிமேல்

கேது புத்தி.

இந்தக் கேது சனிக்குப் பன்னிரெண்டாமிடத்திலும் லக்கினத்திற்கு ஒன்பதாமிடத்திலும் வீற்றிருந்து, குரு, இராகு இவர்களின் பார்வைகளைப் பெற்றிருப்பதாலும், இந்தப் புத்தியில் உண்மை ஞானம் சமீபத்தில் நெருங்கிவரும். பல தேசசஞ்சாரம் செய்வான். மனமானது ஏகவஸ்துவினிடத்தில் அடங்கிவிடும். ஞானமிர்த சுபாவ கலாமிர்தக்கனி ரசத்தை உண்ண ஆரம்பிப்பான். பிரம்ம வித்தையை ஞான நிலத்திலே பதியும்படியாக வூன்றிச் சிவராஜாங்க யோக நீரைப்பாய்ச்சி ஜெகதீஸ்வரியாகிய உன்னைத் தெரிசித்து, ஸ்தோத்திரம் செய்து மாயையாகிய பக்ஷிகள் அணுகாதபடி ஸ்திரபுத்தியுடையவனாகி மனத்தால் வேலிகட்டி வெகு சூக்ஷுமமாக இந்தக் காரியத்தை முடித்துவிடுவான். யோக சம்பந்தமான சில நோய்கள் வந்து விலகும். மாதாவை நாடப்பட்ட பாலகனைப்போல இவன் பரமாத்மாவை நாடுவான். அதிவேகமாகப் பாய்கின்ற மனக்குரங்கைப் பிடித்துக் கட்டிவிடு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வான். எவரையும் லக்ஷியஞ்செய்யாமல் உலகத்தில் வசிப்பான். இவ்விதமாகச் சனிமஹா திசையின் கேது புத்தி முடியும். அப்போது வயது ௩௧ வரு ஷம், ௩ மாதம், ௧௩ நாள். குரோதனவூ சித் திரைமீ, ௧௨. இதனப்பால்

சுக்கிரபுத்தி சுக்கிரசித்திரம்.

இந்தச் சுக்கிரன் ஐந்து பத்தாமிடங்களுக்கு உடையவனுய்ச் சந்திரனுடன் தனஸ்தானத்திலேறியிருப்பதால், இவன் இதில் பாசத்தை விலக்கி ஜீவனுகிப்பதிவடிவமாகிப் பாழான குட்சிபாதையை நீக்கி ஒருபோது ஆகாரஞ்செய்துகொண்டு ஒன்றிலும் பற்றில்லாமல் பேச்சற்றுயோகாசனத்திலிருந்து மூல அக்கினியை எழுப்பிஎழுப்பி, ரேசக, பூரக, கும்பகாதிகள் செய்து, ஜடமென்றமேதரைஒட்டி விந்துவைக்கட்டி நாதத்தை மீறச்செய்து, ஒன்றிலுந் தாக்கற்றுத் தன்னேயறிந்து நிஷ்டையில் நிலேத்திருப்பான். இவ்விதமாக இந்தச் சித்திரம் போக

சூரிய சந்திர சேவ்வாய் சித்திரங்கள்வர

யாரும் வரமுடியாத தனிமையான இடத்தில் வாசஞ்செய்வான். அதிகமானபேச்சில்லாமல் மிதுதியான சுகத்திலிருப்பான். சிதாகாசதெரிசனம் செய்வான். பேரின்ப காயகர்ப்பத்தை உண்பான். இவ்விதமாக இம்மூன்று சித்திரங்கள் மாற

இராகுசித்திரம்வர

பூர்ணவஸ்துவைப் பிரத்யக்ஷமாகத் தெரிசிப்பான். முன்ஜென்மத்தில் தான் தேடிவைத்த, விட்டகுறை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பான ஞானப்புதையலின் காரணவஸ்துவைச் சாக்ஷி யோடு காக்ஷியாய்க் கண்டுபிடிப்பான். இது வேத சம் மதமானது. இவ்விதமாக இராகு சித்திரம் போகக்

குரு சனி சித்திரங்கள்வர

மாயையை மாரணம்பண்ணி, ஆனந்தம் பெருகும் படியான பிரமானந்த சமுத்திரத்தில் மூழ்கி, ஞான அரசன்போலாவான். உள்ளே யிருக்கப்பட்ட நயன மத்தியிலுள்ள சுழுமுனையின் சமீபத்தில், ஒரு சாகர மும், அசையும்படியான ஸ்வர்ணமண்டபமும் தோற் றும். அதில் குடியேறுவான். அதில் பாதொரு பய முமற்றுப் பார்க்கப்பார்க்க விநோதமும் ஆச்சர்யமு மான நர்த்தனங்களும் தோற்றும். அநேக சிஷ்யர் கள் கூடுவார்கள். யோக நித்திரையிலேயே இருப் பான். இவ்விதமாய்க் குருசனி சித்திரங்கள்போகப்

புதன் கேது சித்திரங்களில்

இவனது பிராணவாயு வெளியிற்செல்லாது. அந் தரங்கத்திலுள்ள தசவிதமான பூமிகளையும் தாண்டி விடுவான். அவ்விடத்தில் விஷப்பைகளோடு கூடிய சர்ப்பம்போன்ற அல்குலையுடைய யோகமாதர்களின் கூட்டம் காணப்படும். அவர்களையும் அகற்றிவிட்டு அப்பாற் சென்றுவிடுவான். இந்த மாதிரியாகச் சனிமஹாதிசையின் சுக்கிர புத்தி முடிந்துபோய் விடும். அப்போது வயது, ௬௪ வருஷம், ௫ மாதம், ௧௩ நாள். விபவஹு ஆனிமீ ௧௨௨. இனிமேல்,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சூரிய புத்தி.

இந்தப்புத்தியில் ஒருதினத்திற் கொருபோதுண்பான். சந்திரகலையைக் குறைத்துச் சூரியகலையிற் சேர்த்து அதையும் விழுங்கிவிடுவான். உலக முழுமையும் பிரயாணம் செய்வான். கோடி ஜனங்கள் வணங்கிக்கொண்டு பின்னே செல்வார்கள். வெளிக்குவராமல் அடங்கியிருந்த பல சாஸ்திரங்களையும் ஆராய்ந்து எடுத்து அதுமுழுமையும் யாதொரு குற்றமுமில்லாமல் எழுதி உலக உபகாரமாக ஜனங்களுக்குக்கொடுப்பான். இப்படியாகச் சனிமஹாதிசையின் சூரியபுத்தி முடியும். அப்போது வயது, ௩௫ வருஷம், ௪ மாதம், ௨௫ நாள். சுக்கிலஹூ, வைகாசிமீ, ௨௪௨. இனிமேல்,

சந்திரபுத்தி.

இந்தச்சந்திரன் தனஸ்தானத்தில் சுக்கிரனோடு வசித்து சனிக்கு ஐந்தாமிடத்தில் பொருந்தியிருப்பதாலும், செவ்வாய் பார்ப்பதாலும், இந்தப்புத்தியில் உலகத்தார் கண்ணுக்குத் தோற்றமாட்டான். யாரும் வரமுடியாத மலை, காடு, குகை இவைகளிலேயே வசிப்பான். இவனது ஞானபக்குவம் இந்தப் புத்தியில் முற்றிவிடும் என்று காகபுஜண்டர் கூற, விஸ்வாமித்திரர், மாதவமுனிசிரேஷ்டரே! இப்படித் தனது அந்தரங்க அனுபவமாகவே வயது முழுவதும் சென்றுவிட்டால் பூலோகத்தாருக்கு அதனாலென்னலாபம். அதன் நிச்சயத்தைக் கூறவேண்டு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மென்றுகேட்க ஹே, கௌசிகா! இன்னவனுக்கு நான்முகப்பிரமன் நியதிவகுக்குங்காலத்தில் எவ்விதமாக வகுத்தானே அவ்வாறேதான் நடக்கும். அதைப் பற்றி நாம் பேசி என்ன பிரயோஜனம். அதிகமான வுணவு உண்ணமாட்டான். ஞான காயத்தைத் ததாகாயமாக்கிடுவான். செய்யவேண்டிய வேலைகளைச்செய்து முடிப்பான். பிராணசலனத்தை நிறுத்தி அதை அடைக்கிவிடுவான். இவ்விதமான செய்கைகளுடனேயே சனிபஹாதிசையின் சந்திரபுத்தி முடியும். அப்போது வயது, ௩௯ வருஷம், ௧௧ மாதம், ௨௫ நாள். பிரமோதூதாஸு, மார்கழிமீ, ௨௪௨, இனிமேல்,

செவ்வாய் புத்தி.

இந்தப் புத்தியில் உண்மை ஞானம் பிரகாசிக்கும். பூரண யோகவீட்டின் மார்க்கத்தைச் சுத்தஞ் செய்து ரஸ்தாவாக்கி அதன்வழியே சென்று இடையிலுண்டாகக் கூடிய தடைகளை ஜெயித்துவிட்டு எதார்த்த தீபவொளியைப் பார்த்துக்கொண்டே வேதங்களுக்கு எட்டாத உபசாந்த நிலைமையான இடத்தை நோக்கிப் போய்க்கொண்டிருப்பான். சரீரபானது தங்கமயமாய்விடும். ஜனங்களின் கூட்டங்களைவிட்டு விலகி ஞானேந்திரத்தின் தடாகத்தில் ஜலத்திற்குள் மூழ்கி வெளிவராமற் சிலநாளிருப்பான். இவ்விதமாகச் சனி பஹாதிசையின் செவ்வாய்புத்தி முடியும். அப்போது வயது, ௩௮ வருஷம், ௧ மாதம், ௪ நாள். பிரஜோர்ப்பத்திஸு, மாசிமீ, ௩௨. இனிமேல்,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இராகு புத்தி.

இராகு சித்திரம்.

இந்த இராகு மீனராசியில் திசாநாதனுக்கு ஆறு மிடத்திலிருப்பதால், இந்தப் புத்தியில் ஆகாய கமன சித்தி உண்டாகும். உலகத்தார்களுக்கு எட்டாதவான் குதிரையின்மீது போக்கு வரத்தாயிருப்பான். இவ்வாறு இராகு சித்திரம் போகக்

குரு சனி சித்திரம் வர

பேச்சற்றுக் கொஞ்சமேனு முணவில்லாமல் மத்திய கதஸ்தானமாகிய மேடையை வாழ்விடமாக்கி அதிற் சயனித்துக்கொண்டு, ஆங்குள்ள இன்பத்தை அனுபவித்துக்கொண்டிருப்பான். இவ்வாறு இந்தச் சித்திரங்கள் விலகப்

புதன் கேது சித்திரம் வர

அசையாத நிஷ்டையிலிருப்பான். சரீரமானது பூமியில் வீழாத வகையாய் அழியாமற் செய்துவிடுவான். ஊணும் உறக்கமும் அற்றிருப்பான். வெட்ட வெளியில் பட்டப்பகலாய்த் தன்னை அறிவான். வேற்றூர்கள் காணமாட்டாத மயமாய் விடுவான். உலகத்தில் இதொரு ஆச்சரியமாகத் தோற்றும். இப்படியாய் இந்தச் சித்திரங்கள் போகச்

சுக்கிர, சூரிய, சந்திர, செவ்வாய் சித்திரங்களில்.

யாவரும் காணமுடியாத பேரின்பப் புதையலைக் கண்டு ஆனந்தித்திருப்பான். அழிந்துவிடாத ஜோதிப்பிரகாசமான தீபத்தின் மத்தியில் அமர்ந்துவிடு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வான். சுவர்க்கத்திற்கு நேராகச்சென்று வருவான் இவ்விதமாக இந்தச் சித்திரங்களோடு சனிமஹா திசையின் இராகு புத்தி முடியும். அப்போது வயது, சமி வருஷம், கக மாதம், மி நாள். பவஹூ, மார்கழிமீ, அவ. இப்பால்,

குரு புத்தி. குரு சனி சித்திரங்கள்.

இந்தக் குரு திசாநாதனுக்கு எட்டிலும் இலக்கினத்திற்கு ஐந்திலுமிருந்து செவ்வாய் பார்வையும் பெற்று, மூன்று பனிரெண்டு மடங்களுக்கு உடையவனுக யிருப்பதால், இந்தப்புத்தியில் நல்லது கெட்டது என்ற ஞாபகமில்லாமல் நிஷ்டையிலிருப்பான். பேச்சற்று ஆண்டவனது ஜோதியில் கலந்துவிடுவதற்கான மார்க்கங்களைச் செய்வான். சகல இந்திரியங்களையும் கபாடம்செய்து அகங்காரத்தை விலக்கி, இரவு பகல் இல்லாத இடத்தில் இருப்பான். இப்படியாக இந்தச் சித்திரங்கள் செல்லப்

புதன், கேது, சுக்கிர, சித்திரங்களில்

இச்சையின்றி ஆகாயவீதியிற் சஞ்சரிப்பான். பூமிக்கும் வருவான். அதற்குமேல் யாதொருவிவகாரமும் இருக்கமாட்டாது. விஸ்வாமித்திரா! இதற்குமுன் ஒருபலன்கூற மறந்துவிட்டேன். இந்தச் சனிதிசை சூரியபுத்தியில் பிதாவினது மரணச் செய்தியைக் காதில் கேழ்ப்பான். உடனே மனம் அயர்வுகொண்டு அப்போதே மாறிவிடும். இவ்வாறு இந்தச் சித்திரங்கள் போய்விடச்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சூரிய, சந்திர, செவ்வாய், இராகு சித்திரங்களில்

தானே தானான நிலைமையிலிருப்பான். உலக காரியங்களை ஒழித்துவிடுவான். பிரபஞ்சத்தார்கள் இவனைக்கண்டு பேசமுடியாத நிலைமையில் இருந்துவிடுவான். இவ்விதமாகவே குருபுத்தியுடன் சனிமஹா திசை முடிந்துவிடும். அப்போது வயது, சாரு வருஷம், ரு மாதம், உஉ நாள், ஈஸ்வரஞு, ஆனிமீ, உகவ. இதனப்பால்.

புதன் மஹாதிசையின், புதன் புத்தி. புதன் கேது சித்திரங்கள்.

இந்தப் புதன் இலக்கினத்திற்கு மோக்ஷஸ்தானத்தில் சூரியனோடு வீற்றிருந்து சனிபார்வை பெற்றிருப்பதால், இந்த திசையில் சகல காரியங்களும் சித்தியாகும். இந்தச் சித்திர காலங்களில் நிர்மானுஷ்யமான வனாந்தரத்தில் ஓராற்றின் சமீபத்தில் சாஸ்திரசம்மதமான விஸ்தாரமாகிய ஆஸ்ரமம் கட்டி முடிப்பான். முன்ஜென்மத்தில் தான் தேடிவைத்த ஞானப்பொருளை அதன்மார்க்கமறிந்து எடுத்துவிடுவான். உள்ளங்கை நெல்லிக்கனிபோல ஞானானந்த சமுத்திரத்தில் மூழ்கிவிடுவான். இவனுடைய நிலைமையைக்கண்டு, எமன் பயப்படுவான். அரசர்கள் அஞ்சுவார்கள். காமனும் பயமடையும். கலியனும் அஞ்சுவான். இந்தவிதமாக இந்தச் சித்திரங்கள் போய்விடச்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சுக்கிர, சூரிய, சந்திர, சித்திரங்கள்.

இதில் யாதொருவிதமான ஆகாரங்களையும் உண்ணமாட்டான். புலன்கள், குறிகள், மற்ற தத்துவங்கள் இவற்றிற் சம்பந்தப்படமாட்டான். உலகஞாபகமற்றிருப்பான். இவைகளிவ்வாறுபோகச்

சேவ்வாய், இராகு, சித்திரங்களில்

அசையாத நிஷ்டையிலிருப்பான். பூமிக்குள் குகை உண்டாக்கி, அதில் வசித்துச் சரீரத்தைத் தங்கமயமாக்கிச் சகல மலக்குற்றங்களையும் அறுத்துத் தான் முன்னிருந்த வழியிலேயே திருஷ்டியை வைத்துக்கொண்டிருப்பான். எழுச்சியிலாத மஹாமௌனத்திலிருப்பான். இப்படியே இந்தச் சித்திரங்கள் போய்விடக்

குரு, சனி, சித்திரங்களில்.

பரகாயப் பிரவேசஞ் செய்வான். மீண்டும் திரும்பி வருவான். எல்லாந் தானாகிய அனுபவத்திலிருப்பான். உயர்ந்த சர்ப்பம்போலப் பதுங்கி, யோகப் பாய்ச்சலிலேயே யிருப்பான். உலக ஜனங்கள் பல் ரூபமாக இவனொருவனையே காணுவார்கள். பெரிய ஆச்சரியமாக உலகத்தார் கருதுவார்கள். இவ்விதமாகப் புதன் திசையின் புலவன் புத்தி முடியும். அப்போது வயது, சரு வருஷம், ய மாதம், கக நாள். பிரமாதிஹூ, கார்த்திகைமீ, யஅஉ. இனிமேல்

கேது புத்தி.

இதில் நிலவரையிலேயே யிருப்பான். ஏகதேசமாக நினைத்தால் வெளியில்வருவான். முத்தர்களும்,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சித்தர்களும், உதவிசெய்வார்கள். அதிக பேச்சில்லாமல் நிஷ்டையிலேயிருப்பான். இவ்வாறு புதன் திசையின் கேது புத்தி பூரணமாகும். அப்போது வயது, ௬௬ வருஷம், ௰ மாதம், ௧௬ நாள்.
விக்கிரமஹு, கார்த்திகைமீ, ௧௫௨.

சுக்கிரபுத்தி, சுக்கிரசித்திரம்.

இந்தச் சுக்கிரன் சந்திரனோடு, இரண்டாமிடத்திலிருக்க அவனைச் செவ்வாய் பார்க்கப் புதனுக்கு மூன்றாமிடத்திலிருப்பதாலும், அந்தக் காலத்தில் இவனை ஒருவரும் காணமுடியாது. அதற்கப்பால் உலகத்தில் வந்து உலாவுவான். இது ஒரு ஆச்சர்யமாகயிருக்கும. இப்படி இந்தச் சித்திரம் முடியும். அப்பால்,

சூரிய, சந்திர, செவ்வாய், சித்திரங்களில்

மஹாமௌனத்திலிருப்பான். உணவற்றிருப்பான். சோழமண்டலத்தில் கந்தன் என்ற நாமத்தோடு கூடிய ஒருவன் பெரிய சமாதி ஆலயம் கட்டிமுடிப்பான். அவனும் இவனோடேயே பொருந்தியிருப்பான். இவ்வாறு இந்தச் சித்திரங்கள் போக

இராகு குரு சித்திரங்களில்

அசையாத நிஷ்டையிலிருப்பான். யாதொரு தாழ்வும் வரமாட்டாது. உலகத்தைக் கண்ணால் பார்க்கவேமாட்டான். எண்ணவுமாட்டான். உண்ணவு மாட்டான். சித்தி முத்திகளைப் பெறுவான்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இது சத்தியமென்று நம்புவாய். இவ்வாறு இந்தச் சித்திரங்கள் போகச்,

சனி, புதன், கேது, சித்திரங்களில்

சகஸ நிஷ்டையிலிருப்பான். உலகத்திலுலாவுவான். அப்போது தரிசித்தவர்களுக்குப் பெரிய பிரயோஜனத்தை உண்டாக்கும். ஜென்மாந்தர கருமத்தைப் போக்கிவிடும். இவ்விதமான ஆச்சரியத்தை உலகத்தார் யாரிடத்தில் காணப்போகிறார்கள் என்று, காகபுஜண்டர் கூற, விஸ்வாமித்திரர் முதலிய மஹரிஷிகளும், பார்வதிதேவியும் வெகு சந்தோஷத்துடன் புஜண்டரை நோக்கி, இந்தப்பாலகன் புதன்திசை ராகுபுத்தி சேருகிற காலத்தில் இராஜ்ய பரிபாலனஞ்செய்து தீரவேண்டுமே. இராஜயோகம் அனுபவிக்கவேண்டுமே கிரகசார நிலைமையானது அவ்வாறிருக்கின்றது என்றுகூறக் காகபுஜண்டர், பராசக்தியே! இந்தப் புத்திரன் இராஜரீகஞ்செய்து தீரவேண்டுமென்கிற கிரகசார நிலைமையும் நீங்கள் சொல்வதும் சரியாகத்தானிருக்கிறது. ஆனால் நீங்களெல்லோரும இப்போதுகேட்டது புவிராஜயோகம். அந்தக்காலத்தில் நான் சொல்வதெல்லாம் சிவராஜயோகமாக முடியும். இவை இரண்டில் எது பெரிதென்று நீங்களே சொல்லுங்கள். மனுஷ்ய ஜென்மம் கிடைப்பதே அருமை. அப்படி கிடைத்துவிட்டால், தரித்திரம், ரோகம், அங்கயீனம் இவைகளில்லாமலிருப்பது துர்லபம். அதிலும், தவம், செல்வம்,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஞானம், கிடைப்பது அரிதினும் அரிது. அதில் எல்லா விஷயங்களும் அவர்களுடைய பூர்வ புண்ணியங்களுக்கேற்றபடி அடைவது சகசம். இதிலும், இராஜ யோகம், ஞானயோகம் இது இரண்டும் கிடைப்பது வெகு அருமை. அதில் இராஜயோகம் கிடைத்து விட்டால் கருமபந்த மேற்பட்டு விடும். அதனால் ஜென்மவிருத்தியாகும். அது கூடாது. இந்தப் பாலகனுக்கு ஞானயோகமே கிடைக்க வேண்டும். நீங்கள் கூறியபடி, இராஜ யோகமே வருமானால் இந்தபுண்ணியவானை முன்னாலே திருஞான சம்பந்தனைப் போல ஆவானென்று சொல்லியதற்கு மாறுபாடாகுமே. அப்படியல்ல, பிரபஞ்சத்திலே ஞானம் பரவிச்சமயங்கள் தழைத்தோங்குமாறு பஞ்சதேவர்கள், இந்திராதிதேவதைகள், சித்தர் முத்தர்கள் இவர்களின் ஆக்ஞைப்படிஉதித்த இவன் இராஜ யோகத்தை யடைந்துவிட்டால் ஜனங்கள் நாஸ்திக மதத்திலும் அன்னிய மதத்திலும் புகுந்து மதங்கள் தத்தளித்து சமயம் தலைகாட்டாது ஓடிஒளிக்க நேருமே. ஆனபடியாலும் குரு பஞ்சமத்திலேறி அசுர குரு வாக்கிலேறி, வாக்குஸ்தானாதிபதி உச்சமேறியிருக்க இவன் ஜனித்தவனானபடியால், உலகமயக்கமான இராஜயோகத்தை அனுபவிக்கமாட்டான். ஞானதவ ராஜாங்க யோகத்தையே அனுபவமாய்க் கொண்டு மதத்தை நிலைநாட்டிவிடுவான். இந்தவிதமாகப் புதன் திசையின் சுக்கிர புத்திமுடியும். அப்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

போது வயது, ௬௯ வருஷம், ௮ மாதம், ௧௬௨. சுபானுஹு, புரட்டாசிமீ, ௧௫௨. இனிமேல்

சூரியபுத்தி.

ஹே, ஜகதீஸ்வரீ, இனிமேல் இவனடையும் பலனை என்றுக்கூற முடியாது. ஊழி ஊழி காலம்கண்டு பரம்பொருளின் அனுபவத்தை அனுபவிக்கும்படியான மஹா சாதனையை அடைந்தபின் நானென்ன சாதகப் பலனைச் சொல்லமுடியும். ஆனபடியால் இவனது செய்திகளைச் சொல்வதற்கு என்னால் இயலாது. புதன் திசைமுடியும் மட்டும் சிலசெய்திகள் தோற்றப்படும். கேது திசையில் ஜோதி வடிவமான பரம்பொருளில் ஒன்றாகக் கலந்துவிடுவான். அதற்குமேல் யாதொரு பலனும் கிடையாது. சந்திரன் திரிகோணத்திற்கு வரவும், தெய்வகுரு ஸ்திர ராசிக்கு வரவும், சூரியன் லக்கினத்திற்குக் கேந்திரமாய்வந்து சேரவும், இம்மூன்றும் பொருந்திய நாளில் பரப்பிரஹ்ம ஜோதியில் ஒன்றாகக் கலந்துவிடுவான். இந்தப் புனிதனுக்கு மறுபிறப்பில்லை. இதே முடிவான ஜென்மமாகும்.

கருணையினால் உலகத்தை ஒருசங்கற்பமாத்திரத்தால் சிருஷ்டி செய்து காப்பாற்றுகின்ற பெருமை வாய்ந்த ஜெகத்காரணியே! பரிசுத்த யோக, ஞான, ராஜ, சிம்மாதனத்தில் எழுந்தருளி யிருக்கும் மனோன்மணியே!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஷோடசகலைகளையும் தாங்கிக்கொண்டிருக்கக்கூடிய சந்திரனையும், ஆகாய கெங்கையையும், அருகையும், ஜடாமகுடத்தில் தரித்துக்கொண்டிராநின்ற ஹே' பகவானே! பிரபஞ்சகாரண ஆதிபரமசிவமே!

சூரனென்னும் அசுரனோடு அவனது குலத்தை யும் அடியோடு நாசஞ்செய்துவிடும்படியாக அழகிய வேலாயுதத்தைப் பிரயோகித்த முருகபோதனனந்த குருவே!

இந்தப் பூமியில் இந்த ஞானப் புத்திரனுடைய செய்கை இதோடு பூர்ணமாய்விடுகின்றது.

இந்தவிதமாகக் காகபுஜண்ட மஹரிஷியானவர் சொல்லி முடித்தவும், ஈஸ்வரன், உமாதேவி, ஆறுமு கன், இன்னும் பல மஹரிஷிகள், விஸ்வாமித்திரர், எல்லோரும் அதிக ஆச்சரியங்கொண்டு சந்தோஷி த்து இவ்வுலகத்தில் இவன் கௌணியர் குலத்தில் உதித்த ஞானபாலகனைப்போல் உதையமாகி அன்னிய மத வைரியாகி, வைதீகமதத்தை நிலைநாட்டிவிடுவான். பரசமயங்களினிடமும், அன்பு பூண்டவனாவான்.

இந்த வுலகமும், சமுத்திரங்களும், சூர்யசந்திரர் களும், ஆகாயமும், வேதங்களும், மதங்களும், மற் றுள்ளவைகளெல்லாமும், வாழக் கடவதென்று ஆசீர்வதித்தார்கள். உடனே காகபுஜண்டர், விஸ் வாமித்திரர் முதலிய எல்லாமஹரிஷிகளும், பரம சிவன், ஆறுமுகன், உமாதேவீ, இம்மூவர்களிடமும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விடைபெற்றுக்கொண்டு அவரவர்கள் இருப்பிடத்திற்குச் சென்றுவிட்டார்கள்.

இவ்விதமாக இது முற்றுப்பெற்றது.

ஸ்வாமிகளைப்பற்றிப் பதினெண் புராணங்களுளொன்றான ஸ்காந்தத்தின் சனற்குமாரசம்ஹிதையில் முன்னூறு சம்ஸ்கிருதஸ்லோகத்திலிருப்பதை ஆராய்ந்துகொண்டிருக்கிறபடியால் கூடிய சீக்கிரம் வெளியில்வரும்.

பூர்ணமாகியது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

No
45

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0 In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy.